T. D. R. C.: 3728
R. R. No: [illegible]

Q23:38.K
N09
58623

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

REGISTERED ... MADRAS

# ஸ்ரீகாசி கேதாரமான்மியம்,

## ஸ்ரீகாசி மகாத்மியசங்கிரகம்.

இஃது

ஸ்ரீ காசிவாசி

வி. குமாரசாமி தம்பிரான் அவர்களால்

எழுதிமுடித்ததை

ஸ்ரீ காசியில்

பட்டு பீதாம்பர வர்த்தகம்

கெ. எஸ். முத்தையா அண்டு

கம்பெனியாரின்

வேண்டுகோளின்படி

சென்னை

ரெலிஜி அண்டு கம்பெனி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1909.

[விலை அணா 6.] [Price As. 6.]

**Under the distinguished patronage of**
**Her Excellency the Hon'ble Lady LAWLEY, Madras,**
**AND**
**His Holiness Sri Ambalavana Desikar Avergal,**
**Pandarasannidigal, Tiruvavaduthurai Mutt.**

SILVER MEDAL. SILVER MEDAL. SILVER MEDAL.



BENARES, 1906. NAGPUR EXHIBITION MADRAS, 1908.

நவீன நாகரீகத்தையும் சுதேசப் பட்டாடைகளையும் அணிந்து ஆனந்திக்க விரும்பும் கனதனவான்களே!

நம் இந்திய தேசத்தின் புராதன பட்டணமாயும், தீபச்சுடர்போன்று ஜொலித்து பிரகாசித்துக்கொண்டும், சகலவிதமான மதஸ்தர்களும் வந்து தரிசித்து ஆனந்திக்கும்படியாயிருக்கிற ஸ்ரீ காசிமாநகரத்தின்கண் 1902-ம் வருடம் முதல் எம்மால் ஸ்தாபித்து நடத்திவருகிற பட்டுவஸ்திர நெசவுசாலையிலிருந்து நவீனமுள்ள இங்கிலீஷ் கலர்களில் அழகான சரிகை வேலைகள் செய்வித்த புதுமாதிரியான ரவிக்கைத் துட்டைகள், தாவணிகள், பாவாடைகள், புடவைகள் நவீன நாகரீகத்துக் கேற்றதாயும், சொகுசாயும், அழகாகவும் இஷ்டப்படி தரித்துக் கொள்ளக்கூடியதும், பலமான கரைகளுள்ள வெள்ளை பட்டாடைகள் முதலிய சகலவிதமான பட்டு இனுசுகளும் தயார்செய்வித்து சொற்பலாபத்துக்கு விற்றுவருகிறோம். பலவிதமான இனுசுகளுக்கும் விபரமான ஜெனரல் கேட்லாக் (விலை ஜாபிதா) தமிழில் எங்களிடமுண்டு. விரும்பியவர்கள் எங்கள் விலாசத்துக்கு நேராக எழுதிக்கொண்டால் விலையின்றி அனுப்பப்படும்.

கெ. எஸ். முத்தையா அண்டு கம்பெனி,
பட்டு வர்த்தகம்,
**BENARES CITY.** ஸ்ரீ காசி.

# அட்டவணை.

MADRAS


| நெ. | கதையின் பெயர். | பக்கப் |
|---|---|---|
| 1 | பிரம்மா பூசித்தது ... ... | 10 |
| 2 | சந்திரவந்தன் தவஞ்செய்தது ... ... | 11 |
| 3 | அவன் பாவநீங்கியது ... ... | 12 |
| 4 | திருக்கைலாயச் சிறப்பு ... ... | 14 |
| 5 | பிரமாசூதைசனைக் கண்டது ... ... | 17 |
| 6 | பிரமாசூதைச் பாவநீங்கியதும் பிரமவிஷ்ணு பூசித்ததும் ... ... ... | 19 |
| 7 | பார்பதிக்கும் லட்சுமிக்கும் நடந்த சம்வாதம் | 21 |
| 8 | லட்சுமி முதலியோர் சாபமடைந்தது ... | 23 |
| 9 | மேற்கண்ட நால்வர் பாபநீங்கியது ... | 24 |
| 10 | சேஷமகவி செய்த சுலோகம் ... ... | 29 |
| 11 | கங்கை யமுனை வரலாறு ... ... | 30 |
| 12 | சரஸ்வதி வரலாறு ... ... | 34 |
| 13 | தேவஸ்திரீகள் தவஞ்செய்தது ... | 35 |
| 14 | கங்கை வரம்பெற்றது ... ... | 36 |
| 15 | காசிதீர்த்தங்களைக் கண்டது ... ... | 37 |
| 16 | திவோதாஸன் வரலாறு ... ... | 38 |
| 17 | மேனகை திருக்கைலைக்குச் சென்றது ... | 41 |
| 18 | அர்த்தன் பாபநீங்கியது ... ... | 42 |
| 19 | மாந்தாதா சரிதம் ... ... | 45 |
| 20 | மாந்தாதாவுக்கு வரமருளியது ... | 47 |
| 21 | கொடுத்த வரத்தைக் குறைத்தது ... | 48 |
| 22 | கேதாரமகாலிங்கத்தைப் பூசித்தோருடைய பலன் ... ... ... | 49 |
| 23 | சனற்குமாரருஷி கதை ... ... | 53 |
| 24 | வாமதேவருஷி கதை ... ... | 54 |
| 25, 26 | சந்திரவந்தன், நாதசர்மா, அனவதியா கதை | 56 |
| 27 | அன்னங்களுக்கு வரமருளியது ... | 58 |
| 28, 29 | காசித்தல மகிமை, ஸ்ரீ பத்ரிகேதார மகிமை | 59 |
| 30 | காசியைப் பற்றிய கதைகள் ... ... | 60 |
| 31 | பார்பதிதேவி வரலாறு ... ... | 65 |

ஓ23:38·K
No9
58623

# ஸ்ரீ காசி மகாத்மிய சங்கிரகம்.

## வாரணாசி (காசி).

### விருத்தம்.

காசிவிஸ்வேசர் கங்கைசாலாட்சி காரணியன்ன பூரணியா, மாசுதீர்கவுரி திருவிரேசோதக மணிகர்ணிகை பலதீர்த்த, மீசனித்தலத்தைச் சூலத்தின்முனையி லிருத்தலாற் றிரிகண்டகவி, ராசிதமிங்கே யிறந்தவர்பிறவா ரிதுமகாமயானமுமாமே. (1)

ஆநந்தவனமே பிரமஞாண்மக்தி யகத்தியர்முதற் பலமுனிவர், தானவன்றாரகன் துவாசதாதித்தர் தக்கனிந்திரன்றுருவாசன், வானவர்யமுனை சரஸ்பதிகங்கை வாரணாசி நவகிரகம், மேனகைதுருவன் கலாவதியநுமன் விஸ்வகர்மாவும் வீரேசன். (2)

கங்காளகேது தூர்த்தமன்கிளிகள் கருடன்யோகினி திக்குப்பாலர், பங்கமில்கயிலை வாழ்சிவகணங்கள் பார்பதிகணபதி தூர்த்தன், வங்கணஅரசன் திவோதனனிமவான் மாந்தாதாரிந்த ரம்பையர்கள், மங்கலச்சந்திர வந்தன்பாஸ்கலனும் வாமதேவ் சனற்குமரேசன். (3)

எல்லையிலாத தீர்த்தமுமிலிங்கக் குழிகளுமமைத் தருச்சித்துப், பல்வரம்பெற்றார் சிவசன்யாமாயாப் பதியிறந்தோனும் வைகுண்டன், செல்பவன்றேவர் சென்றெதிரேத்தச் சேர்ந்துபின் புவிமன்னுயுதிக்து, நல்சிவக்குழியுங் கூடமுமமைத்து நாட்டினன்விருத்த காளமேனே. (4)

இச்சிவதீர்த்தம் பருகியபல்லோ ரிலிங்கபூசனை யிறை
கன்மத், திசைசயிலுதித்த குட்டரோயொழிந்து மேருவா
வெள்ளியங்கிரிக்கே, நச்சியவல்லகை நனுகிமுற்றுஞ்ச. நல
திவ்வ விமலோக் தடநீர், பச்சிக்கத்தீர்ந்த பணைபரிபேய்கரளு
பலர்களுஞ் சுபமடைகுவரே. (5)

திவோதாசசெய்த நற்றவப்பேற்றா செய்தனனாசு பன
ளுங், கவலர்திப்பதியைத் தேவர்மூவர்களுங் காமெனு
வகைபுரந்திருப்பத், தவவலானவனைச் செய்வதென்னென்று
தானுபல்லோரை யேவியும்பின், சிவபதங்கேட்டப
கொடுத்திருக்கச் செய்தனன் வெள்ளிமால்வரைக்கே. (6)

மாயவனேற்ற தவத்தினுக்குகித்த மகேசுவரன் குண்
டலம்பார்விழ்ந், தேயவதீர்த்த மணிகர்ணிகையென் றேர
ருமொழிவ ரத்தீர்த்தந், தோய்ந்தரிக்கரசு வட்டிடப்பன்னருந்
துய்த்தன வரனிடப்பாகம், ஆய்ந்தவிவ்விலிங்க மித்தல
பெருமை யாவரும்புகலரி தம்மா. (7)

வேறு.

அரிகேசவன் னென்னொருவணிக னடுத்தகாருசிப் பதி
பிறந்து, துரியபதியை புட்கண்டு தொல்லைவிடுத்துக் காசி
சென்று, பெரியகூப மொன்றுகல்லிப் பிறைசூடியைப் பூசித்
திருப்ப, கரியகண்டன் அகமகிழ்ந்து காட்சிகொடுத்து மெய்
தடவி. (8)

காசிப்பதியி லிறந்தவரைக் கணங்கள்கொடுபோய் திரு
முடிமேல், பாசமகலச் சிவதன்னைப் பதித்துஉருத்திர வடி
வியந்து, ஈசன்கயிலைக் கனுப்பிவரு மெய்மான்தண்டு பாணி
செய்த, மாசுதீர்க்குஞ் சிவக்குறியின் மகிமையெவர்க்கு மார
பரிதே. (9)



வேறு.

வயிரவன்றவத்தாற் காசியிலிறந்தோர் வன்பவத்தினுக்
குத் தணடித்துக், கயிலையில்வாழுங் கதியளிக்கின்றான் கார்
விந்தங் குறுமுனிகுட்டப், பயில்புவிசேர்ந்து துதித்திடஅழகு
பணியதாய்க் காசியில்வதியும், அயிந்துகங்கையிற் றேளமதி
யில்மூழ்கு வரோயாகுவர் விந்தமாதவப்பேர். (10)

உமையரன்விழியை யொற்றியவிரலி லொருதுளிகங்கை
விண்முதலா, பமைவுறுதேக வோலமிட்டவர்க்கா யரன்றிருச்
சடைமிசையடக்கித், தமைபுணர்பகிர தன்பொருட்டளிப்
பத் தவமுனிபருகிப் பின்விடுத்து, எமையருள்கங்கை குற்ற
மதகல வேதத்தினள் சிவக்குறியமைத்தே. (11)

பானுவின்புதல்வி யமுனைகோபாலன் *பரிநயஞ்செய்திட
நதியா, நீணிலத்தமர்ந்த வாணியும்பிரம னேடியிங்குற்றனர்
தவத்தால், மானிலமனுக்கள் பவப்பிணியொழிக்க வரம்பெற்
றுவந்தனரதனால், ஞானமதகற்றி மூவுலகவாக்கு முரிமையுற
றிடு கங்காநதியே. (12)

வியாசரிங்குற்றுப் பரம்பொருள்மாலென் றுரைத்தகை
நாவெழாதொழிந்தும், புயமற்றுநின்று தொழுதமைக்கா
கப் புரிந்தனை ருள்பினுங்காசிக், கயனகிருப்ப வத்தல
மிறந்தோ ராகுவர் காத்தபமென்றான், தயவுபெற்றிங்குத்
தினம்வசித்தேகச் சாறினன் அருளுடைப்பகவன். (13)

காசியிலிறந்தோர் பிறவிபையொழித்துக் கைலையை
யடைவர் பல்லாண்டிங், கீசனைப்பூசித் தேகியேமறித்தோ ரினு
மொருஜன்ம மியெடுத்து, வாசவன்பதமும் வெறுத்துப்
பூசித்து மலர்ப்பதம்பெறுவர் அங்கத்தைப், பூசித்துக்கங்கை
வீசிடிலரம்பா போகந்துய்த்தமைவர் பூவுலகே. (14)

* பரிநயம் — விபாகம்.

மாந்தாதாவென்போன் மலையினிற்றவஞ்செய் மகிமை தேர்ந்திறை யங்குதோன்றி, பாந்தமாய்வாரணாசி யினேற்றல் பண்பெனவுரைத்தல்பொற்காசி, சேர்ந்தமைத்தன்னமிலிங்க மாயிருக்கச் செய்தகேதார லிங்கத்தைச், சார்ந்திறந்தவரை வயிரவனணுகான் தாரகமுபாபதி யருளும். (15)

வேணபேரிங்கே வியந்திருந்திரைஞ்சி மிகுசிவ *தண்ட முமேனை, நானிலப்பேரும் பெற்றனரெவரே நவிலுவர்காசி மான்மியத்தைக், காணரிதாயவித்தலந்தொழுது கயிலைக்குச் செல்லும் நாவரசர், பாணித்தபதிக மறைந்தனஇறைவனை பஷித்தபதிகத்தை யொத்தே. (16)

வேறு.

மெல்லியல்பங்கனு வந்துறைகாசியை விட்டேனைத், தொல்லைநெடும்பதி தன்னைவிரும்புதல் சூழுங்கானல், லுயிர் தந்தன தங்கையிருப்பவும் நச்சாமற், புல்லறிவோடு புறங் கையைநக்குதல் போலாமால். (17)

---

## இக்கவிகளின் பொருள் : காசி நலமகிமை.

விசுவநாதேச்சுரர், விசாலாட்சியம்மை, அன்னபூரணி யம்மை, கங்காதேவி மணிகர்ணிகை முதலிய அறுபத்து நான்கு கட்டதீர்த்தங்கள், கௌரிகுண்டு, லட்சுமிகுண்டு, அம்சதீர்த்தம், மதுதீர்த்தம், ரேதோதகதீர்த்த முதலிய பல தீர்த்தங்கள், ஆனந்தவனம், திரிகண்டகவிராசிதம், அகஸ்தியர், தூர்வாசர் முதலிய பல ருஷிகள், ஆதித்தர் பன்னிருவர், சந்திரன், இந்திரன் முதலிய திக்குப்பாலகர், ஏழு கிரகங்கள், துருவன், கங்கை, வாரணை, அசி, கலாவதி, யோகினிகள், கரு-

*தண்டம்=அபராதம்.



டன், சிவகணங்கள், கணபதி, தாரகனெனு மசுரன்கிளிகள், தூர்த்தமன், கங்காளகேது வீரேசன், விசுவகர்மா, தக்கன், அநுமன் முதலியோர் கங்கைபடிந்துந், தனித்தனி லிங்கமமைத்துந், தீர்த்தங்கள்கண்டும் பூசித்துமிட்டசித்திகளைப் பெற்றனர்.

ஓங்காரேஸ்வரர், திரிலோசனேஸ்வரர், ஆதிமகாதேவர், கிர்த்திவாசேஸ்வரர், இரத்நேசுவரர், சந்திரேஸ்வரர், கேதாரேஸ்வரர், வீரேஸ்வரர், தர்மேஸ்வரர், காமேஸ்வரர், விஸ்வகர்மேஸ்வரர், மணிகர்ணிகேஸ்வரர், அவிமுக்தேஸ்வரர், விஸ்வேஸ்வரர், அமிர்தேஸ்வரர், தாரகேஸ்வரர். ஞானேஸ்வரர், கருணேஸ்வரர், மோக்ஷத்துவாரேஸ்வரர், சுவர்க்கத்துவாரேஸ்வரர், பிரமேஸ்வரர், லாங்குலீஸ்வரர், விருத்தகாலேஸ்வரர், சண்டேஸ்வரர், விருஷேஸ்வரர், நந்திகேஸ்வரர், மகேஸ்வரர், சோதிரூபேஸ்வரர், சைலேஸ்வரர், சங்கமேஸ்வரர், ஸ்வரலீனேஸ்வரர், மத்தமேஸ்வரர், இரண்யகர்ப்பேஸ்வரர், ஈசானேஸ்வரர், கோட்பிரக்ஷேஸ்வரர், ரிஷபத்துவஜேஸ்வரர், உபசாந்தசிவாயேஸ்வரர், ஜயேஸ்டேஸ்வரர், நிவாசேஸ்வரர், சுக்கிரேஸ்வரர், வியாக்கிரேஸ்வரர், சம்புகேஸ்வரர் முதலான பேர்களுக்குத் தனித்தனி கதைகளிருப்பதால் அதை விரிவஞ்சி விடுத்தனம்.

சிவசன்மா வென்பவர் பல பாவங்கள்புரிந்து மிறுதியிற் சப்தபுரி தரிசித்து மாயாவாகிய ஹரித்துவாரத்திலிறந்து பல தேவர்களைக்கடந்து வைகுண்டமடைந்தும் பின் விசுவேசரைத் துதித்ததினால் விருத்தகாள அரசனாகப் பிறந்திருக்குங்கால் விரக்தியுண்டாகி, இம்முத்திநகராகிய காசியடைந்து, விருத்தகாளத்தீர்த்தமு மகாலிங்கமு மமைத்துப் பூசித்து முத்திபெற்றதுந் தவிர, அந்தத் தீர்த்தத்திலின்றுங் குஷ்டரோக முதலிய வியாதிஸ்தர்கள் மூன்று மாதம் ஸ்நானம், பூசையினு னீங்குவது பிரத்தியக்ஷம்.

திருமால் தவஞ்செய்ததற் கிரங்கிவந்த சிவபிரான் றிருக்காதுகுண்டல மிலத்தினழுவ் அதுவே மணிகர்ணி கையாயது. அதிற்றோய்ந்தோரடையும் பலனுக்களவில்லை. சக்கரத்தாலுண்டாகியது சக்கர தீர்த்தமாயது. அதின் மூழ் கிய திருமாலுக்கு இடப்பாகமும் முடியுஞ் சூட்டி வேண்டிய வரமும் பெற்றனர்.

பிரமா பலவேள்விபுரிந்து அபிமுக்தேசரென லிங்கமு ம்மைத்துப் பூசித்து இட்டசித்திகளைப் பெற்றனர்.

ஓர் பிராமணப்பேய் பூர்வபுண்ணியத்தால் ஒருவனைப் பிடித்திங்குற்றுச் சிவசிவாவென்ற த்வனிகேட்டுப் பவப் பிணி நீங்கிக் கவத்தியெனுங் கணநாதர் செய்த விமலோதக வாவிதோய்ந்து கவத்தீசலிங்கர் தரிசன பூசைசெய்ததால் அலகையுரு நீங்கி சிவலோகஞ் சேர்ந்தன. இன்று மித் தடத்தில் மூழ்கிப் பூசித்தால் பேய்ப்பிடி நீங்கிச் சிவகிருபை யுண்டாகும்.

தண்டபாணி அரிகேசனென்பவன் சிவநேசம் பெருகித் தன்றொழில் மறந்தமைக்காகத் தாதை கண்டிப்ப காசியே கதியென வந்து ஓர் வாவியும் இலிங்கமு மமைத்துப் பூசிப்ப, சிவபிரான் பிரத்தியக்ஷமாய் தண்டாயுதமொன்று கைக்கொடுத்து காசியிலிறந்த புண்ணியர்களுக்கு காள கண்டமுதலிய வுருத்திரவடிவமளிக்கும்படி கட்டளை தந்த னர். இன்னு மித்தடமு மிலிங்கமும் எப்பொழுதுஞ் சிறப் பெய்துக வென வரமருளியபடி யின்று முத்திக்கப்பனுக்கு யிங்கிறந்தோரைக் கரையேற்றி யமர்ந்திருக்கின்றனர்.

வயிரவன் பிரம விஷ்ட்ணுக்க ளகங்காரத்தா னென் பெரியரென முறன்றிய விடரகல ருத்திரமூர்த்தியிடந் தோன்றிய வைரவரிடக்கை நகத்தாற் பிரமாவினுச்சிரங் கிள்ள திருமாலும் வணங்கினர். அப்பிழைநீங்க வைரவ ரித்தலத்துற்று தீர்த்தமுங்கண்டு பூசிப்ப, அவருக்குக் காசி



யிலிறந்தோர் பாவங்களுக்குத் தக்கவாறு தண்டித்து சிவ பதத்துக் கனுப்ப வனுக்கிரகித்தபடி யிருந்து காவல்புரியுந் தலம்.

விந்துமாதவன் அக்கினிவிந்துவெனும் பிராமணன் திருமாலைப் பூசித்திருப்ப அவருக்கு விந்து மாதவரெனப் பெயருங் கொடுத்து, அந்தக் கட்டத்திற் கார்த்திகை மாதந் துலாலக்கினத்தில் மூழ்கி விரதஞ்செய்து பூசித்தவர்கட்கு இஷ்டகாமியார்த்தங் கொடுப்பதாய் திருமாலமர்ந்தனர்.

விந்த பருப்பதம் கருவங்கொண்டு சூரிய சந்திரன் முதலிய தேவர்களை வழிமறைத்திருப்ப, அகஸ்திய ருஷி யழுத்தியிருந்த விடந்தெரியாது செய்தமையால் அந்தப் பருப்பத புருஷன் பூசித்து தன்றால் காசிநகருக்கு வேண் டும் அலங்காரப் பணியாக வரம்பெற்ற தலம்.

திவோதாஸன், வியாசர், கேதார மகாலிங்கம், கங்கை, யமுனை, சரஸ்வதி, மாந்தாதா முதலியோர் சரித்திரமும் காசித்தலமகிமையுங் காசி கேதாரமான்மியத்திற் குறிக்கப் பட்டமையா லிங்கு விரித்தெழுதவில்லை. இறந்துபோன வர்களங்கம் கங்கையில் போட்டால் அவர்கள் தேவபோக மனுபவிப்பார்கள். காசியை தெரிசிப்பது முன்ஜன்ம புண் ணியத்தா லல்லது கிடையாது. காசி யெல்லை ஐந்துகாதம், இதுதான் பஞ்சக்குரோச யாத்திரை எனப்பெயர். இதற் குளிருக்கு மகாலிங்கங்களுக்கும் அதன் மகிமைக்கும் அள வில்லை. இத்தலத்தின் கீழ்ப்புறங் கங்காநதி உத்திரவாகினி யாகச் செல்லுகின்றது. அதற்குள் வாரணை அசி யெனும் நதி மத்தியில் அறுபத்துநான்கு தீர்த்தக்கட்டங்களுள்ளன. அவற்றை உத்தரதிசையினின்று பார்க்க. வருணா சங்கம கட்டு இமவான்காட் யாதோதகம், விஷ்ணுகாட், ராஜா காட், புக்கிகாட், பிரகலாதகாட், தேகலியானூர்காட், பக்கு வகாட், பிப்பிலாகாட், திரிலோசனகாட், நருமதாநதி,

கௌகாட், பாவந்திகாட், சோரகாட், துற்காகாட், கோராய்காட், பிரம்மகாட், விந்துமாதவர் பஞ்சகங்காகாட், லீமகதிகாட், கிரணைந்திகாட், வாலாசிகாட், நவகாட், மங்களகவுரிகாட், கணேசகாட், குல்லர்காட், கோசலாகாட், அக்கினிகாட், ராமகாட், யமகாட், சங்கடாகாட், சேந்திகாட், மணிகர்ணிகாகாட், சக்கரகுளம் விசுவேசர் சந்நிதி தீர்த்தம், செயகாட், மயானகாட், லெலிதாகாட், நீரளகாட், வராயிகாட், மனுமாந்தா தாகாட், தசாஸ்வமேதகாட், பிரயாகைகாட், சிதளாகாட், அகல்லியாகாட், காளிகாட், முனிசிகாட், ராணுகாட், சவுசட்டிகாட், பாடேகாட், ராஜகாட், நாரதகாட், மானேஸ்வரகாட், சேமேசுரகாட், ருக்மாங்கதகாட், கேதாரகாட் ஆதிமணிகர்ணிகை கேதாரீசுர தீர்த்தம், வால்காட், அரிச்சந்திரகாட், அனுமகாட், தண்டிகாட், சிவாலயகாட், வதளிகாட், ரிஷீஸ்பரகாட், துளசிகாட், லோலார்காட், லாலாமிசிரிகாட், சரசுகாட், இது அசிசங்கமம், ஆக 64. சைவசமையமூவராசிரியர் தேவாரத் திருப்பதிகங்க ளிழந்திருக்கபோதிலும் பலதேவாரங்களிற் வைப்புத்தலமாகப் பெற்றதலம் காசிகாண்ட முதலிய விரிந்நூல்பார்க்க விருந்துவோர்க் கெளிதிலறியக் கொடுத்தனம்.

ஸ்ரீலஸ்ரீ விசுவேஸ்வரர் சகாயம் பெருக.

ஸ்ரீலஸ்ரீ காசிமான்மிய சங்கிரக முற்றும்.

சிவமயம்.

# முகவுரை.

சிவ க்ஷேத்திர மான்மியங்கள் சிவாநுபூதிமான்களுக்கன்றி ஏனையோர்கட் கறிதல் கூடாதென்பது தெரிந்து மிகக் கீழ்மையோனாகிய யான், சிறுவர்கள் 'பாச்சி சோச்சி' என்பதுபோல, வாழ்நாள் நிலையில்லாமையை நினைத்து விரைவாக கிடைத்த கதைகளை வைத்து 1882-ம் வருஷத்தில் 347 தல மகிமையை 100 பக்கமுள்ள ஒரு புத்தகமாக்கி "சிவக்ஷேத்திர மான்மிய சங்கிரக" மெனும் பெயருடன் அச்சிட்டு வெளிப்படுத்தினேனென்றாலும், ஆவல்மிகுதியான் மீட்டும் பன்னாள் தலயாத்திரை செய்து, அருமையான ஸ்தலபுராணங்களைப் பார்த்துத் தெளிவுஞ் சுருக்கமுமாக சுமார் 600 தலங்களுள்ள 200 பக்கத்துக்கு மேலாகக் கூடியவைகளை சேர்த்து எழுதிவைத்திருந்தாலும், எனது வயோதிகத்தாலும் சித்த வேறுபாட்டாற் சன்னியாசஞ் செய்துகொண்டு பன்னாள் அதிற் சிந்தையற்றிருந்தனன். இப்பால் 1903-ம் வருஷத்தில் ஸ்ரீகாசி, பதரிகேதார முதலிய யாத்திரைசெய்து அவிமுக்திக்ஷேத்திரமான வாரணாசியில் வசிக்குங்காலெனக்கு மிகவும் நண்பரான சென்னை இரத்தினசெட்டியாரது தூண்டுதலால் அப்புத்தகத்தை மீட்டு மெழுதப்புகுந்து, அதற்காகப் பல தலமான்மியங்க ளாராயுங்கால் ஸ்ரீ காசிக்ஷேத்திரத்திற்கு ஆறு புராணங்களிருப்பது மதில் அதி வீரராமபாண்டிய ராஜாவால் காசி காண்டமும், திருவாவடுதுறை ஆதீனம் சுப்பிரமணியசுவாமிகளால் மொழிபெயர்த்து மேற்படி ஆதீன வித்வான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்களால் காசி ரகசியமும் தமிழில் வந்தவைபோக மற்றைய நான்கிலொன்றாகிய ஸ்ரீ காசி கேதாரத்தலமான்மியம் சமஸ்கிருத சுலோகமுந் தெலுங்கு அக்ஷரமுமாகவிருப்பதைச் சிவநேசரான எல்லூர் ஸ்ரீ சயில

பத்துனுகாரென்பவர் வாசிக்கக் கேட்டதில் அத்தியந்த ஆவல் படைத்து அவை நன்குவிளங்க, கனம்: சிவநேசச் செல்வர் முதுகுன்ற லிங்கமூர்த்தி தேசிகராற் கேட்டதின் மேலிவ்வரிய தலப்புராணந் தமிழிலிருந்தாற் பல்லோர்க்கு முபயோகமாமெனத் தோற்றமுண்டாயினமையாற் சிறிய கல்விக்குத் தக்கவாறு அப்புத்தகத்தைத் தமிழில் வசன பூருவமா யெழுதிவைத்திருந்தனன். அவை பல்லோருமறிந்து இஃது அச்சிட்டு வெளியானால் தமிழ் தேசத்தாருக்கு மிகவு நலமெனச் சொல்லிவந்ததை ஸ்ரீரங்கம் ராஜம்மாள், உறையூர் தர்மலிங்கம்பிள்ளை கிஞ்சித்துப் பொருளுதவிசெய்து விரைவாக அச்சிட விரும்பியபடி, களக்கை எஸ். முத்தையாபிள்ளை யவர்களுதவியால் காசி கேதார மான்மியத்தை வெளிப்படுத்தியதோடு காசிகாண்டம் பெரிதாயிருப்பதை யறிய வருந்துவோர்க் கெளிதாகச் சோடச கவிக்கு ளமைத்து, அதன் கதைகளை சுருக்க வசன பூருவமாகவும், கங்காநதியின் தீர்த்தக் கட்டம் 64-ன் பெயரும் பத்திகேதார தேவாரத் திருப் பதிகமுஞ் சேர்த்து அச்சிட்டிருக்கின்றனன். இப்புத்தகத்தைப் பார்த்து இனிதச் செய்யுள் பூருவமாக விரித்து அச்சிடுவோர்க்கு மனத்திருப்தியான வந்தனத்தோடு இப்புத்தகத்தை யுள்ளபடி யெழுதியனுப்பவேண்டு முதலிரெப்பத் தயாராயிருக்கின்றனன். இன்னும் காசி புருஷார்த்தம், காசி மகாத்மியம், காசி அந்தர்சாரமிருப்பதையுந் தமிழ்செய்தனுப்ப விரும்பினனுந் தயாராயிருக்கின்றேன். சிவஸ்தல மான்மிய சங்கிரகம் சுமார் 600 தலங்களுக் கெழுதிவைத்திருப்பதை ஸ்ரீ காசியில் வசித்துவரும் களக்கை எஸ். முத்தையாபிள்ளை யவர்களாவது வேறு எந்தப் புண்ணிய புருஷர்களாவது அச்சிட முயலுவோருக்கு என்னாற் கூடிய உதவிசெய்து அச்சுக்குக் காப்பியாகவு மெழுதிக்கொடுக்கவுந் தயாராக இருக்கின்றனன். அதற்கு கைம்மாறாக எனது நண்பர்களுக் குபயோகமாகும்படி சில பாகப் புத்தகம் கொடுத்தாற் போதுமானதென மதிக்கின்றனன்.



இது சுர மகாத்மியமாதலா லிதிலுள்ள வழுவைக் கவனியாது சாரத்தை யேற்றுக்கொள்பவர் சிவநேசச் செல்வராவாரென்பது முரிமை வசனமாம்.

இங்ஙனம், தொண்டர்க்குத் தொண்டன்,

வி. காசிவாசி சுவாமி.

---

## சாற்றுக்கவிகள்.

---

### ஸ்ரீல ஸ்ரீ மெஞ்ஞான தேசிகராஜ மாணாக்கர் சோமசுந்தரையரவர்கள் பாடிய ஆசிரியவிருத்தம்.

சந்திரன்புனல் வேணியிலோங்கிய, சதுரன்வாழ் காசிக் கேதாரமான்மியஞ், சுந்தமாம் வட சொல்லைத் தமிழினாற் சாற்றும்வித்தகன் மெய்த்தவமாமுனி, யிந்தமாநிலத்தோர் தந்தேசருமா, மேனி பொற்பவிரித்தனன் பல்வளம், கந்தமேவும் விஜயநகர்வளர் காசிவாசிக் குமாரசுவாமியே. 1.

### திருவாவடுதுறை யாதீனம் வித்வாமிசம் ஸ்ரீ செயந்திவாசி குழந்தைவேலுசுவாமிக ளருளிச்செய்த விருத்தம்.

சித்தமென்னுஞ் சிவபெருமானடிக்கேவைத்துத்
தேசாபிமானமிலாச் சிறந்த செல்வ
னுத்தம குணங்களெல்லா மொருங்குசேர்ந்த
வொப்புயர் விலாதுயர்ந்த யோகமூர்த்தி
வித்தகன்வாழ் கேதார மகிமைதன்னை
விளம்பும்வட மொழியினின்றுந் தென்சொலாக்கி
சுத்த அச்சுப்பதித்தளித்தான்காசிவாசிச்
சுசுவனிவன் போலெவரைச் சொல்லலாமே. 2.

## நெல்லையம்பதி வித்வான்
## அமுர்தலிங்கக் கவிராயரவர்கள் பாடிய
## விருத்தம்.

பதியேறு காசியின் கேதாரமான்மியம் பார்த்துள்ளோர்
கதியேறுமாறு வடமொழிநின்றுந் தென் கவிதையாய்த்
துதியேறுவித்தனரின்னேழைப் போலவர் தாரமையுளா
விதியாம்விலுநகர் காசிவாசி சிவன் மெய்த்தவனே.

---

திருச்சிற்றம்பலம்.

## திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகளருளிச் செய்த திருக்கேதாரத் திருப்பதிகம்.

தொண்டரஞ்சுகளிறு மடக்கிச் சுரும்பார்மல
ரிண்டைகட்டி வழிபாடுசெய்யு மிடமென்பரால்
வண்டுபாட மயிலால மான்கன்று துள்ள வரிக்
கெண்டைபாயச் சுனைநீலமொட்ட லருங் கேதாரமே. 1

பாதம் விண்ணோர் பலரும்பரவிப் பணிந்தேத்தவே
வேதநான்கும் பதினெட்டொடாறும் விரித்தார்க்கிடம்
தாதுவிண்டம் மதுவுண்டு மிண்டிவரு வண்டினங்
கீதம்பாட மடமந்தி கேட்டுகளுங் கேதாரமே. 2

முந்திவந்து புரோதாயமூழ்கி முனிகள்பல
ரெந்தைபெம்மானென நின்றிறைஞ்சு மிடமென்பரால்
மந்திபாயச் சரேலச்சொரிந்து முரிந்துக்க பூங்
கெந்தநாறக் கிளருஞ்சடை யெந்தைகேதாரமே. 3

உள்ளமிக்கார் குதிரைம்முகத்தா ரொருகாலர்க
ளெள்கலில்லா விமையோர்கள் சேருமிடமென்பரால்
பிள்ளைதுள்ளிக் கிளைபயில்வ கேட்டுப்பிரியாது போய்க்
கிள்ளையேனற் கதிர்கொணர்ந்து வாய்ப்பெய்யுங் கேதாரமே



ஊழியூழியுணர்வார்கள் வேதத்தினொண்பொருள்களால்
வாழியெந்தையென வந்திறைஞ்சு மிடமென்பரால்
மேழிதாங்கி யுழுவார்கள்போல விரைதேரிய
கேழல்பூழ்தி கிளைக்கமணி சிந்துங் கேதாரமே. 5.

நீறுபூசி நிலத்துண்டு நீர்மூழ்கி நீள்வரைதன்மேற்
றேறுசிந்தை யுடையார்கள் சேருமிடமென்பரா
லேறிமாவின் கனியும் பலாவி னிருஞ்சுளைகளுங்
கீறிநாளு முசுக்கிளையோ டுண்டுகளுங் கேதாரமே. 6.

மடந்தைபாகத் தடக்கி மறையோதி வானோர்தொழத்
தொடர்ந்த நம்மேல் வினைதீர்க்க நின்றார்க் கிடமென்பரா
லுடைந்த காற்றுக் குயர்வேங்கை பூத்துதிரக் கல்லறை
கண்மேற்கிடந்த வேங்கைசினமா முகஞ்செய்யுங் கேதாரமே.

அரவமுந்நீ ரணியிலங்கைக் கோனை பருவரைதனால்
வெருவவூன்றி விரலாலடர்த் தார்க்கிடமென்பரா்
குரவங்கோங்கங் குளிர்பிண்டி ஞாழற் சுரபுன்னைமேற்
கிரமமாக வரிவண்டுபண் செய்யுங் கேதாரமே. 8.

ஆழ்ந்துகாணா ருயர்ந்தெய்த கில்லா ரலமந்தவர்
தாழ்ந்துதந்தம் முடிசாய நின்றார்க் கிடமென்பரால்
வீழ்ந்து செற்று நிழற்கிறங்கும் வேழத்தின் மருப்பினைக்
கீழ்ந்து சிங்கங் குருகுண்ண முத்துதிருங் கேதாரமே. 9.

கடுக்கடின்று கழிமீன் கவர்வார்கள் மாசுடம்பின
ரிடுக்கணுய்ப்பா ரவரெய்த வொண்ணா விடமென்பரா
லடுக்கநின்ற வறவுரைகள் கேட்டாங் கவர்வினைகளைக்
கெடுக்கநின்ற பெருமானுறைகின்ற கேதாரமே. 10.

வாய்ந்தசெந்நெல் விளைகழனி மல்கும் வயற்காழியா
னேய்ந்தநீர்க் கோட்டிமையோ ருறைகின்ற கேதாரத்தை
யாய்ந்து சொன்ன வருந்தமிழ்கள் பத்துமிசை வல்லவர்
வேந்தராகி யுலகாண்டு வீடுகதி பெறுவரே. 11.

திருச்சிற்றம்பலம்.

உ

திருச்சிற்றம்பலம்.

## சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்த தேவாரத் திருப்பதிகம்.

வாழ்வாவது மாயமிது மண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய் செய்தபறிதான்
றாழாதறஞ்செய்ம்மின் றடங்கண்ணான் மலரோனுங்
கீழ்மேலுற நின்றான் றிருக்கேதாரமெனீரே. 1

பறியேசுமந்துழல்வீர் பறிநரி கீறுவதறியீர்
குறிகூவிய கூற்றங் கொளுநாளா லறமுளவே
யறிவானிலு மறிவானல னீரொடுசோறு
கிறிபேசிநின் றிடுவார் தொழுகேதாரமெனீரே. 2

கொம்பைப்பிடித் தொருக்காலர்க ளிருக்கான்மலர் தூவி
நம்பன்னமையாள்வானென்று நடுநாளையும் பகலுங்
கம்பக்களிற் றினமாய்நின்று சுனைநீர்களைத் தூவிச்
செம்பொற்பொடி சிந்துந் திருக்கேதாரமெனீரே. 3

உழக்கேயுண்டுபடைத்தீட்டி வைத்திழப்பார்களுஞ் சிலர்
கள், வழக்கேயெனிற் பிழைக்கேமென்பர்மதிமாந்தியமாந்தர்
சழக்கே பறிநிறைப்பாரொடு தவமாவது செய்யன்மின்
கிழக்கே சலமிடுவார்தொழு கேதாரமெனீரே. 4

வாளோடிய தடங்கண்ணியர் வலையிலழுந்தாதே
நாளோடிய நமனார்தமர் நணுகாமுன் நணுகி
யாளாயுய்ம்மின்னடிகட் கிடமதுவே யெனிலிதுவே
கீளோடரவசைத் தானிடங் கேதாரமெனீரே. 5

தளிசாலைகள் தவமாவது தம்மைப் பெறிலன்றே
குளியீருளங் குருக்கேத்திரங் கோதாவிரிகுமரி
தெளியீருளஞ் சீபர்ப்பதந் தெற்குவடக்காக
கிளிவாழை யொண்கனி கீறியுண் கேதாரமெனீரே. 6



பண்ணின்றமிழிசைபாடலின் பழவேய் முழவதிரக்
கண்ணின்னொளி கனகச்சுனை வயிரம் மவைசொரிய
மண்ணின் றுணைமதவேழங்கண் மணி வாரிக்கொண்டெறியக்
கிண்ணென்றிசைமுரலுந் திருக்கேதாரமெனீரே. 7.

முளைக்கைப்பிடிமுகமன்சொலி முதுவேய்களையிறுத்துத்
துளைக்கைக்களிற்றினமாய் நின்று சுனைநீர்களைத் தூவி
வளைக்கைப் பொழிமழைகூர் தரமயின் மான்பிணை நிலத்
தைக், கிளைக்கும்மணி சிந்துந் திருக்கேதாரமெனீரே. 8.

பொறியே சுமந்துழல்வீர் பொறியவமாவது மறியீர்
மதிமாந்திய வழியேசென்று குழிவீழ்வது வினையாற்
கதிசூழ்கட லிலங்கைக்கிறை மலங்கவ்வரையடர்த்துக்
கெதிபேறு செய்திருந்தானிடங் கேதாரமெனீரே. 9.

நாவின் மிசையரையன்னொடு தமிழ் ஞானசம்பந்தன்
யாவர் சிவனடியார்களுக் கடியா னடித்தொண்டன்
தேவன் றிருக்கேதாரத்தை யூரன்னுரைசெய்த
பாவின் றமிழ்வல்லார் பரலோகத்திருப்பாரே. 10.

திருச்சிற்றம்பலம்.

---

உ

திருச்சிற்றம்பலம்.

## பாயிரம்.

### விநாயகமூர்த்தி.

சீர்மலியுங் காசிவளர் கேதாரீச்வர மகிமையுற்றியிக்கப்
பார்மலியும் படியளிக்கப்பண்டு பயோததியினிடை பலருங்
கூடிக், கார்மலியு மந்தரத்தையலைக் கலந்துதுதி செயவமுதங்
கனிக்குநல்குந், தார்மலியுங் காசி சிந்தாமணி வாத்திமுகன்
பாதக்கமலமேற்கொள்வாம். 1.

சிவபெருமான்.

ஓவாதிவ் வுலகமெல்லாம் படைத்தளிக்கச் சிலரை வகுத்துவர்கள் செய்யும், பாவாதிகளையுமவர் தம்மையுந் தண்டித்தருளைப்பாலித்தாளுந், தேவாதி தேவன் மகாதேவனெனப்புகழ் பரமசிவன்றன் பாதம், பூவாதிநாவிய கங்கசிங் அருளி மெய்யன் பாற்போற்றல் செய்வாம். 2.

உமாதேவியார்.

சொல்லாரும் பஃறலைத்தி னரும்பரிய பெருமைகளைத் தொகுத்துச் சேர்த்திங், கெல்லாரு மறிந்திடவே பெரியநடையாற் சுருக்கியியம்பும் வண்ணம், அல்லாரு மணிமிடற்றோனிடம் பிரியாதிருந் துலகீ மளிக்குமின்ற, வில்லாருஞ் சிலைப்புருவ மீனலோசனை மலர்த்தாள் விரும்பி வாழ்வாம்.

முருகப்பிரான்.

தந்தையொடு தாயில்லாத் தனிப்பரம சிவத்தையுஞ் சத்தியையுந் தானே, தந்தையொடு தாயாக வுடையபிரான் கனியொன்றாற் றணந்துமேவி, முந்தையொரு காலவரே வந்து பழநீயென்று மொழியவைகு, மெந்தையொடு தெய்வானை வள்ளியம்மை பதமலர்களிலுநந்தி வாழ்வாம். 4.


நாரயன்.

தண்ணிலா வணிவேணிச் சங்கரனார் மகிழ்ந்து மருந்தமொவ்வொன்றும், மண்ணிலாருயிர் விரும்புஞ் சுகமனைத்துந் தந்து துக்கமருவாதோட்டி, விண்ணிலாவிய போகம் புரிப்பித்துப் பின்பளிக்கும் வீடுமொன்றும், பிணியிலாப் பிறப்போய்க்கும் பெரிய தலைப்பெருமை பெயர்பிரிக்கவல்லார். 5.

அவையடக்கம்.

பல்லோர் சொற்பொருடேர்ந்து பன்மணிகள் கோர்த்தாற்போ லவ்வப்புகழ்மயக்குமுரைப்பர் சுற்றமிழ்நூலியற்றா, மல்லலித்திவென்று மவாவிழுக்கச் சொன்மகிமை செல்வாரன் புகழ்விதனைத் தேறுவார் நல்லோரே. 6.

பாயிர முற்றும்.



உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# ஸ்ரீ காசி கேதாரீஸ்வரர்
# தலமான்மிய சங்கிரகம்.

## 1-வது அத்தியாயம்.

### இந்நூலுண்டான காரணம்.

நைமிசாரண்யத்திலுள்ள மகருஷிகள் தவஞ்செய்கையிற் சகலபுராணங்களையு மியாவர்க்குந் தெரியும்படி யோதிய மகருஷியான சூதமுனிவர் அந்தலத் தெழுந்தருளினர். அதுகண்ட நைமிசாரண்யவாசிக ளொருங்கே யெழுந்து பலவாறுபுகழ்ந்து சோடசோபசாரங்கள் செய்து அஷ்டாங்க பஞ்சாங்கமாக நமஸ்கரித்து தேவரீ ரெங்கிருந்து எழுந்தருளுகின்றீரென வின்னப்பஞ் செய்யக் கேட்டுச் சூதமகருஷிகள் அந்த ருஷிகளை முறைப்படி யாசீர்வதித்து ஸ்ரீ கேதாரபருப்பதத்தினின்றும் வருகின்றனமென்றருளிச்செய்தனர். அதுகேட்டவ்விருந்த முனிவர்கள் பரமானந்தங்கொண்டு மீட்டும் அவரது திருவடியை வணங்கி ஸ்ரீ கேதாரத் தலமகிமையை யாங்களறியும்படி அருளிச்செய்யல் வேண்டுமெனத் தெரியப்படுத்திக்கொள்ள,

சூதமகருஷிகள் மிக்க ஆநந்தத்தோடு ஸ்ரீ கேதாரீஸ்வரரைத் தியானித்துப் பன்முறை நமஸ்கரித்து வணங்கிக் கூறலுற்றனர்: "கேளும் ருஷிகணங்களே, நீங்கள் வினவியது உலக ரக்ஷணையின்பொருட்டு. ஆதலால் திருக்கேதாரத் தலமான்மியம் அநேக கிரந்தங்களடங்கியது. அதிற் காசிமான்மியத்திலுள்ள சிலவற்றைச் சுருங்கத் திருவருள் விளக்கும்வரை கூறுகின்றனம்" மென் றருளிச்செய்தனர்.

## பிரமன் பூசித்தது.

கேளும் ருஷிகணங்களே, பூர்வம் விஷ்ணு தவஞ்செய்திருந்த இடம் பதரி நாராயணமாயது. அந்தத் தலத்தில் நரனென்றும் நாராயணனென்று மிருவர் தவஞ்செய்திருந்தனர். அக்கதை பின்பு கூறுவோம். ஓர்காலத்துப் பிரமனுக்குத் தாமே பெரியரென்றும் மற்றத் தேவர்கள் தனக்குத் தாழ்ந்தவரென்றும், செருக்குண்டாயது. அப்பிரமன் உலாவுதற்பொருட்டு மகாமேருச் சாரலிற் செல்லுழி, அங்கிருந்து நோர்க்கும் ருஷிகளவரைப்பார்த்து இப்பிரமன் தானே பெரியரென்னும் ஆணவமேலீட்டாற் சிவநிந்தாபரரென்று அவமதித்தனர். அதுசெவியுற்ற பிரமன் அவர்களை வணங்கி, அதற்குத் "தீர்வு யாது?" என வினவுள, பிரமனுக்கு இரங்கிய ருஷிகணங்கள் அச்சிவாபராதம் பதரி கேதாரத்திற் சென்று அரிய தவஞ்செய்தாலன்றி நீங்குவதரிதெனப் புகன்றமைக்காக, அப்பதுமாசனர் அவ்விதம் ஸ்ரீ கேதார சைலத்தில் வந்து, நித்யகன்மமுடித்துத் தவஞ்செய்யநினைத்து ரேதோதக தீர்த்தத்தருகிற் செல்வது பார்த்த சிவ கிங்கரர்கள் அவரைச் சிவநிந்தாபரரென்று மூழ்க ஒட்டாது, தலையிற் புடைத்தனர். அதனால் அப்பிரமனுக்குள்ள ஐந்து சிரங்களிலொன்று தறிபட்டு பதரி நாராயணத்திற் போய் வீழ்ந்தது. அச்சிரம் விழுந்தவிடமே பிரம்மகபாலமாயது. அதன் மகிமை பின்பு மொழிகுவம்.

கேளீர் தவசிரேட்டர்களே, பிரமன் தன் சிரசைச் சிவகிங்கரர் தரித்தும் விடாது அத்தீர்த்தத்தருகிலிருந்து



தவஞ்செய்யுழி, உலககாரணனாகிய சிவமூர்த்திக்குச் சற்று கிருபையுண்டாயதென்றாலும் சிவநிந்தாபரருக்கு நேரிற் றரிசனங்கொடுத்தல் கூடாதென்று ஓர்மகிஷம்போல் வந்து முன்னிற்கக்கண்ட பிரமன் விரைந்துசெல்லுழி, அம்மேதி பூமியின்கண்ணே முகத்தை புகுத்துகின்ற தறிந்து, பிருஷ்டபாகந் தரிசித்த பிரமன் மனவருத்தமுற்று நிற்குங்கால், நீ காசியில் வந்து தவஞ்செய்தாற் றரிசனங் கிடைக்குமென்ற அசரீரி கேட்ட பிரமன் பன்முறை வணங்கி எழுந்து காசிக்கு வந்து தசாஸ்வமேதயாக முதலிய பல செய்திருப்ப, அதனான் மனத்தெளிவு பிறந்து, கேதாரகௌரி தீர்த்த ஸ்நானமும் கேதாரீஸ்வர லிங்க பூசையுஞ் செய்யுங்காற் சிவபெருமான் ரிஷபாரூடராக எழுந்தருளித் தரிசனங்கொடுத்து, "உனது தவத்தை உவந்தனம், சிவாபராதம் நீங்கின்று, நின்சிரம் விழுந்த விடத்திற்கு பிரமகபாலமெனப் பெயராகுக, அதிற் பிண்டமுதலியேனர் குடும்பத்துள்ள பிதுர்களியாவரும் மோக்ஷமடைவர், அவர்கள் மீட்டுஞ் ஜன்மத்திற்கு வாரார், தங்களுக்கு ஆத்ம பிண்ட முதலியேனர்களும் மோக்ஷமடைகுவர்" என்று வரங்கொடுத்தருளினார்.

---

## ௨-வது அத்தியாயம்.

---

## சந்திரவந்தன் தவஞ்செய்தது.

சந்திர வந்தனென்னும் அரசன் ஸ்ரீ கேதாரபருபதத்திற் சென்று தவஞ்செய்திருப்ப, அவ்வழியே செல்லும் சனற்குமார வாமதேவ ருஷிகள் காசிமான்மியம் புகன்று போவதறிந்த அவ்வரசன், "ஓ, மகான்களே! நீங்கள் தியானிகளாயிருந்தும் சரியைப்பதத்தோர்க் கொப்பாய் புகன்றீர்கள். அவை எப்படியென உங்களுக் கருளு" மெனக்கேட்ட முனிவரர்கள், "ஓ, அரசனே! நீ கூறுங் கட்டாய் பொருந்தாது. ஆலயவழிபாடு, சரியை முதலிய சாத்திரத்தாரும் அனுஷ்டிக்கத்தக்கவர்," எனக் கூறிவிட்டு, அருகே யிருக்கு மிரேதோதக தடாகத்தின் அவ்விருஷிகள் மூழ்குவதறிந்த அர

சன், நீவிர்மூழ்குந் தடாகமென் கண்ணுக்குப் புலப்படாது செவிக்கு கேட்கின்றதியாது காரணமெனப் பலவாறு வணங்கி பிரார்த்திக்கக் கேட்ட ருஷிகள் சிவபெருமானைத் தோத்தரித்து பலவாறு வந்தனஞ் செய்தனர்; அசரீரியாக ஓர் வாக்கு, இவ்வரசன், காசியையுங் கங்கையையுந் தூஷித்த குற்றத்தாற் சிவாபராதமுற்றது, அது காசியிற் போயன்றி நீங்காதென்றுத் திருவாய்மலர்ந்ததைச் செவியுற்ற ருஷிகளை வணங்கிய அரசனுக்கு முனிவர் கூறுவதாவது: “அரசனே! நீ காசிக்குச்சென்று கேதாரீஸ்வரர் ஆதிமணி கர்ணிகை முதலிய தீர்த்த தரிசனஞ் சிவலிங்க தரிசனஞ் செய்தன்றி நீங்குவதரி”தென் றுரைத்த மகா ருஷிகளை அரசன் மீட்டும் புகழ்ந்து வந்தித்து, “அத்தலத்து ஆர், யாருக்கு விமோஷணமாயிருக்கின்ற”தென வினவ அரசனுக்கு ருஷிகள் ஈசனைப் பன்முறை வணங்கிக் கூறலுற்றனர்: காசிகேதாரத் தலத்து கௌரி, பிரமன், விஷ்ணு, கங்கை, திவோதாச, புஷ்கலன், தேவேந்திரன் முதலிய தேவர்கள் சூரபன்மன் முதலிய அசுரர்கள், பல அரசர்கள் இன்னும் பல்லோர்களுக்குஞ் சிவாபராத முதலிய நீங்கி முத்தி அடைந்தனரென் றுரைக்கக்கேட்ட நைமிசாரணியவாசிகள், “மேலே கூறும் வர்த்தமானங்களை யாரால் யாருக்குச் சொல்லிவைக்கப்பட்டனவென்பதை எங்களுக்கு விபரமாகக் கூறியருளுக” வென வணங்கிப் பிரார்த்தித்தனர்.

---

## 3-வது அத்தியாயம்.

---

## சந்திரவத்தன் பாவம நீங்கியது.

இஃது செவியுற்ற சூதமா முனிவர் திருவாய்மலர்ந்தருளுவதாவது: “ஓ அரசனே! இவைகளை சிவபிரானுமாதேவிக்கு உபதேசஞ்செய்தனர்; பிரமஞானியான சனற்குமார முனிவரிடத்து அவரால் காதசமாவுக்கும் அவர் பத்தினியாகிய அருந்ததிக்கும் கூறியவாறு, அவர் வியாச ருஷிக்கும், அவர் எனக்கு முரைத்தனர். அத்தத்



திவ்ய சரிதையை நீங்கள் வினவுதலா லுங்களுக்கு உணர்த்து”மென்றுத் திருவாய்மலர்ந்தருளக்கேட்ட நைமிசாரண்ய வாசிகள் பன்முறை சூதமாமுனிவரை வணங்கி திருவுளப்படிக் கட்டளையிட்டருள வேண்டுமெனப் புகன்றமைக்காக, சூதமாமுனிவர் நைமிசாரண்ய வாசிகளுக்கு உத்தரவு செய்கின்றனர்.

சந்திரவர்த்தனென்னும் அரசன் சனற்குமாரருஷி, வாமதேவருஷிகளை மீட்டும் பன்முறை வணங்கி, “நீங்களே எனக்கு நன்னெறி காட்டும் பொருட்டு காசிக்கு எழுந்தருளல் வேண்டு”மெனப் பிரார்த்திக்கவைக்காக அவ்விருஷிகளிருவரும் சந்திரவர்த்தனுடன் புறப்பட்டு வாரணாசி க்ஷேத்திரம் வந்து விதிப்படி சங்கற்பஞ்செய்து, சக்கரதீர்த்தம், மணிகர்ணிகை, கங்கா விசுவேஸ்வரர் தரிசன முதலியசெய்து, கேதாரீஸ்வரர் கோவில் அருகிலிருக்கும் அறுபாவ தீர்த்தம் ஆதிமணி கர்ணிகைத் தடாகத்தில் மூழ்குங்கால் சந்திரவர்த்தன் மேனியினின்றும் பருப்பதம் போல பாவரூபம் வெளிப்போந்து நின்று வாய்க்கு நேர்ந்ததைப் பிதற்றிக்கொண்டிருந்ததைப் பார்த்த ருஷிகள் வியப்படைந்து அப்பாவ வடிவைநோக்கி, நீயாரென வினவியதால், அது பணிந்து அருகே, “நான் பாவ புருஷன், என்னைப்போலும் அநேக ரிருந்தார், புண்ணியர்களுக்கு அவ்வுரோமத்திற் செய்யும் பாவிகள், ஆசாரம், எங்களுக்கு காசியிற் செய்கின்ற பாவிகளே ஆதாரம். அவை சக்கரதீர்த்தத்தால் தாராயணர் சிலபாகம் ஒழித்துவிட்டனர். அதுபோலவே, பின்னும் பல்லோர் தீர்த்தமும் பல மகாலிங்கங்களும் பிரதிஷ்டித்து சில பாகம் போயின, எஞ்சிநின்ற சிவாபராதத்தையும் இக்கௌரிதீர்த்தந் தொலைத்துவிட்டது. தவிரவும் இக்கேதார க்ஷேத்திரம் அதாவது கங்காநதியிற் பதிக்கு மேற்கு அக்கினிமூலையில் இருமயில் தெற்குலோலார்க்கம் தென்மேற்கு சங்குத்தாரை, மேற்கு வைத்தியநாதம், வடமேற்கு ஏடகம்தீர்த்தம், வடக்கு குலட்டங்கம், வடகிழக்கு இருமயில், இவ்வெல்லைக்குள் வைரவர் தண்டனைகட்கிடை

பாது. இதற்குள் அநேக சிவலிங்கங்களு மிருக்கின்றன. அச்சிவலிங்க தரிசனையாலும் ஆவணிமாத சோமவாரப் பூசையினாலுஞ் சிலபாவங் கழிகின்றன. இவ்விதமாக பாவந் தொலைந்துவிட்டதினால் எங்களுக்கு ஆகாரம் அரிதாயது, இவைகளை வைரவரிடந் தெரியப்படுத்தினால் என்ன உத்தரவு கொடுக்கின்றாரோ அறியோம். காசி எல்லையைக் கடந்து பிறதேசத்திற் செல்லவும் இஷ்டமில்லை" எனப் பலவாறு புலன்றுபோய், காலவைரவரிடஞ் சென்று துக்கித்து இவைகளைக் கூறியது. அதுகேட்ட வைரவர், "அவ்விருடிகளின் மூவரைக் கூறல் தகாது. இவர்களும் நமது ஆணைபெற்ற திருவிளையாடல் அன்றி ஒன்றில்லை. வேறு பாவிகளைத் தொடர்ந்து திரிக" என்றனர். அதுகண்ட ருஷிகளை சந்திரவர்த்தன் பலவாறு புகழ்ந்து வணங்கி உங்களால் இவ்விதப் பெரும் பேற்றை அடைந்தனனென்று கூறி மகிழ்ந்தனன். அதின்மேற் கேதாரீஸ்வர மகாலிங்கத்தை இம்மூவரும் பூசித்துத் தோத்திரஞ் செய்யுங்கால் சிவபெருமான் ரிஷபாரூடராய்க் காட்சிதந்து அரசனைநோக்கி, "இந்த ஸ்நான பூசாபலத்தால் உனது சிவாபராதம் நீங்கிற்று. இன்னுஞ் சிலகாலம் நம்மைப் பூசித்திருந்து பின் திருக்கைலை அடைவாய்" எனத் திருவாய் மலர்ந்தருளினார். அதுகேட்டு நமஸ்கரித்துத் தோத்திரித்த மூவரும் ஸ்ரீ கேதார பருப்பதஞ்சென்று இரேதோதகதீர்த்த ஸ்நானஞ்செய்து மகாலிங்க தரிசனமுந் தோத்திரமுதலிய புரிந்து சிலநாளிருந்து அவிமுக்த க்ஷேத்திரமாகிய ஸ்ரீ காசி ஸ்தலமுற்றிருந்தனர்.

---

## 4-வது அத்தியாயம்.

---

### திருக்கைலாயகிரிச் சிறப்பு.

கேளும் ரிஷிகளே! திருக்கைலைக்கு ஒப்புவமையென ஒருவர் கூற இடமில்லாததாயும் பிரமாண்டங்களுக்கெல்லாம் பிரகாசம் கொடுக்கும்படியானதாயும் சத்துச் சித்து ஆநந்தஞ்சேர்ந்து பிரகாசிப்பு, சாலோக, சாமீப



சாரூப, சாயுச்சியங்கள் அருளுவதாயும் ஸ்ரீ கணபதி, நந்திகேஸ்வரர், சிவகணநாதர்கள் முதலிய பல்லோர் இங்கு வருபவர் பக்குவ கிரமந் தெரிந்து தானங்களையேற்படுத்திக் கொடுப்பதாயும் அநேககோடி பிரமாண்டங்களுக் கெல்லாம் பிரளய காலங்களில் இப்பொருளைத் தவிர வேறு ஆதாரமில்லையென்பதாயும் அநேககோடி யோசனை அகல நீள உயரமுள்ளதாயும் வேதாகமத்தெளிந்த அந்தரங்க சுத்தியான மகான்களுக்கல்லது ஏனையோர்கட் கெட்டாததாயும் மகாமேருகிரியின் மீதுள்ளதாயு மிருப்பது. பொன்னிறமான மகாமேருவுக்கு வெள்ளிநிறமான சிகரம்போற் பொலிவுற்றன. இக் கைலையின் கிழவாயிலுக்கு ஸ்ரீ கணேசமூர்த்தியும், அக்கினிவாயிலுக்கு பிருங்கிருஷிமுதலிய கணநாதரும், தெற்குவாயிலுக்கு மாகாளர் முதலியோரும், நிருதிவாயிலுக்கு வீரபத்திரர் முதலியோரும், மேற்கு வாயிலுக்கு அரிகரபுத்திரர் முதலியோரும், வாயுவாயிலுக்கு துர்காகணி துர்கை முதலியோரும், வடக்கு வாயிலுக்கு ஸ்ரீ சுப்பிரமணியர் முதலியோரும், ஈசான்ய வாயிலுக்கு நைலாதி முதலியோரும் தலைவராக விருப்பர். சங்கியையில்லாத சிவகணங்கள் புடைசூழ்ந்து நிறைந்திருந்தாலும் அவரவர்களுக்குப் பலவித வாசஸ்தானங்களேற்பட்டுள்ளன. அவைகளை விரிக்கிற் பெருகுமென்றஞ்சி சிறிது புகல்வோம்: லக்ஷக் கணக்கான யோசனை அகல நீள உயரமுங் கோடி கணக்கான பதுமராக முதலிய கோபுரங்களுமுள்ள தானத்திற் சாயுச்சியஞ் சேரத பக்குவமுதிர்ந்துள்ள மகான்களை தாரதம்யந் தெரிந்து பிரித்தனுப்புந் தலம், அவ்வபோலும் அகல நீள உயரமும் லக்ஷக்கணக்கான பவளாதிக் கோபுரங்களுமுள்ள தானத்திற் பூதகணங்களும், அவ்வாறே வச்சிர கோபுரமுள்ள தானத்தில் சித்தர் வித்தியாதரர்களும், அவைபோலும் வைடூரிய கோபுரமுள்ள தானத்தில் சாலோக்கியப் பதவியானோர்களும், அவ்வாறுள்ள புஷ்பராகக் கோபுரங்களுள்ள தானத்தில் கந்தருவர், யக்ஷர், கின்னரர், நாகர் முதலியோரும், அவ்விதமுங் கோமே

தக கோபுரமுமுள்ள தானத்தில் தேவேந்திரன் முதலியோரும், அவ்வாறு இந்திர நீலமணிக் கோபுரமுள்ள தானத்திற் பிரமன் முதலியோரும், அவ்வித மரகதமணி கோபுரமுள்ள தானத்தில் நாராயணன் முதலியோரும், முத்துக்கோபுரமுள்ள தானத்தில் களங்கமன்றி மனவாக்குக் காயமொத்துப் பூசாத்தியானஞ் செய்த சாமீபபதவியோரும், படிகசிற வைரக்கோபுரமுள்ள தானத்தில் நந்திதேவரிவரர் பிருங்கி மகருஷி முதலிய ஒப்பற்ற மகான்கள் பாசம் நீங்கி சதாகாலம் பதியைத்தியானித்திருக்கும் சாரூப்பிய பதவியோரும், இங்ஙனம் பல்லோருமிருப்ப, மத்தியில் அநேக கோடி யோசனை அகல நீள உயரமும் பலகோடி நவரத்ன கோபுரங்களுமுள்ள தானத்தில் வைடூரிய சிம்மாதனத்தினது சிறப்பையும் அலங்காரம் பிரகாசத்தையும் சகஸ்திர நாவுபடைத்த அதிசேஷனுங் கூறுவதற்கரிய அரியணைமீது பார்பதிதேவியாரும், கணபதி, சுப்பிரமணியர் முதலியோரும் அந்தரங்க பக்தியுடையோரும் அருகே சேவித்து நிற்பவுந் தேகசம்பந்தமான தேவர்கள் கண்ணுக்கும் புலப்படாத சிவஞானிகள் தரிசிக்கத்தக்க தானத்தில் சச்சுதானந்த பரப்பிரம ரூபியாகிய சதாசிவம் தமது அருட்சத்தியாரால் சகல கிருத்தியங்களையும் நடத்தும் எல்லா அண்டங்களிலுமுள்ள மகான்களும் இச்சத்திசிவத்தைத்தியானித்து இக்கைலையை அடையக் கிருதார்த்தராவார்கள். அச்சுயம்சோதியினது அருளாகிய கிருபையை முன்னிட்டு சகல அண்டங்களிலுமுள்ள திரிமூர்த்திகளுந் தத்தந் தொழிலை நடத்துவதன்றி வேறில்லை. கற்பாந்த காலங்களிலுமிக்கைலைக்கு அழிவில்லை. இறுதி காலங்களிலெல்லாம் ஒவ்வொரு அண்டங்களு மிதிலொடுங்கிப் பின்னும் இவ்வெற்பினின்றும் வெளிப்படத்தக்க சைலமாம்.



## 5-வது அத்தியாயம்.

### பிரமாட்சசிலையக் கண்ணுற்றது.

அளவற்ற சிறப்பும், பெருமையும், மகிமையும் பொருந்திய திருக்கைலாயத்திற் சிவபெருமான் வீற்றிருக்குங்கால் பிரமனும் விஷ்ணுவும் காமித்தொழில் புரியா திருப்பில் உலகம் எவ்விதம் நடைபெறுமென் றறியுங் கருத்தினராய் திருக்கைலைக்குச் சென்று முறைப்படி அஷ்டாங்க பஞ்சாங்க நமஸ்காரஞ் செய்து பன்முறை வணங்கிநின்று எங்களுக்கு இந்தப் படைத்தல், காத்தல் தொழில் வேண்டாமென்றனர். அது செவியுற்ற பரமசிவம், "ஓ, பிரம்ம விஷ்ணுக்களே! உங்களுக்கிப்பதவி எளிதிற் கிடைத்ததில்லை, முற் ஜனனங்களில் நீங்கள் புரிந்த தபோபலத்தாற் பெறப்பட்டன, அதை விடுத்துச் செல்வது ஒழுங்கல்ல" வென விடைகொடுக்கவும், அவ்விருவரும் முன்போலவே, தெரியப்படுத்துவது அறிந்த சிவபெருமான் கருணையோடும் அவர்களுக் கருளிச்செய்கிறதாவது: உங்களுக் கிப்பதவி கிடைத்த வர்த்தமானங் கூறுவோமென் றருளிச்செய்யலுற்றனர்.

நரனென்றும் நாராயணனென்றும் மந்திரியும் அரசனும் பதரி நாராயணத்திற் சிலகாலந் தவஞ்செய்திருந்து பின் ஸ்ரீ கேதாரத்துக்குச் சென்றனர். இவர்கள் அரசவிவகாரமுடையோராதலாற் பாவமிகுந்திருந்ததினலிரேதோதக தீர்த்தம் பார்வைக்குத் தோன்றாமை கண்டு அங்குத் தவஞ்செய்திருக்கும் ஓர் சிவாநந்த யோகியரைத் தரிசித்துத் தங்கள் வரலாறு கூறி, எங்களுக்கு அத்தீர்த்த ஸ்நானமும் மகாலிங்க தரிசனமுஞ் செய்துவைக்க வேண்டுமெனப் பிரார்த்தித்ததின்மேல் அச்சிவயோகியர், சிவபெருமானை வணக்கஞ்செய்து வேண்டிக்கொண்டதற்காக, அவர்கள் அதிக பாவமுடையோர்களாதலால் காசித்தலஞ்சென்று கௌரிகுடாக தீர்த்தமும் கேதாரீஸ்வர மகாலிங்க தரிசன

முஞ் செய்தன்றி நீங்காதென்று மெழுந்த அசரீரிவாக்கைக் கேட்டு நரநாராயணர்களை மீட்டுஞ் சிவயோகியரை வணங்கி "நீரே, எங்களுக்கு நல்வழி காட்டல்வேண்டு"மெனப் பிரார்த்தித்தனமக் கிரங்கிய சிவயோகியர், அவ்விருவரையும் அழைத்துக்கொண்டு காசிக்குவரும் வழியிற் சூரியன் அஸ்தமித்ததால் ஓர் வடவிருக்ஷத்தருகே சிவயோகியரை நித்திரை செய்யவைத்து அரசனும் மந்திரியுங் காத்திருப்ப, அம்மரத்தினின்றுமோர் பிரம்மராக்ஷசு வந்து சிவயோகியரருகே செல்வதுகண்ட நரநாராயணர்கள் தடுப்பவும் நீங்காது நிற்ப, அதை யிருவரும் வணங்கிப் பலவித வுபாயங் கூறியுங் கேட்காததினால் அவருக்குப் பதிலாக எங்களிருவரையும் பக்ஷித்துக்கொள்ளெனப் பிரார்த்தித்தபடி அது சம்மதித்து அவ்விதம் பிரம்மராக்ஷசுக்கு இரையாகச் செல்லும் அரசனும் மந்திரியும் சிவயோகியருக்கறிவிக்க விரும்பி ஒருகாற் சப்தித்தது கேட்ட சிவயோகியர் விழித்து நோக்குங்கால், அருகே பருப்பதம்போலிருப்பதைக் கண்ணுற்று இஃது யாதென வினவி, நடந்த வர்த்தமானமுற்றுந் தெரிந்து, பஞ்சாக்ஷரஞ் செபித்த விபூதியைப் பிரம்மராக்ஷசின் மீது தெளிக்க அது மூர்ச்சையாய் விழுந்து பின்பு தெளிந்து சிவயோகியரை வந்தனஞ்செய்து கூறியதாவது: "நான் பசியால் மிக மெலிவுற்றனன். எறக்குறைய நூறு வருஷத்துக்கு முன்னொரு சிவயோகியரிங்குற்று பகற்காலத்திலு மிவ்விருக்ஷ நிழலினு மியாரையும் அருந்தற்கவென் றருளிச் செய்தனர்; அதுமுதலெனக்கு ஆகாரம் அரிதாயின; இப்பொழுது கிடைத்த உணவையு மோசஞ்செய்துவிட்டீர்; இனி நானென் செய்குவன்; என் பசி தணிய ஏதாவது மார்க்கம் அருளல் வேண்டு"மென வணங்கிய பிரம்மராக்ஷசியை நோக்கிய சிவயோகியர், "உனது வர்த்தமானத்தை விபரமாகச் சொல்"லென்றருள, அது மீட்டும் பன்முறை நமஸ்கரித்துக் கூறலுற்றது.



## ௬-வது அத்தியாயம்.

### பிரமராட்சசையின் பாவம் நீங்கியதும் பிரம் விஷ்ணு பூசித்துப் பட்டம் பெற்றதும்.

முந்திய ஒரு ஜன்மத்தி லென்பெயர் பாஷ்கலன். நான் ஒரு அரசனுக்கு மந்திரியா யிருந்து பலவித கொடுங்கோல் புரிந்ததுமன்றி வைணவ பாஷாண்டி ஆசிரியன் வசமாகி அவன் போதனைப்படி சிவாலயங்களை யிடித்தலும், மதியாது எந்த ஸ்திரிகளையும் வலுவிற் புணர்வதும், பலர் சொத்துகளையபகரித்தல் முதலியவும் பஞ்சபாதகங்களாகிய கொலை, களவு, கள், காமம், பொய், குருத்துரோகஞ் செய்தும் அரசனது சுயம்பாகியிடஞ் சில பொருளீய்ந்து அரசனை விஷமிட்டுக் கொல்லச்செய்து அந்த ராஜ்ஜியத்தையு மரசன் மனைவியர் முதலிய பண்டாரங்களையுங் கைப்பற்றியதுந் தவிர அந்தப்புர ஸ்திரிகள் பூசிக்கும்படி அரண்மனைக்குள்ளெடுங்காலமாகவிருந்த சிவாலயங்களை யிடிக்கச் செல்லுங்கால் அவ்விட மிருண்மூடியிருந்தமையாற் தீபம் வைத்துக்கொண்டிடித்து, மிவ்வித பல பாதகங்கள் புரிந்து, இறுதியிற் பல கொடிய வியாதியிற் பன்னாள் வருந்தி யிறந்தபின், யமகிங்கரர் வசமாகி அவர்கள் செய்த ஹிம்சை களவில்லை. அதை நினைக்குந்தோறும் நெஞ்சு திகிற்படுகின்றன. முடிவில் யமதன்ம ராஜனிடங் கொண்டு சேர்த்தனர். அந்தப் புண்ணியன் எனது சரிதம் பார்க்குங்கானன் மிகவுந் துயருற்றது பார்த்து, அடா, நீ செய்த பாதகத்துக்கு அநேக ஜன்மம் எடுத்து ஜனனந்தோறுங் கொடிய நரகங்களிலழுந்தி வாதனையுற்று இறுதியாக பிரமராக்ஷசாகி சிலகாலங் கழிந்த பின்பு சிவாலயத்தில்விளக்கிட்ட புண்ணியத்தாலோர் சிவயோகியைக் கண்டும் அவரை பக்ஷிக்கப் புகுங்கால் அவர் ஜெபித்த பஞ்சாக்ஷர விபூதி புண்ணியத்தாற் பூர்வக்கியானமுற்று அவரை வழிபடுங்கால் அவரா லுனக்கு நற்கதி கிடைக்குமென்ற கட்டளைப்படி உமது தரிசனம் பெற்றதாலென்னை ரக்ஷித்தல் வேண்டுமெனப் புகழ்ந்து நமஸ்கரிக்கக் கண்ட

சிவயோகியார் பரிதவித்து பிரமராக்ஷசையுங்கூட அழைத்து காசி எல்லைக்குட் புகுங்கால் காசித்தலத்தைக் காக்கின்ற சிவகண முதலியோர் மகா பாவியான பிரமராக்ஷசியைத் தடுத்தனின் அதை வெளியே நிறுத்தி முன்புவந்த மூவருங் காசிக்குட்சென்று சக்கரதீர்த்தமணி கர்ணிகை முதலிய தீர்த்தமாடி விஸ்வேஸ்வரர் உள்ளிட்ட மகாலிங்க பூசை கேதார கௌரி தீர்த்த ஸ்நானம் கேதாரீஸ்வரர் பூசையுஞ் செய்த பின்னர் கௌரி தீர்த்தத்தை வில்வத்திற் றோய்த்து அங்குச் சென்று பிரமராக்ஷசின்மீது போட்டதினால் அதன் சொரூபத்திலிருந்து அநேக பாவ ஜந்துக்கள் வெளியேறியதுகண்டு சிவகணங்கள் சிவயோகியரை பலவாறு புகழ்ந்தனர். அப்பால் சிவயோகியார் பிரமராக்ஷசியை காசிக்குள் அழைத்துச் சென்று சங்கற்ப விதிப்படி ஸ்நானஞ் செய்விக்குங்காலுஞ் சில ஜந்துக்கள் அத்தேகத்தினின்றும் வெளியேறின. கேதாரீஸ்வரர் பூசையும் தோத்திரமுஞ் செய்து நிற்க விமானத்தின்மீது பல தேவர்கள் சூழ ரிஷபாரூடராய் சிவபிரானெழுந்தருளிப் பிரமராக்ஷசியை திருக்கைலைக் கழைத்துச் சென்றனர்.

அதுகண்ட நாராயணர்கள் சிவயோகியரை வந்தனஞ் செய்து எங்களை ரக்ஷிக்கவேண்டுமெனப் பிரார்த்தித்ததின் மேல் நீங்கள் எனக்காகப் பிராணனைத் தியாகஞ்செய்ததன்றி மறக்காது, நீங்கள் காமியார்த்த பிக்ஷையுமோராதலால் உம்மில் அரசன் விஷ்ணுவாகவும் மந்திரி பிரமாவாகவும் ஆகுக வென வரமருளியும், அந்த நாராயணர்களைக் கேதார பருப்பதத்துக் கழைத்துச்சென்று தரிசனஞ் செய்வித்தும் அவர்கள் காலங்கூடி இறந்தபின் நமது சிவயோகி வாக்குத் தவறுமா உங்களுக்கு இந்தப் பிரம விஷ்ணு பட்டங் கிடைத்தன. அதை நீங்கள் பிறக்கணித்துச் செல்வது அழகல்லவெனவும் கட்டளையிட்டருளினர். அதுகேட்டும் முன்னம் போலவே தெரியப்படுத்துவதைக் கேட்டு பக்கத்திற் றேவியரைக் கடைக்கண் சிறிது நோக்குங்கால் பராசக்தியார் ஒரு பராக்கிரம சொரூபமாய் பெரிய பருப்பதம்போலாகியும்



அதில் அநேக அண்டங்கள் தென்னங் குரும்பைகள்போற் றொங்கவும் ஆகி அதனுள்ளிருக்கின்ற இரண்டு பிராணிகளைப் பிடித்து பிரம விஷ்ணுக்களாக்கி இவ்விருவருக்கும் பார்த்தியாய் படைத்தல், காத்தல் செய்ய அவர்களை ஏவிவிட்டு வேண்டாமென்ற இருவரையு மிதற்குட் பிரவேசியுங்களெனக் கட்டளையிட்டது கேட்டு விதிர்விதிர்த்து சாஷ்டாங்க அஷ்டாங்க பஞ்சாங்க நமஸ்காரங்கள் செய்து பலவாறு தோத்தரிக்கக்கண்ட பரமசிவம் சற்று கிருபாநோக்கஞ்செய்து, "நீங்கள் செய்த குற்றத்திற்கு வாரணாசி சென்று தவஞ்செய்தன்றி நீக்கல் எத்தலத்துமில்லை" என உத்தரவானதின்மேல் அவ்விருவரும் மீட்டும் வணங்கி அவ்வபராதத்தினின்றும் நீக்கி ரக்ஷிக்கவேண்டுமென விடைபெற்று காசிக்குச் சென்றும் பூர்வ புண்ணியவசத்தால் ஆதிமணி கர்ணிகை மருங்கிலிருந்து தவஞ்செய்திருப்ப, பரமசிவம் சகல தேவர்கள் நெருங்க வந்து தரிசனங்கொடுத்து நீங்கள் செய்த சிவாபராதத்தை இக் கௌரிதீர்த்தமும் பிம்மகா லிங்கமும் விரைவிற் றுலைத்துவிட்டது எனத் திருவாய் மலர்ந்தருளி புதிதாக ஒரு அண்டம் வகுத்து பிரம விஷ்ணுவாகப் போகும்படி வரமருளியது கண்டு அவ்விருவரும் நமது நற்கால மிதனோடு துலைந்தது, அந்தப் புடைக்குட் சென்றா லென்னாண் மீட்சி பிறக்குமோ என நினைத்து துதித்து பலவித நமஸ்காரஞ் செய்து தம்மிருப்பிடம் புக்கினர்.

## 7-வது அத்தியாயம்.

## பார்வதிக்கும் லட்சுமிக்கும் நடந்த சம்வாதம்.

மகாமேருகிரிச் சார்பில் ஓர் தினம் பார்வதியும், லக்ஷ்மியும், சரஸ்வதியும் அநேக யக்ஷ ஸ்திரிகள் புடைசூழவிருந்து பந்தாட்டல், அம்மானைப் பயில்தல் முதலிய பலவித விளையாடல் புரிந்திருக்குங்காலை உமாதேவியார் சிவபிரானது சீர்

திலைப் புகழ்ந்தனர். அது செவியுற்ற திருவாள் சற்றுக் கோபித்து, நாராயணனே, அநேககிருத்தியஞ் செய்திருக்கின்றனர்; அவருக்குப் பெரியோ ரொருவருமில்லை என்றுரைத்தல் கேட்ட உமையாள், சாஸ்பதியை மத்தியஸ்தமாக வைத்து, நாளை நானுரைக்குங் கதையை நீ அறிந்ததாக கூறில் உனது நாயகனே உயர்ந்தவரென்றல் கேட்ட லக்ஷ்மி, வைகுண்டமடைந்து தனது கணவரிடம் நடந்த வர்த்தமானங்களுரைத்தனர். அதுகேட்டு அவர் பதைபதைத்து, "இதனால் என்ன தீங்கு விளையுமோ?" வென நடுக்கமுறல் பார்த்த கோகனகை, "யாது வரினும் வருக. நீரெனக்காக என்ன செய்தாவது அவன் சொல்லுங் கதையை யானறிந்ததாகச் சொல்லுமபடிக்கான ஏற்பாடுசெய்தன்றி யுமையிடம்" என வற்புறுத்தி பிரார்த்தித்ததின்மேல் திருமால் சற்றுலோசித்து, கைலாயத்திற் சிவபிரானிடஞ் சதாகால மூழியஞ்செய்கின்றவாயுந் தனக்கு சிநேகருமான நந்திகேயரென்னுங் கணநாதரை அழைத்து இந்த விபரங்களை உள்ளபடி மொழியவும், அவர் நடுநடுங்கி மறுத்தமைக்காக அவரைச் சிநேக வார்த்தைச் சுட்டபடுத்தி பலவாறு போதித்து சம்மதிக்கச் செய்தனுப்பினர்.

உமாதேவியார் திருக்கைலையடைந்து சிவபிரானை வணங்கி நடந்தவாறு தெரியப்படுத்தி, "இக்காலத்துப் பிரமவிஷ்ணுக்களறியாத முக்கிய கதைகளை எனக்குச் சொல்லியருளல் வேண்டு"மெனப் பிரார்த்தித்தனர். அதற்காக கைலாசவாசர் உத்தரவாகுங் கதைகளை நந்திகேயர் கேட்டு உடனுக்குடன் லக்ஷ்மிக்குக் கூறிவிடுவர். அவரும் அதைக்கேட்டபடி முன்சென்ற தானத்தில் உமையாளது கதைக்கு ஆரம்பித்து கூறுமுன் விமலையு "மிது யானறியாததோ?" வென எஞ்சிய பாகத்தை முடித்துவிடுவள். இவ்வாறு நாற்றிரண்டதை சிவகாமி உரைக்கவும் சிறுதேவி கூறிவிட்டதினாற் பராசக்திக்குக் கோபமுண்டு சிவபிரானிடம் வந்து "நீர் புகன்ற கதைகளியாவும் அவளறிந்ததாக விருப்பதால் நீர் என்னை இகழ்ச்சி செய்தற்காகவோ, அல்லது நீர்



அறிந்ததை அங்ஙனக்கூறினீரோ" வெனப் பலவாறு கடுமை கூறியதறிந்த பரமசிவம், 'பேதமை பெண்பாலார்க்கணிகலம்' என நினைத்து சற்று புன்னகைகொண்டு அருகு நிற்கும் நந்திகேயரைக் கூவி ஓர் திருப்பணிக் கேவிவிட்டுத் தேவியரை நோக்கி, "நீ இன்று கதை கேட்டுச் சென்றால் அவளறிந்ததாக புகலமாட்டா" ளென்றுந் திருவாய்மலர்ந்தருளி, ஓர் கதை மொழிந்தது கேட்ட உமாதேவி வந்து கதை கூறுங்கால் விமலை மௌனமாக விருந்தனள். சத்திதேவி மகிழ்ந்து "நேற்றுவரை மிக்கதைகளை யாரால் தெரிந்து கூறினை" யென வினவவும், லக்ஷ்மி வெட்கி "மன்னிக்க வேண்டு" மெனப் பணிந்தும், உடல்கோட்டம் விடாது கைகோத்துவந்து தனது பிராணிடம் இவ்வாறு மொழிந்து, நேற்றெல்லாம் அவனி யாரறிந்தனை யென்பதை உத்திரவாக வேண்டுமெனப் பணிந்தமைக்காக நடந்ததைக் கூறி, 'சிறியோர் பெரும்பிழை செய்தனராயிற் பெரியோ ரப்பிழை பொறுத்து மகிழ்க' வென்றபடி இது பெருந் தப்பிதமானதும் குறைந்த தண்டனை யருளுமென் றருளிச்செய்தனர்.

---

## 8-வது அத்தியாயம்.

---

## லட்சுமி முதலியோர் சாபமடைதல்.

உமாதேவியார் மறுதினமும் அத்தலத்திற் சகல தேவர்களிருக்க இருப்ப, லக்ஷ்மியை நோக்கி, "நீயே ஆற்றலுடையை, உமது பக்தனே பாக்கியமுடைய" னெனக் கூறக்கேட்ட திருவெட்கி வந்தனஞ் செய்யுமைக்காக இக்கதைகளியாரால் அறிந்தனை யெனக் கேட்டு விமலையாவேயே சகலமு முள்ளபடி பயிந்து, மௌனமாக அங்கே சென்று சிவபிரானை பணிந்து நமஸ்கார உபசாரஞ்செய்து, "எனது பேதமையால் நாமது மகிமை அறியாது பிதற்றியதை மன்னித்து அதற்கு பிராயச்சித்தங் கட்டளையிட்டருளல் வேண்டு" மெனப் பிரார்த்தித்துக்கொண்டு அருகு நிற்கும் நந்திகேய

யரை நோக்குங்கால், பரமசிவம் தேவியாரை "நிற்க" என்றுரைத்து, விஷ்ணு, லக்ஷ்மியை அழைத்து ஒவ்வொருவருக்குஞ் சொற்ப சாபங் கட்டளையிட்டருளினர். அதாவது, லக்ஷ்மி ஓர் விடும் நிலையின்றிப் பல ஜாதிகளிலுந் திரிந்தலைகவென்றும், விஷ்ணுவினொரு கலை பூமியின்கண் [illegible] மாதரிடஞ் ஜனித்து வியாசரெனும் பெயர் படைத்து அநேக புராணங்களைப் புவியோர்க்கு வெளிப்படுத்தியும் சிநேகமாயிருந்த நைகுமேயர் பகையாய்ப் பலவித நிந்தை கூறியும் ஓர் கற்பகாலமிருந்து பின் வைகுண்ட மடைகுகவென்றும், நைகுமேயர் காசியிற் பிராமணகுலச் சேஷமகனி யென்னும் பெயர் படைத்திருந்து வியாசரை இழிவு பேசி அநேக பிரபந்தங்கள் செய்தும் பின்பு கைலையடைகுகவென்றும், உத்தரவானதுந் தவிர தேவியை நோக்கி, "நீ காசி க்ஷேத்திரத்திற் பன்னிரண்டு வருஷம் தவஞ்செய்தா லுனது குற்றம் நீங்கும், பின்பு நாமங்குசென்று அழைத்துக்கொள்வோ"மெனவும் உத்திரவு செய்தருளினர்.

---

## 9-வது அத்தியாயம்.

---

## லட்சுமிமுதலிய நால்வர் பூசித்தருள்பெற்றது.

இவ்விதஞ் சாபமடைந்த நால்வருங் கைலாசவாசரது திருவடித்தாமரையை வணங்கி, அவ்விதம்மாவது கருணைகூர்ந்து ரக்ஷித்துக் காப்பாற்றல் வேண்டுமென்று பலவிதமாக இரந்து வேண்டிக்கொண்டு, உமாதேவியார், கௌரியெனுந் திருநாமத்தோடு வாரணாசிக்ஷேத்திரத்திற் றவஞ்செய்திருப்ப, பன்னிரண்டு ஆண்டின்மேற் பசுபதிக்குந் திருவுளந் திரும்பி, சிராவண இந்துவார பௌர்ணமி தினம் ரிஷபாரூடராய்க் காட்சிகொடுத்து, உனது தவத்தை மெச்சினமென்று சிரமசைக்குங்கால், ஈசுவரனது காதிலிருந்த ஸ்ரீமகர குண்டலம் நிலத்தினழுவிக் காணாதொழிந்தமையை வியப்புறுத் தேவியார் நோக்க, அவ்விடத்தோர் தடாக



முண்டாகின. பரமசிவம் உமாதேவியாரை நோக்கி, இத்தீர்த்தம் யாவற்றிற்கு முன்னம் நமது குண்டலம் விழுந்ததாலிதற்கு ஆதிமணி கர்ணிகை என்றும், உனது தவத்தின் பொருட்டுண்டாகியதாற் கௌரிதீர்த்தமென்றும், பின்வரும் பல காரணத்தாற் பல பெயருமுண்டாகுக என்றும் அருளிச்செய்து, நீ இத்தடத்து மூழ்கி இவ்விலிங்கத்தைப் பூசிக்குகவென்றருளியபடி, ஸ்நானஞ்செய்து அம்மகா லிங்கத்தைப் பூசித்துத் தோத்திரஞ்செய்து நிற்க, பரமசிவம், தேவியார் திருக்கரம் பற்றி வாகனத்திருத்தி உமாமகேஸ்வரராகத் திருக்கைலைக்கேகாநின்ற சமயத்திற் கௌரியார் பசுபதியை வணங்கி, அடியாள் தவஞ்செய்த இத்தலத் திறந்தவர்களுக்கு உமது சாயுட்சிய பதவியடையவும், இத்தடத்து மூழ்கி இவ்விலிங்கத்தைப் பூசித்தோர் சகல பாவத்தினின்றும் விடுபட்டு தர்மார்த்தகாமமோக்ஷமாகிய நால்வகைப் புருஷார்த்தங்களையு மடையும்படிக்கு வரமருளல் வேண்டுமென மன்றாடிக் கேட்டுக்கொண்டபடி உத்தரமருளி, தேவியாரைத் திருக்கைலைக்கு அழைத்துச் சென்றனர்.

லட்சுமி தேவி காசிக்ஷேத்திரத்தில் வந்து தவஞ்செய்துத்தன் பெயரால் தீர்த்தமும் மகாலிங்கமு மமைத்துப், பூசித்துங் கௌரிதீர்த்த ஸ்நானமுங் கேதாரீசுவர பூசையுஞ் செய்திருப்ப, பரமசிவங் கிருபை பாலித்து, சைத்திர பூர்வ சதுர்த்தசிதினம் காட்சிகொடுத்து, உனக்குற்ற சிவாபராதம் நீங்கிற்று, நீ ஒருவர்பால் நிலையாகவிருந்துவிடுவாயாகில் உலகர் தரித்திரராவர், ஆகலால் தேவர், நாகர், மனிதர் முதலிய சகல சிவாலயத்திலும் உன்னிலொரு கலை சஞ்சரித்து நிலையின்றியிருந்து வருகுகவென் றருளிச்செய்தனர்.

நைகுமேயரெனுங் கணநாதர், காசியிற் பிராமணகுலத்திற் பிறந்து, சேஷமகனி எனும்பெயரோடு அநேக பிரபந்தங்கள் உலோகோபகாரமாகச் செய்தும், வியாசர் செய்யும் பிரபந்தங்களை இழிவு பேசியுமிருக்குங்கால், ஓர் பகல் வியாசலிங்கத்தைக் கண்டு, "ஓ, ஜகாரக்குச்சி" எனக் கொம்பினால் அதிலடித்தபொழுது, அவ்விலிங்கத்தினின்றும் வியாசருதய

மாய் வெகு கோபத்தோடு க்ஷேமகவி முன்னிருந்து அவன் செய்த அற்புத சுலோகங்களை எடுத்துக் கங்கா நதியில் விடுத்து, க்ஷேமகவியையும் பலவிதமாக நிந்தை கூறிய வியாசரை நோக்கி, "நீ ஒரு சுலோகமாவது உதாரம் வாராமற் சொல்வாயாகில் உன்னை மகா வித்வானாக மதிப்பேன்" என்று க்ஷேமகவிமுன் வியாசருக்குச் சொல்ல வாராமையால் நீ தான் கூறென் றுரைத்ததற்காக அனேக சுலோகங்களை க்ஷேமகவி உரைக்கக்கண்ட வியாசர், இவனென்ன விவ்விதஞ் செய்கின்றனனென் றன்னிச் சங்கரரைத் தியானித்திருந்தனர். அதற்காக மகா தேவர் அங்கெழுந்தருளி, க்ஷேமகவி உரைத்த சுலோகத்தைப் புகழ்ந்து, "நீவிரிருவருமிருந்த இலோகத்துக்கு இவ்வாறுச்சு" தெனப் பூர்விக வர்த்தமானங் கூறினர். சிவபிரானை தரிசித்த இருவரும் பலவித அஷ்டாங்க பஞ்சாங்க நமஸ்காரங்களைக் குறைவறச் செய்து, இவனென் கவியை அவமதித்து சில கவி செய்தனன். அவைகளைப் பாராயணஞ்செய்வோரியாவரும் பிரமக்ஞானம் பிறந்து கைவல்லிய மடைவர், இம்லோகம் பாழாய்விடும், மற்றும் புராண இதிகாசங்களை ஒருவருஞ் சிந்திக்கமாட்டார்களென் றெண்ணி அவைகளைக் கங்கா நதியில் விடுத்தும் அது எதிரேறியே சென்றது. என் கவிகளை இவன் அவமதித்தனனென வியாசர் பணிந்துரைத்தமைக்காக இனி வியாசர் செய்யும் நூலுக்குப் பழுதுரைத்தவன் நரகமடைவன் எனத் திருவாக்கருளியும் க்ஷேமகவி செய்த பிரபந்தங்களையு மவராற் பூசிக்கப்பட்ட க்ஷேமேஸ்வர மகா லிங்கத்தையும் பார்த்து அனுக்கிரகித்து, இவ்விலிங்கம் பூசித்தவர்களுக்கு நான்கு வித பதவியில் விரும்பியது கொடுக்கும் இக்கவிகள் மிகவும் பரிமளமாக இருப்பதால், இது செய்த உனக்குப் புஷ்பகந்தனெனப் பெயராகுகவென் றருளிச்செய்தனர். அதுகேட்ட புஷ்பகந்தன் முறைப்படி மீட்டுந் தொழுது, நானெழுதி வைத்த உமது அரிய புகழை எல்லாங் கங்கையில் வாரி விடுத்தனரெனத் துக்கிக்க, அவைக ணமக்கு அற்புதமானதால் அவைகளைக் கைலைக்கழைத்துக்கொண்டோம். நீ என்



முன் செய்த அரிய சுலோகங்களைப் பாராயணஞ் செய்வோரும் பிரமக்ஞானமடைந்து நம்முலகடையக் கடையிலை. நீ இத்தடத்து சூழ்நி இவ்விலிங்கபூசை புரிகவென்றருளிய திருவாக்குப்படி புஷ்பகந்தன் கௌரிதீர்த்த ஸ்நானமுங் கேதாரீஸ்வர பூசையுஞ் செய்யுங்கால் விமானமீது விஷ்ணு முதலிய தேவர்கள்சூழ வந்தழைக்கத் திருக்கைலை சென்று முறைப்படி தொழுது நிற்க, முன்போல கணநாதராகவென் றருளியபடி சிவகணநாதராக வைகினர்.

விஷ்ணு பராசமுனி புதல்வனுக மச்சகந்தி வயிற்றிற் பிறந்து வியாசனெனும் பெயரோடு பதினென் புராணங்களையு மியற்றியிருக்குங்கால் ஓர் தினம் பல ருஷிகள் கேட்டமைக்காக, விஷ்ணுவுக்கே பரத்வமெனக் கூற, அம்முனிகணங்கள் இடுக்கிட்டு சிவபிரானுக்கே பரத்வமெனப் பலகால் மொழிந்தும் நின்று மறுத்துரைத்தமையாலதைக் காசி விஸ்வேசர் சந்நிதியினின்றும் உண்மையா யுரைப்பீரெனப் பகர்ந்தனர். ஆசந்நிதியினின்றும் அசத்தியம் பேசிய வியாசரை நந்தி தேவர் கோத்தினமையாற் கைபுஜாவுமெழாமற் கர மறுமனின்றபோதுணர்ந்த பல் முனிவரும் இகழ்ச்சிக்கு வதலித்த வியாசர் திருமாலைப் பிரார்த்திக்கவும், அவர் வந்து நீ தகாதகாரியஞ் செய்தனை, சகலவேதங்களு மீசனையே புகழ்ந்திருத்தலை அறிந்தும் செய்த அபராதம் நிவிர்த்திக்காக பரமசிவத்தைத் தியானித்து வணங்கி நிவிர்த்திக்கக்கொள்ளென் றுரைத்துச் சென்றனர். இதுணர்ந்த வியாசரிஷி, எனது அப்பிரதம் நீங்க, திருவைபவத்துரைத்தல் வேண்டுமென விசுவநாதரை வழிபட்டிருந்த, கையுகரவுங்கரமுமெழப்பெற்றனர். பின்னுங் காசியை இகழ்ந்து திரியும் வியாசருண்மையறியும்படி இரண்டு தினம் வியாசனுக்கமுதளிக்கற்க என அன்னபூரணியாருக்கு முதல்வனருளிய திருவாக்குப்படி வியாசர் பரிசனங்கள் காசிக்குட் பலசாற் சென்றும் அவர்களுக்கு ஆகாரங் கிடைப்பதரிதாயிட்டன. அது தெரிந்த வியாசர், சிஷ்யரை நோக்கி, இப்பட்டணத்து ஏதாவது கிடைக்குண்டோ? வென வினவுங்கால் நீங்கு ஒன்றுமகப்படவில்லை, பிச்சை கிடைக்கவுமில்லை யென

றுரைத்ததினாற் பசியால் வருந்திய வியாசர், காசிக்கு தர்மார்த்தகாமமோக்ஷமில்லாதுபோகவெனச் சாபமிட்டுச் செல்வதறிந்த சிவபிரான், அன்னபூரணியாரால் வியாசரைப் பிக்ஷைக்கழைக்கவும், இந்நகரெங்கு மிரண்டுதினம் அமுதளித்தாயிற்று, இப்போதழைத்த உன் மனை எங்கென வியாசர் வினவவும், அம்மையார், நீ உட்காருமிடந்தானென் வீடென்றுரைத்தபின்னரும் அஃதறியும்படி அவ்விடத்தே யுட்கார்ந்தனர். அத்தலமாடமாளிகையாக விருந்தது. வியாசருக்கும் பரிசனங்களுக்கும் பலவித பலகாரவற்கத்துடனமுதளித்தனர். வியாசர்முதலியோர் ஆகாரஞ்செய்தெழுந்து போகுங்கால் அவரை நோக்கி, உலகத்துள்ள ஸ்திரீ புருஷர் நடக்கும் விதி யாது? என வினவும் அன்னபூரணியாருக்கு, இன்சொல், கோபமின்மை, தானம், தவம், கருணை, துணிந்து கூறுமை, பொறுமையின்மை, கொல்லாமை முதலியவெனக் கூறும் வியாசரை, இச்செய்கை யுனக்குளவோ? என அம்மை கேட்ப, எனக்கு அஃது இல்லை என்ற வியாசர்க்கு, அற்றேல் நீ காசிக்குக்கூறிய சாபம் பலிக்குமோ? என வினவிய தாயாருக்கு அச்சாபமும் பலிக்காதென வியாசர் வாக்காலே சொல்லியும் நீ காசிக்கு தீங்குநினைத்தமையா லிதினின்றும் வெளியேறுகவென்ற திருவாக்குப்படி கங்காநதியின் கீழ்க்கரையிற் போயிருந்து பறேரூர் காசி ஸ்தாபித்து அதற்குப் பல மகிமைகளேற்படுத்துவதறிந்த விசுவநாதர் கணபதியை அழைத்து நீ போய் அத்தலத்தை நிவர்த்தித்துவருகவெனக் கட்டளையிட்டது கேட்டெழுந்த விநாயகர், வியாசரிடம் ஓர் பிரமசாரிபோற் சென்று, எனக்கு ஸ்ரீ காசித்தலமான்மிய முரைக்கவேண்டுமென்றதற்கிணங்கிய வியாசர், உள்ளபடி காசிமான்மியம் பூர்வ முறைகேட்டெழுதிக்கொண்டு கீழ்க்கரை காசிமான்மியங்கூறும்படி பன்முறை கேட்க, அவை பின்பு சொல்வோமென்றதற்கிணங்கியபின் கங்காநதிக்கேகி நிற்குங்கால், இவ்விடத்தின் மகிமை யாது, இதிலிறந்தவர் கதி என்னவென வினவும், ஐங்கரனுக்கு, இதில் மரித்தோர்க்குக் கழுதைப் பிறப்பென வியாசர் கோபத்தான் மொழிந்தமைக்காக ஆனைமுகன் சிரி



த்து நிற்க, கண்ணுற்ற வியாசரிவரை வணங்கி, நீரே இவ்வாறு செய்வித்தாரென்செய்வதியாதென துக்கிக்கவும் வியாசர் செய்த குற்றங்களை வகைவகையாகக் கூறினமைக்காக என் சாபத்திற்குப்பிறகும் எனது குற்றங்களை ஒழியாது புகன்றனன், அதினாற் சாபநிவிர்த்தியாய்விட்டதென் றுரைத்த வியாசருக்கு இனியும் காசித்தலத்திற்கு யாதொரு தீங்கும் நினையாதீரென்று அருளிச்செய்து, சிவபிரானிடமெழுந்தருளிய கணபதியை அம்மையப்பர் புகழ்ந்து, தாயார் சிந்தையை மகிழ்வித்ததினால் உனக்கு சிந்தாமணி விநாயகனெனப் பெயராகுகவென றருளிச்செய்தனர். வியாசர் காசிக்கு அநேக தீங்கு நினைத்தும் விசுவேசர் அன்னபூரணி கிருபையினாலே ஒன்றும் குறைவேறவில்லை. பின்பு விசாலாக்ஷியே கதி என்றெண்ணி கேதார கௌரிதீர்த்த ஸ்நானமுங் கேதாரீஸ்பர பூசையுஞ் செய்து பன்னிருக்குப்பின் சிவபிரானுக்கு கிருபைபெருகி தினம் ஒருகால் வந்து ஸ்நானம் தரிசனஞ்செய்து மீளுகவெனத் திருவாய் மலர்ந்தருளிய பிரகாரம் இன்றும் மாத்திரான ஸ்நானத்துக்கு வருவதாகக் கூறுவர்.

---

## 10-வது அத்தியாயம்.

---

### ஷேமகவி செய்த சமஸ்கிருத ஸ்லோகம்.

1. மஹிம்னஹ பாரம்தே-பரமவிதுஷோயத்யஸத்ருசீ-ஸ்துதிர்ப்ரம்ம மாதீனு - மபிததவஸந்நா - ஸ்த்வயிகிரஹ - அதாவாச்யஹ சர்வ - ஸ்வமதி பரிணாமாவதி க்ருணன்மமாப்யேஷ - ஸ்தோத்ரே - ஹரநிரபவாதஹ பரிகரஹ.

2. அதீதஹ பந்தானம்-தவச மஹிமா-வாங்மனஸயோ-ரதத்வ்யாவ்ருத்யாயம் - சகிதமபிதத்தே - ச்ருதிரபி - ஸகஸ்ய ஸ்தோதவ்யஹ - கதிவிதகுணஹ - கஸ்யவிஷயஹ - பதேத்வர் வாசீனே - பததி நமனஹ கஸ்யனவசஹ.

3. மதுஸ்பீதாவாசஹ - பரமமமிருதம் நிர்மிதவத - ஸ்தவ - பிர்மமன் - ஸிம்வாகபி - சரகுரோர் விஸ்மிதபதம - மம த்தேவ - தாம்வாணீம் - குணகதனபுண்யே - ஈபவதஹ - புனமீ த்யர்தேஸ்மின் - புரமதன - புத்திர்வ்யவஸிதா.

4. தவைஸ்வர்யமயத்தஜ்ஜகதுதய-ரக்ஷாப்ரளய-க்ருத் ரயீவஸ்துவ்யஸ்தம் - திஸ்ருஷு குணபின்னாஸு தநுஷு - அப வ்யானுமஸ்மின்வரதரமணீயாமரமணீம - விஹந்தும் வ்யாக் ரோஸம் விதுதத இஹைஹகே ஜடதியஹ.

5. கிமிஹஹஹகிம்காயஹ சகலுகிமுபாய ஸ்திரிபுவனம்- கிமாதாரோ தாதா - ஸ்ருஜதிகிமுபாதான இதிச - அதர்கைஸ்வர் யேத்வ - ய்யன வஸ்ரதுஸ்தொஹத்தியஹ - குதர்கோயம் காம்சின்முகரயதி - மோஹாய ஜகதாம்.

(வசனம்.) இவ்விதம் நூறு சுலோகம்வரையுள்ளன. அதிலிவ்வைந்தும் வரைந்தனம். இதை நாடோறும் பாராய ணஞ்செய்தால் உருத்திரஜெபஞ் செய்தவராக்கும். அன்றி யும் அவர்களுக்கு பரமஞானமுமுண்டாம்.

---

## 11-வது அத்தியாயம்.

---

### கங்கை; யமுனை வரலாறு.

திருக் கைலாயத்திற் சிவபெருமானுந் தேவியாரும் வீற்றிருக்கும்பொழுது சூரிய சந்திரர்களியாவரெனத் தேவி யார் கேட்கப் பரமசிவம், நமது நேத்திரமென் றுரைக்கவும், அதனுண்மையறியும்பொருட்டு உமாதேவியார் தமது திருக் கரத்தால் அரனது நேத்திரத்தை மூடினர். அவ்வுஷ்ணத் தாற் கரங்களினின்றும் வெயர்வு உண்டாய் நிலத்தில் விழுந்து சிவ கிருபையாற் பெருக்கெடுத்து ஆகாயமளாவி நின்றமையால் தேவர்கள் முதலியோர்க் கிருப்பிடமின்மையால் அவர்கள் வந்து முறையிடவும் சிவபெருமான் அக்கங்கையை அழைத்து, தமது திருச் சடையிலும் அர்க்கிய பாத்திரத்திலும்



வைத்தனர். இதையறிந்த பிரமன் சிருஷ்டி காரியத்துக்குக் கொஞ்சம் கங்கை கொடுக்கவேண்டுமெனப் பலகாலம் தவ மியற்றியதினாலோர் கமண்டலம் கங்கை நிரப்பிக் கொடுத்த னர். அதை வைத்து பிரமன் சிருஷ்டித் தொழிலைநடத்தியிருக் குங்கால் அயோத்தி அரசனான சகரர் அறுபதினாயிரம் பெய ரது பிதா அசுவமேதயாகஞ் செய்வதற்காக் குதிரையை வெளியே அனுப்பி இருக்கக்கண்ட தேவேந்திரன், கவலை யோடு இவன் முன்ன மியாகந் தொண்ணூற்றொன்பது முடித்திருந்தானாதலால் இந்த யாக முடிந்தால் இந்திரப்பட் டத்துக்கு வரத் தடையில்லை என யோசித்து வஞ்சிக்க நினை த்து, தேவர்களால் அவ்வசுவத்தைக் கொணர்ந்து கபில முனிவர் ஆச்சிரமத்தின் கீழ்நிலவறையிற் கட்டிவைத்தனன். சகரர்க ளிதையறியாது பூமி யாவற்றுந் தேடிக் காணமையாற் பூமியை வெட்டிச் சோதனை செய்தனர். அதனாலே பூமியிற் சமுத்திரமுண்டாகியது. முடிவில் கபில முனிவர் ஆச்சிரமத் தின்கீழ் அசுவங் கட்டியிருக்கக் கண்டு அவ்விருஷியைப் பல வாறு வைதுண்டு இகழ்ந்தனர். அதுகண்ட யாதொன்றுமறி யாத கபிலமுனிவர் சகரரைச் சீறி நோக்கினமையால் அவ்வ ரசர்களியாவரு நீறு சாம்பலாகப் போயினர். பின்பு அக்குடும் பத்துள்ள பலர் முயன்று முடிவுபெறாது பின்னுதித்த தவக் கடல்போன்ற அழியாத் திருநாமமுள்ள பகீரதனுக்குப் பல ருஷிகளருளிய திருவாக்குப்படி சகரர்களுக்கு மோக்ஷப்பதவி அடைவிக்கும்படி பிரமாவிடமிருக்குங் கங்கையை விரும்பி பதினாயிர வருஷந் தவஞ்செய்தபின் பிரமா பிரத்தியக்ஷமாகி என்னிடமிருக்குங் கங்கை சிருஷ்டி தொழிலுக்கு வேண்டும். அன்றியுஞ் சிவபிரானுத்தரவு வேண்டுமென்றுரைத்தபின் சிவபெருமானைநோக்கி பல தடவல் தவஞ்செய்ததை விரிக் கிற் பெருகும். இறுதியாகக் கங்கைக்குடத்தரவு கொடுத்த னர். அதுகண்ட கங்கை, வெகு கோபத்துடன் உலகமியாவு மழிக்கப் புகுந்ததுகண்டோ ரியாவருஞ் சிவபிரானிடமுறை யிட்டபின்னர் கைலாயநாதர் சீறிநோக்கியதால் வற்றிப்போ யது. உத்தரவுமீறி யுலகமழித்ததாற் கங்கைக்குச் சிவபாத

மும் வந்து. மீண்டும் பகீரதன் விடாது தவஞ்செய்யப் பிரத்தியக்ஷமான சிவபிரான் திருச்சடையின் வழியாய்க் கங்கையைப் பல பிரிவுகளாக விடுத்தும், பகீரதனது தேர் வண்டித் தடத்தின்வழி போகும்படி உத்தரவுசெய்யச் செவியுற்ற கங்கை, நானறியாது மோசம் போனேன்; என்னைச் சாக்க வேண்டுமென்றும், உம்மைப் பிரிந்து எவ்விதமிருப்பேனென்றும் துக்கித்துப் பலவகையாகத் தோத்திரித்தமையாற் பரமசிவத்துக்கு கிருபை பெருகி, நீ பல பிரிவுகளும் ஏழு பிரிவுகளாக மகாமேருகிரிச் சாரலிலிருந்தால் நாம் அங்கு உமாதேவி தவத்திற்கிரங்கி யவளை மணஞ்செய்ய வருவோம். அப்பொழுது உன்னையு மணந்துகொள்வோமென் றுத்தரவு கொடுக்கக்கேட்ட கங்கை, உமது திருச் சடையினின்றும் வெளியேறிப் போவதினாலென்னைத் தரித்தோர், பரிசித்தோர், ஆடினோர் சகல பாவிகளாயினும் அவர்கள் நான்குவிதப் பதவியிலொன்று விரும்பினும் அப்பதவியடைய வேண்டுமென வுங் கேட்டுக்கொண்டபடிக்குந் தவிர மின்னுமனேக புத்திமதிகளு மருளிச்செய்தனுப்பினர். அதிலொரு பிரிவு பாதாள லோகத்துக்கும், ஒன்று தேவலோகத்துக்கும், ஒன்று நதமாக மேற்கே செல்லவும்; ஒன்று காஷ்மீர் முதலிய தேசத்துக்கும் அனுப்பி, எஞ்சிநின்ற கங்கை, மந்தாகினி, அளகநந்தா முதலிய பல பிரிவுகளும் பகீரதனது தேர் வண்டித் தடத்தின் வழியாய்ப் புவியிற் செல்லுங்கால் அருகில்யாகஞ் செய்திருந்த ஜன்னுமகருஷி யாகசாலையை அழித்துப் பெருக் கெடுத்துச் செல்வதறிந்த ருஷி கோபத்தோடு அக்கங்கையைப் பருகி நின்றனர். பகீரதன் பின் சென்ற கங்கையைக் காணுதொழிந்தமையா லிஃது இம்முனிவரால் நேர்ந்ததென உடனடுத்து அவ்விருஷியைப் பலவித வந்தனம்புரிந்து ரக்ஷித்தல்வேண்டுமெனப் பலகாலிரந்து பிரார்த்திக்கக் கண்ட ஜான்னுமகருஷி பரிதபித்து உன்மீது குற்றமில்லை. கங்கை முன்னாளு சிவபிரானருளிய உத்தரவை மீறியதாற் சிவாபராதமேனேர்ந்தது; அதுவே யிதற்கெல்லாங் காரணமெனப் புகன்று தமது செவி வழியாய் விடுத்தனர். பின்பு கங்கை அவ்விருஷியைப்



பலவாறு வணங்கி அச்சிவாபராதத்திற்கு விமோசனமுரைக்க வேண்டுமெனப் பிரார்த்தித்த கங்கைக்கு அது மற்றோர் தலத்திலு நீங்காது காசியிற் கௌரி தீர்த்தத்து முழுகி அதனருகிலிருக்குங் கேதாரீஸ்வர மகாலிங்க பூசையுஞ் செய்தா னிவர்த்தியாயிடுமென் றுரைத்ததைக் கேட்டு வணங்கி யவ்விருஷியிடம் விடைபெற்றுக்கொண்டு பகீரதன் தேர்வண்டித் தடத்திலடங்கி வேகமாய் வருவதறிந்த யமுனை, எவரோ, புதிதாயொருவர் வருகின்றனர், அவரை யாவரும் புகழுவர், நாமிங்கு முன்போற் செல்லல் தகாதென்றெண்ணித் திரும்பி மேற்கே யமுனை செல்வதறிந்த கங்கை பிரயாகையிற் சிறிது தூரம் அந்நதி யூடுசென்று யமுனையை அழைத்து நாமிருவருஞ் சேர்ந்து போகுவமெனப் புகன்றதுணர்ந்த யமுனை, நீ யார்? உனது வர்த்தமானமியாது? கூறுகவென்றமைக்காக கங்கை தனது வரலாறுகளை விபரமாகச் சொல்லியபின்னர் யமுனையை நோக்கி, யுனது வர்த்தமானமேதென, யமுனை புகலுற்றனர். நான் சூரியனது பத்தினியான உஷாதேவியின் புத்திரி. எனது தாய் கணவனுடைய உஷ்ணந் தகிக்காது தனது சாயலை ஓர் ஸ்திரீ வடிவமாக்கி யவளைப் பெண்களையும் வைத்து வனசஞ்சாரஞ் சென்றனள். அந்த சாயாதேவி எங்களை ரக்ஷிக்கவில்லை என, என் தமையனான யமன், தகப்பனிடந் தெரிவித்ததற்காக தகப்பன் அவளைப் பன்முறை கண்டித்துங் கேட்காததால் எங்களிருவரையும் தன் பிதாவான பிரமாவிடங் கொண்டுசென்று நடந்தமை தெரியப்படுத்தவும், அவர் என் தமையனை யமலோக அரசனாக அனுப்பிவிட்டு எனக்கு உத்தரவு கொடுத்ததாவது, நீ நதியுருவாயிருந்து தவஞ்செய்தால் கிருஷ்டணன் வந்துன்னை மணந்து கொள்வனென்று முன்னது நதி தீர்த்தில் வசிக்கின்றவர்கள் வெகு பக்திமான்களாயுந் தவசாலிகளாயுமிருந்து சுவர்க்க போகமுஞ் சிவபதமுமடைவர்களெனப் பல வரங்கொடுத்தனுப்பினர். அதுபோல நானிங்கு பலர் பாவங்களை தீர்த்து வருகின்றனன். நாங்கள் தங்கள் செய்த யாகத்துக்குச் சென்றமைக்காக சிவாபராத நேர்ந்து பின்பு காசிகேதாரம் புக்கி

கோற்றுக் கிருந்தனவுஞ் சாற்றினள். கங்கை யமுனையி லெதிரேறிச் சென்றழைத்து மீண்டனளென்ற உண்மை தெரியவேண்டுவோர் இன்றும் பிரயாகையில் யமுனாநதியூடு கங்காநதி சிலதூரம் போய் மீள்வது பார்க்கலாம்.

## 12-வது அத்தியாயம்.

### சரஸ்வதி வரலாறு.

அருகே வருகின்ற சரஸ்வதியை நோக்கி, உனது வரலாறு யாதெனக் கேட்க, கூறத்தொடங்கின, பிரமன் என்னை உண்டாக்கி நோக்க, நான் மிகுந்த சௌந்தரியவதியாயிருத்தல் கண்டு என்னை இச்சித்தனர். நீர் படைத்தாய்க்கு நான் மகவாதல் வேண்டும். உம்மைச் சேர்வது ஒழுங்கலவெனப் புகன்றும் கேட்காது என்னை வலிந்திழுக்கப் புகுந்தது கண்டு நான் ஆட்டினுருவெடுத்துக் காட்டிலோடவும் அவரும் ஆட்டுக்கிடாயுருவெடுத்துத் தொடர்ந்து பிடிக்கக் கண்ட உமாதேவியார், உலகநாதனுக்குத் தெரியப்படுத்தியது கண்டு அவரோர் வில்லோடும் பின்றொடர்ந்து வருவதறிந்த பிரமன் வெட்கி விலகி நின்றனர். அவரைப் பரமசிவம் பார்த்து, நீ இவ்வித குற்றஞ்செய்தா லுலகிலுள்ளவர்களும் விதிப்படி நடப்பதெங்ஙனமென, நியாயம் போதித்தபின்னர் மன்னிக்கவேண்டுமென நமஸ்கரிக்கக்கண்ட பவானி, இவனைத் தூரத்திவிட்டாலிதுவே சிந்தையாய் திருட்டித்தொழிலிற் சிரத்தையற்று நிற்பன். ஆகலால் நாமிவனைச் சுவீகாரஞ்செய்து இவர்க்கே பாணிக்கிரகணஞ் செய்துகொடுப்போமெனத் தெரியப்படுத்தினமைக்காக அவ்விதஞ் செய்தனர். என்னிலொரு கலையைப் பிரமன் மணந்து சாவித்திரித்தா

5 முகம் 6 முகம் ருத்திராக்ஷங்கள் வேண்டுமா ?

ஸ்ரீ காசி கெ. எஸ். முத்தையா அண்டு கம்பெனிக்கு எழுதினால் சகாய விலைக்கு அனுப்புவார்கள்.



திசென்றனன். மற்றோர் கலையை நதிசொரூபமாய் அரிய வர்த்தமான தேசங்களிலுங் குருக்ஷேத்திரத்திலுஞ் சென்று அங்காகுள்ளவர்கள் பாவங்களை நீக்கி, அநேக யாகங்களைச் செய்து, சத்தியலோகஞ் சேர்வனெனப் பல வரங்கள் கைக்கூடான் அருளிச்செய்தபடி நானதி சொரூபமாய் வந்து அநேகர் பாவங்களைப் போக்கியும் பலரோர் கீர்த்தி கிருத்திய முக்தியினையும் தவமுஞ் செய்தும் சத்தியலோகஞ் சேர்ந்தனர் என்றனர்.

## 13-வது அத்தியாயம்.

### தேவ ஸ்திரீகள் தவஞ்செய்தது.

கேளாய் கங்கையே, எனது சரஸ்வதி நதிதீரத்திலுள்ள பாவரு மியாகங்கள் புரிந்து தேவர்களுக்கு அவிர்ப்பாகங் கொடுக்கின்றனரென்ற ஆவன்மிகுதியால் தேவர்களியாவரும் பூவுலகத்தினின்றுவிட்டனர். யாகபலன்களினாற் பூவுலக மனிதர்களியாவருஞ் சுவர்க்கலோகமும் அரம்பா ஸ்திரீ போகமுங் கிடைத்ததினாலந்த அரம்பையர்கள் பலகாலந் தவஞ்செய்திருக்கக்கண்ட வுமைபோர்பாகன் அவர்கள் தவஞ்செய்யுங் காரணந்தனைத் தெரிந்து, தேவர்கள் முப்பத்துமுக்கோடியபேர், அரம்பையர்களுக்குச் சங்கையில்லை, யாகமுதலிய புலத்தாற் சுவர்க்கபோகமடைகின்றவர்களுக்காகவே அரம்பையர்களை அதிகமாக வைத்திருக்கின்றனம். தவஞ்செய்தவீர்களைச் சேர்வதினாலுங்களுக்குக் கஷ்டமியாதுக்கென்று அவர்களை யனுப்பிவிட்டு, என்னைப் பார்த்து, நீ இனி மறைவாகப் பூமியின்கண்ணே சென்றுற்ற சிறிதுதூரத்தில் யமுனையுங் கங்கையும் வருவர், மூவருஞ்

பட்டு பீதாம்பரம் தேவையுள்ளவர்கள்

ஸ்ரீ காசிகெ. எஸ். முத்தையா அண்டு கம்பெனிக்கு எழுதிக்கொள்ளவும்.

சேர்ந்து சகலர் பாவங்களையு நிவிர்த்தித்துவிடுங்கள். நீங்கள் செல்லும் வழியிற் காசிக்ஷேத்திரத்தை யடைந்து, ஆதிமணி கர்ணிகை கேதாரீஸ்வர ஸ்நானபூசை முடித்து உங்கள் பாவங்களையும் போக்கி, அங்கு வந்து தவஞ்செய்யும் பிரமனையுஞ் சிந்தாக்கிராந்தனாக்கி, நீ அவனுடன் காசியிலிருந்தாற் கங்கை பகீரதன்கூடச் செல்லுமளவும் உத்தரவு கொடுத்தனனென்று சரசுபதி கூறினள்.

## 14-வது அத்தியாயம்.

### கங்கை வரம்பெற்றமை கூறல்.

சரஸ்வதி கங்கையைப் பார்த்து, உனது வரலாறு கூறென்றுரைக்கக்கேட்ட கங்கை, முன்னம் யமுனையிடஞ் சொல்லியபடி மொழிந்ததுமன்றி, சிவபிரான், நீ பங்கார மடைந்தாயாதலாற் சிவபாராதம் வந்தது, அதை காசி ஆதிமணி கர்ணிகை ஸ்நானமுங் கேதாரீஸ்வர பூசையினாலு நீக்கிவிடுவாயாக. மனிதர்களுக்கு கிரேதா யுகத்திலுக்குந் திரேதா யுகத்திற் பாதிப் புண்ணியசிந்தையுந், துவாபர யுகத்தில் அதிற் பாதியுமாகுங், கலியுகத்தில் லக்ஷத்திலொருவன் புண்ணிய சிந்தையாயு மற்றையோர் பாவசிந்தர்களாகி கடும் பாதகங்களைச் செய்து காமவெகுளி மயக்கத்திலகப்பட்டுப் பஞ்சபாதகங்களை அஞ்சாது செய்குவர். அவர்களுக்கு உதவிசெய்து ஈடேற்ற யாருமில்லை. அப்பாவிகள் வந்து உன்னைப் பரிசித்தால் அதற்காக நீ வருத்தமடைதல் கூடாது. என்னைப்போல நீயும் நிர்மலமாகவிருந்து அவர்கள் பாவத்தை நிவிர்த்தித்து இஷ்டகாமியார்த்தமும் பரகதியுங் கொடுக்கவேண்டும், காசி நகரமானது மற்றத் தலங்க

7, 8, 9, 10, 11, 12, 13 முகங்களுள்ள
ருத்திராக்ஷங்கள் வேண்டுமா?
ஸ்ரீ காசி கெ. எஸ். முத்தையா அண்டு கம்பெனியாருக்கு எழுதினல் சகாய விலைக்கு அனுப்புவார்கள்.



ளினும் விசேஷ புண்ணிய க்ஷேத்திரமாதலால் அதிலிருந்து அநேக பாவிகள் கிருதார்த்தராகின்றார்கள். அங்கு நின்று மியாவனொருவன் பிரயாகை, கங்கோத்ரி, கேதாரபருப்பதம், பத்ரிநாராயண முதலிய யாத்திரைக்குச் செல்கின்றானோ, அவன் நால்வகைப் பத்திகளையுமடைவன். நமது புத்ரீகேதாரத்தில் ஸ்நானம் பூஜை முடித்தவன் அடையும் பதவிக்கு எல்லையாகிய பத்ரிவிருக்ஷத்தின்கீழ் நமது நாராயணன் தவஞ்செய்ததாலையால் அது பத்ரிநாராயணமாயது. அவ்விடத்தில் பூசித்தவர்களடையும் பதவிக்கும் அளவில்லை. நமது பக்தனாகிய விமலாங் செய்த தவத்தாலன்னையு முமையையும் மகவாகப் பெற்றானே. அவன் தாமுமையை மணந்து கைலைக்கேகும்பொழுது கேட்டுக்கொண்ட வரப்படிக்கு அப்பருவதச்சாரலிலுள்ள சகல சர அசரங்களுந் திருக்கைலையை அடையச் சந்தேகமில்லை. சரஸ்வதியையு முன்னிலைகளாக பல நதிகளையுங் காசியிற் பாவிகளை ரக்ஷிக்கும்படி வைத்து கங்கைமட்டும் பகீரதன் மூதாதை முதலியோரை ஈடேற்றச் செல்லென உத்தரவு கொடுத்தபடி வருகின்றனென்றனள்.

## 15-வது அத்தியாயம்.

### காசியிலுள்ள தீர்த்தங்களைக் கண்ணுற்றது.

கங்கை, யமுனை, சரஸ்வதியு மொருவரையொருவர் அளவளாவிக் காசியை நெருங்கிப் பார்க்குங்கால், அத்தலத்தே லக்ஷ்மி தீர்த்தம், அம்ச தீர்த்தம், மதா தீர்த்தம், இரேதோதக தீர்த்தம், கௌரிகுண்டம் முதலியவற்றைக்

நயம் கஸ்தூரி வேண்டியவர்கள்
ஸ்ரீ காசி பட்டு வர்த்தகம் கெ. எஸ். முத்தையா அண்டு கம்பெனியாருக்கு எழுதிக்கொள்ளவும்.
கஸ்தூரி விலை தோலா 1க்கு ரூ 35.

கண்ணுற்று, அத்தீர்த்தங்களுக்குக் கெடுதியாக நாம் அழிந்துச் செல்வமாகில், அத்தனையுஞ் சிவாபராத னேருமெனக் கவர்ச்சியுற்றுக் கொஞ்சத்தூர மெதிரேறிச்சென்று சிவபிரானைப் பணிந்துநிற்க, ஓர் அசரீரியால் ஈஸ்வரன் நீங்கள் வர்களோடு மவர்களாயிருந்து சகலர் பாவங்களையு நிவிர்த்தியுங்களெனக் கருணையுட னுத்தரவருளியது கேட்டுத் திரும்பி அநேக தீர்த்தங்களை மேவிச்சென்றனர். இஃது நிசமென்றறிய விரும்புவோர் கேதாரக் கட்டத்தில் கங்கை பெருக்குக் காலத்தில் வெகு விரைவாக எதிரேறிச் சில தூரம் தெற்கே செல்லுங் கண்காட்சி இன்றும் பார்க்கலாம்.

## 16-வது அத்தியாயம்.

## திவோதாஸன் சரித்திரம்.

திவோதாஸ னென்பவன் மகமேருகிரிச் சாரலில் அநேக காலந் தவசு செய்தனன். பூவுலகிற்குச் சக்கரவர்த்தியின்மையால் உலகரக்ஷணை பிரமனைப் பொருத்ததால் அதற்காகக் கவலையடைந்த பிரமனும் அவனிடஞ் சென்று, நீ இவ்வுலகம் ஆள்வாயாக என உத்தரவருளியது கேட்டு, நமஸ்கரித்து, காசியிற் தேவர்முதலிய மூவரும் வாராதிருக்கும்படி வரமருளுவீராகில் நான் அரசு புரிகுவனென திவோதாஸன் விண்ணப்பஞ் செய்யக்கேட்ட பிரமன் அவ்வித வரமருளினாற் சிவாபராதனேருமென்றெண்ணிக் காசித்தலமுற்று அவிமுக்தேசுவரனென்னு மிலிங்கந் தாபித்துப் பூசனைபுரிவதற்கிரங்கிய பரமசிவன் பிரத்யக்ஷமாகிப், பிரமன் கருத்தையறிந்து, நீ பணிந்து கேட்டமைக்காக நாம் திவோதாஸனைச் சக்கரவர்த்தியாகச் செய்குவமெனக் கட்டளையிட்டருளி, திவோதாஸனிடஞ்சென்று

நயம் கஸ்தூரி தோலா 1க்கு ரூ. 35.

ஸ்ரீ காசி கெ. எஸ். முத்தையா அண்டு கம்பெனியில் அகப்படும்.



உனக்கு வேண்டுவதியாதெனத் திருவுளம்பற்றியது கேட்டு பலவித வந்தனஞ்செய்து, காசியிற்றேவர்முதல் மூவர்வரை யாரும் வாராதிருந்தாற் பிரமனருளியபடி உலகு காவல் புரிகுவனென்றனன். அவ்விதமேயாகுக, நீ காசி க்ஷேத்திரஞ் சென்று அரசு புரிகுகவென நன்முகூர்த்தத்தி லுமாமகேசனுத்தரவு கொடுத்தபடி, அக்கினி, வருணன், வாயு, இந்திரன், மும்மூர்த்திகள் முதலிய ஒருவருதவியுமின்றி காசி நகரை நெடுங்காலம் வெகு நீதியாக ஆண்டுவந்தனனென்றுரைத்தது கேட்ட பல ருஷிகளும் வியப்படைந்து மும்மூர்த்திகளுமின்றி அரசுபுரிந்தவனது பூர்வீக வர்த்தமானங்களை விளங்கக் கூறியருளல் வேண்டுமெனப் பிரார்த்தித்தமைக்காக சூதமகாமுனிவர் கூறலுற்றனர்.

கேளுங்கள் மகரிஷிகளே! காஞ்சிபுரத்தில் விப்பிரதாசனென்னும் வணிகனுக்கு மகவின்மையால் தனது கூத்திப் புதல்வனைப் பிள்ளையாகக் கொண்டபின், செட்டியுமிறந்தனன். அம்மைந்தன், தனது பொருளியாவுந் துறவினியோகஞ்செய்து, தூர்த்தனென்னு நாமம் பெற்றதுமன்றி, தன் பிதாவின் மனைவியையும் பெண்டாகப்பெற்று, இறுதியிலோர் தாசிக்குப் பணிபுரிந்து வயிறேம்பி நின்றனன். நாளும் அரசனது நந்தன வனத்திற் றிருடிக் கனிகைக் களித்துவருகையில் ஓர்தினம் அக்காவலாளராற் பிடிபட்டுத் தவறி ஓடும்பொழுது மடிமீதுள்ள புஷ்பங் கைநழுவக்கண்டு சிவசிவாவெனப் புகன்றுவந்து தாசிகையிற் சிலது ஈய்ந்து, நானிங்கிருந்தாற் றமக்கு ஆக்கினை வருமெனக் கூறி அந்நகர் விடுத்து வெளியேறி, வாரணாசி யாத்திரையோரைப் பின்பற்றிச் செல்பவன் விந்த பருப்பதத்தருகிலோர் சிவயோகியரைக் கண்ணுற்று புகழ்ந்து வணங்கி

புதுமாதிரி வெண் பட்டு வேஷ்டிகள்
வாங்கித் தரித்துக்கொள்ளப் பிரியப்படுகிறீர்களா?

ஸ்ரீ காசி பட்டு வர்த்தகம் கெ. எஸ். முத்தையா அண்டு கம்பெனியாருக்கு எழுதிக்கொள்ளவும்.

காசிக்கு யானுஞ் செல்கின்றேனென்று அவர் பணிபுரிந்
தொழுதுங்கால், அச்சிவானந்தரிடந் தனமிருப்பதறிந்து
அதைக் கவர நினைத்து, அவரது கமண்டலத்தில் விஷ
மிறைப்பிவைத்தனன். சலவிசர்ஜனத்திற்கு அவர் போகுங்கால்
கமண்டல நீரைக் குறைத்தனர். அவ்விஷ மேலே நின்றமை
யால் வழுவின்படி அது கீழேயிருந்த தூர்த்தனது பாத்
திரத்து வீழ்ந்ததுமன்றி, சிவயோகியருந் தவறி வீழ்ந்ததாற்
கமண்டல நீருங் கவிழ்ந்தது. பிரமஹிம்சை சுடாமே தன சிஷ
னையு மெழுப்பாது மீட்டுங் கண்வளர்ந்தனர். பின்னால்
விழித்த தூர்த்தன், கமண்டலத்து நீரின்மையு முரட்டையு
நோக்கிச் சிலேற்ப மிழுக்கின்றன. இனி இறங்கத்தக்கதே
யில்லை, பொருளைக் கவரவேண்டுமென் றெண்ணினன்.
ஆனாலுந் தாகமிகுதலைபாற் "பசி ருசியறியாது" என்
பதுபோல, தன் பாத்திரத்து விஷங்கலந்த ஜலம்பருகி
யிறந்தனன். விடிந்தபின் சிவானந்தர் அவனைக் கண்ணுற்று
சும்பவ மென்றனர். இவ்வாறிறந்த தூர்த்தனை யமகிங்க
ரர் பலவித மிடிக்கஞ்செய்து யமராஜனிடம் விடுக்கவு
மிவன் பலவாறு பரகாட்டுவதறிந்து, நீ கொடும் பாவி,
ஆனாலுங் குறைய புண்ணியமுண்டு. நீ செய்த பாவத்
திற்கு பலகோடி ஜன்மமெடுத்து நரகத்தழுந்துவாயானா
லும் நீ வேண்டுதற்காக இப்புண்ணியத்துக்கு ஓர்பொழுது
அரம்பையர் போகஞ் சுகித்துவருக வென்றபடி தூர்த்
தனை மேனகையிடங் கொண்டுபோய் விடுத்தனர். புறப்பக்
தியினைமக்குச் சிவசிவாவென்றதும், வாரணாசிக்கு செல்
கின்றேனென்றதும், சிவபக்தருக்குத் தொண்டுசெய்து அவ
ரால் ஆசீர்வாதம் பெற்றதுமாக மூன்று புண்ணியத்திற்கு
அரம்பாஸ்திரீபோக மென்றனர்.



## 17-வது அத்தியாயம்.

### மேனகை கைலைக்குச் சென்றது.

அரம்பாபோகமனுபவிக்கச்சென்ற தூர்த்தன் தன்னை
மறந்து கீழே விழுந்த பூனைக்குச் சிவசிவாவென்றமை புண்
ணியமென்றால், வாழ்நாள் வீணாகக் கழிந்த காலமெல்
லாஞ் சிவநாமம்புகன்று லெச்சுபம்பெறலாம் என, வீணாகக்
காலஞ்சென்றமைக்காக கவலையுற்றிருப்பதறிந்த மேனகை,
தன்னிடமுற்ற திற்கு யாது கவர்சசி என விளவுங்கால்,
தன் திருமுழிபார்வ முரைத்து துயருற்றனள். அதையறிந்த
மேனகை, இவனு கவர்ச்சியை நீக்க மனமுன்னினாள். திருக்
கைலையிற் தேவியார் சந்நிதி திரு நட்சத்திரக் கெடுமுறை
அன்று தான் மேனகை யங்குச்சென்று நிருத்தஞ்செய்தாள்.
பார்வதி தேவியாரைத் தரிசிக்கவந்த கன்னுவர், நாரதர்,
அத்திரி முதலிய முனிவர்கள் அம்மையாரைப் பலவாறு
புகழ்ந்து தோத்திரித்துந் துதித்து அடிபணிந்தவர்களை
ஆசிர்வதித்து, நீவிர் தேசசஞ்சாரிகளானதால், அங்கங்
குள்ள விசேடங்களை யுரைப்பீர்களெனக் கேட்ட ருஷிகள்,
மீட்டும் வணங்கி, சிவபெருமான் கீர்த்தியு முமது பெருமை
யுமே எங்கெங்கு நிறைந்திருக்கின்றன! அவற்றை யா
தென மொழிகுவம் என்றனோம், அநேக சிவபக்தர் சாபத்
தாற் பல்வோர் பதியு முயிரு மிழந்தனர், சந்திரன் குருபத்
தினியைச் சேர்ந்ததாற் சாபமேற்றதுந்தவிர மகாமேருச்
சாரலிலிருக்குங் கணபதி திருவுருவத்தை நோக்கி நகைத்து,
ஏளனஞ்செய்ததினால் அவருக்குக் கோபமுண்டு, அம்புவியின்
புதினோரு கலைகளையுந் தேவர்கட்கு பங்குசெய்தியந்தும்
மொருகலையை முருகனுக்களிப்ப அவர் கணபதியை வண
ங்கி, முன்னமீந்த கலைகளிலெல்லாம் சந்திரனுயிரோடிருந்

பட்டு பீதாம்பர புடவைகள் வாங்கப் பிரியப்படுகிறீர்களா?
ஸ்ரீ காசி பட்டுவர்த்தகம் கெ. எஸ். முத்தையா அண்டு
கம்பெனியாருக்கு எழுதிக்கொள்ளவும்.

தனன். இந்தக் கலையை வாங்கிவிட்டால் அவன் பொன்றி விடுவானாதலால் மேலோர் சிவனை வதைத்தபாவம் நேருமெனவும், ஒருவனை வைத்துப் பார்க்கவேண்டும் அழித்தல் கூடாதென்பது திருவுள்ளமறியாததா? வெனத் தோத்திரித்ததின்மேற் கருணை பெருகி, அக்கலையொன்றையுஞ் சோமனுக்களிக்கவும், சாபத்தாற் றன்னை மறந்திருந்த சந்திரனுக்குத் தன்னுணர்வுண்டாகி என்னை ரக்ஷிக்கவேண்டுமெனப் பாதத்தில் நமஸ்கரித்தும், பல தேவ ருஷிகளாலுந் தெரிப்படுத்துவதுங் கேட்டு, உன் சாபம் நீங்கும்படி காசித்தலஞ் சென்று, கேதார கௌரிதீர்த்த ஸ்நானமுங் கேதாரீசுவர பூசையுஞ் செய்திருந்தா லுனக்கு வளர்ச்சி குறையுண்டாகுமென்று உத்தரவுகொடுத்த அந்நேரஞ் சோமனும் பன்முறை வணங்கி, யுமது திருவாக்குப்படி என்னைக் காக்கவேண்டுமென்று உத்தரவு பெற்றுக்கொண்டு காசிநகருற்ற திங்கள் கௌரிதீர்த்த ஸ்நானமுங் கேதாரபதி பூசையுஞ் செய்திருப்ப, கைலாசபதி சிராவண சோமவாரத்திற் றரிசனங் கொடுத்தருளியிட்டு, சசிகலை வளரவுங் குறையவுமாகுகவென ஆக்ஞாபித்தனர். இதுபோல பல்லோரு முயர்ந்த மகிமைபொருந்திய கௌரிதீர்த்த ஸ்நானத்தா லெத்தலத்துந் தீராத சிவாபராத முதலியவு நீங்கி முத்தியடைந்தனரென்றனர். அது செவியுற்ற மேனகை மகிழ்ச்சியுற்று தன்னிருப்பிடஞ் சேர்ந்தனள்.

## 18-வது அத்தியாயம்.

### தூர்த்தன் பாவம் நீங்கியது.

மேனகை தனது கிருகத்தில் அவசமழிந்திருக்குந் தூர்த்தனை நோக்கி, யுனக்குப் பரமசிவம் கிருபைசெய்குவரென்றுரைத்து, அன்று சிராவண சோமவாரமானதால் விமானத்திற் றூர்த்தனையும் * மந்தாரமல்லிகை முதலிய வாசனைத் திரவியங்களையும் வைத்துக்கொண்டு காசிநகர்



எல்லைக்குள் வருங்கால், சிவகணங்கள், அஷ்டபைரவர், துர்க்கைகள், யோகினிகள் முதலியோர் காவலராதலால் அவர்கள் தூர்த்தனைக் காசிக்குட் செல்லக்கூடாதெனத் தடுத்தவரை நோக்கி, அவன் பாவியானாலெனது போகங் கிட்டப் பெற்றவனெனக் கூறு மேனகைக்கு, கணங்கள் பூருவதிருஷ்டியாற் றெரிந்து, இக்கொடிய பாதகனைத் தீண்டவும் பார்க்கவுமாகுமோ? ஓர் சிவயோகியரைக் கொல்ல விஷமிட்டனனெனப் பல பழுது கூறியதின்மேற் றூர்த்தனுக்குறுதி மொழிந்து அவ்விடத்து வைத்து, மேனகை காசியில் வந்து பல தீர்த்தங்களையும் விசுவேசுவரர் முதலிய அநேக லிங்கங்களையும் பூசித்து கௌரிதீர்த்தத்தருகே வருங்கால் அச்சிவயோகியரைக் கண்ணுற்று பன்முறை வணங்கித் துதித்த மேனகையை ஆசிர்வதித்து சுபமோவென்றுரைக்க, சிவனடியார் திருநோக்காற் குறைவில்லை, எனது மனக்குறையு நீக்கவேண்டுமென்றனள். அக்குறிப் புறிந்த சிவயோகியர், நீ இத்தலத்து ஸ்நானம் பூசை முடித்து இத்தடத்து வில்வத்தளத் தோய்த்து தூர்த்தன்மேற் றெளித்து அவனை அழைத்துவருகவென் றுத்தரவு கொடுத்தபடி வில்வத்தை கௌரி தீர்த்தத்தில் நனைத்து அவன் மேனியிற் றெளித்ததின் லச்சூக்ஷும தேகத்தினின்றும் பூதவேதாள முதலிய பல ஜெந்துக்கள் வெளியேறின. பின் ஒரு சுயஞ்சோதி புறப்பட்டு அவையனைத்தையும் நீறுக்கிவிட்டது. அது பார்த்த சிவகணங்கள் ஆச்சரியத்துடன் இவனித்தனை ஜென்மமெடுத்து [illegible] காழவேண்டியதுண்டு, அதை அச்சிவயோகிய சிவஞ்செய்த பாதகத்தை உன்னது உபாயமாய்த் தொலைத்தனரெனச் சிவயோகியரைப் பலவாறு புகழ்ந்தனர். மேனகை தூர்த்தனைக் காசிக்குட்

---

கஸ்தூரி, பால்காயம், பட்டு பீதாம்பரங்கள்,
வெண்பட்டுகள் வாங்கவேண்டுமா?

ஸ்ரீ காசி பட்டுவர்த்தகம் கெ. எம். முத்தையா அண்டு கம்பெனியாருக்கு எழுதிக்கொள்ளுங்கள்.

கொண்டு சிவானந்தர் பாதத்தில் நமஸ்கரித்து பன்முறை புகழ்ந்து துதித்தமைக்காக விதிப்படி சங்கற்பமும் ஆதிமணிகர்ணிகை ஸ்நானமுஞ் செய்விக்க, பற்பல பூதங்களத்தேகத்தினின்று வெளிப்பெறியதுந்தவிர ஓர் சுயசோதி யுதயமுமாய்ச் சிவானந்தர் திருவடியில் வணங்கியது கண்டு சிவயோகியர் நீ யாரென வினவ, இவன் புஷ்பந்திருடி யோடுங்கால் தவறின பூவுக்குச் சிவசிவாவென்ற புண்ணியத்தில் முளைத்தவன். இவன் செய்த கொடும் பாதகத்துக் குள்ளாகப்பட்டு நிற்பந்திக்கப்பட்டிருந்து உமது கடாக்ஷத்தாற் கிருதார்த்தனானேன். இன்னமும் அப்பாவிகளென்னுடனணு காதிருக்கக் கருணைபுரிய வேண்டுமெனப் பிரார்த்தித்தமைக்காக அவ்விதமாகுகவென் றாசீர்வதித்து, தெய்வமந்தரமுதலியவற்றாற் பூசித்துத் தோத்தரிக்குங்காற் சிவயோகியருக்காக உமாமகேசுவரர் காட்சித்து முந்திய தென்மத்தி விவஹோர் ம்லேச்சமாது சங்கமத்திற்காகக் குறையக் களபக் கந்தம், சுகந்த புஷ்பமுதலிய கைக்கொண்டுவந்து, அருகிலிருந்த சிவாலயத்துள் மகாலிங்கத்தின்மீது வைத்து விட்டு வெளியேறியவளைக் கைப்பற்றியுட்சென்று நோக்க, அது மேலே நழுவியதாலவனுக்குப் புலப்படாதொழிந்தன. அப்புண்ணியந்தான் தவறிய மலருக்குச் சிவசிவாவென்றுரைக்கக் கிடைத்தன, உமது தரிசனமுங் காணப்பட்டது. இப்பூசா மகிமையா லிவன் பூமியின் கண்ணே திவோதாஸனெனும் பெயரோடு தேவர்கள் முதலியோருங் காசிக்குட் செல்லக்கூடாதென வரம்பெற்று மனுமுறை புரியுங்காற் தேவர்கள் முறைப்பாட்டுக்காகப் பல்லோரை யனுப்பியு மவர்களாலாகாமைக்காகத் திருமாலைப் புத்த குருவாக வனுப்பியது தெரிந்த திவோதாஸன் சிவபதவி கொடுத்தாற் போய்விடுவேனெனத் தெரியப்படுத்தியபடி கைலாயபதவி யநுபவிமென்றுத்தரவானது கேட்டுச் சிவயோகியருமாபதியைப் பலவாறு புகழ்ந்து நமஸ்கரித்தனர். இத்தியாதி சுகுணங்களையறிந்த மேனகை ஆர்த்தனுக்குச் சுவர்க்க போகங் கொடுத்தனுப்பக் கண்ணுற்ற யமன் மிகவும் வியப்



படைந்து தன்னை மறந்திருந்தனன். அதன்மேற் ஆர்த்தன் புவியின்கண்ணே அரசர்மரபிலவதரித்து திவோதாஸனெனும் பெயரோடு மகமேருச் சாரலிருந்து கடிய தவசுபுரிந் * திருப்புழி, பிரமன் கோரிக்கைக்காக காசியிற் றேவர்களியாரு மணுகாதிருந்து ஆழ்வதாகவென முதல்வனருளிய திருவாக்குப்படி அவனது தவோபலத்தால் அக்கினியாகவும், வாயுவாகவும், வருணனாகவு, மும்மூர்த்திகளாகவுமிருந்து, தானே சகல ஆதிக்கமுமடைந்துகொண்டு நெடுங்காலம் அரசுபுரிந்தொழுகுங்கால், பிரம விஷ்ணு முதலிய பல்லோருக்குங் காசித்தலந் தரிசிக்காததனுற்ற நீங்கு குறையுன்னி சிவலோகநாதனிடம் முறைப்பட்டமைக்காக யோகினிகள் கணபதி முதலிய பல்லோரை யனுப்பியு மவனை நீங்கச் செய்விக்க முடியாமையால் இறுதியாகத் திருமாலைப் புத்த குருவாக அனுப்பி, அரசனை மதப்பிரஷ்டனாக்க நினைத்த அச்சுதனை யறிந்துகொண்ட திவோதாஸன் என்னை வருந்தச்செய்வதி யாதுக்கு, தேவர் மூவருக்குக் காசி தெரிசிக்கத் தடையானதை நினைத்து முறைப்பட்டமைக்காகப் பார்வதி மணாளன் வருதிப்படி யிங்கே மூந்தருளினீரென் றறிந்தனன். ஆனால் நான் கூறும் வாக்கியங்களை நன்குணர்ந்து செய்குக, இவ்வுலகோரைப் புத்தராக்கி யும்மக்கு அதனாற் பாவமுறும். அது வேண்டாதாக. தேவர்கள் காசியடைய என்னாலேயே தடையுற்றிருக்கின்றனர், என்னொருவனுக்குச் சிவசாயுச்சியங் கொடுக்கச் செய்வீராகில் தேவர்கள் காசி நகரடைந்து தரிசிக்கத் தடையில்லை என்று கேட்டுக்கொண்டபடி செய்ய முகுந்தனுக்குக் கூடாமையாற் சிவபிரானிடந் தெரியப்படுத்தி வரங் கேட்டும் அவனது தவோபலத்தாலும் அவன் ஸ்தாபித்துப்

---

கஸ்தூரி, பால்காயம், சகலவிதமான பட்டு பீதாம்பரங்கள்,
ருத்திராக்ஷங்கள் முதலியவை தேவையானால்
ஸ்ரீ காசி கெ. எஸ். முத்தையா அண்டு கம்பெனியாருக்கு எழுதிக்கொள்ளவும்.

பூசித்த சிவலிங்க பலத்தாலுஞ் சிவயோகியர் திருவாக்குப் படிக்கும் ஓர்தினம் திவோதாஸன் கௌரிதீர்த்த ஸ்நானம், கேதாரீசுர பூசையுஞ் செய்திருப்ப, பரமசிவ மெழுந்தருளி சிவசாயுச்சியமருளினர்.

## 19-வது அத்தியாயம்.

### மாந்தாதா சரித்திரம்.

வாஞசு என்பவருக்கு நெடுங்கால மக்களின்மையாற் புத்திரகாமேஷ்டியாகஞ்செய்து அதிலுதயமான அவிசை பத்தினிக்குக் கொடுக்க, அவளதை ஓரிடத்தில் வைத்துவிட்டு வெளியேசென்று மீளுமுன்னம் மனைக்குட்சென்ற வாஞசு தனக்குற்ற பசியினால் அவிசென்றறியாது அதையருந்தியதாற் கெற்பமுற்றனன். பின்பு பன்னாள் வருந்தவும் பல ருஷிகளுந் தாவுமொடுக்கபடி சுக்கிரனிடம் போய் வேண்டிக்கொண்டமைக்காக அவர் தயவுவைத்து தனக்குத் தெரிந்த மிருத சஞ்சீவி மந்திரத்தை யுபதேசித்தனன். அவன் சொல்லிக் கேட்டவாப்படி அம்மொக்குளைக் கெற்பச் சிசுவுக் குபதேசித்து அச்சிசு வயிறுகிண்டு வெளியேறிவந்தபின் தந்தையையும் பிழைப்பூட்டினன். அப்பிள்ளை பெயர் மாந்தாதா. அவன் அநேககாலம் அரசாண்டுபின் விரக்தனாய்க் கேதாரபருப்பதத்திற் போய்த் தவஞ்செய்திருக்குங்கால், அறுபதினாயிர மாண்டுக்குப்பின் சிவபிரான் பிரத்தியக்ஷமாகி இத்தலத்திற் குளிர் வெப்பு முதலியவற்றால் வருத்தமுற்றனை. இனி நீ வாரணாசிக்குச் சென்று பர்ணசாலை யமைக்குமிடத்து நமது லிங்கமிருப்பதைப் பூசித்திருந்தால் முத்தியருளுவமென்றபின்னு மிவ்விலிங்க தரிசனமன்றி எவ்விதமிருப்பேனென்றிறைஞ்சும்பொழுது, வாயுவேக மனவேகங் கொடுத்திருக்கின்றதினால் நீ னினைத்தவிடத்துக்குச் செல்லலாமென் றருளிச்செய்தனர். அவ்விதம் வரங்கேட்ட மாந்தாதா, காசிப்பதி யடைந்து,



ஈஸ்வரனருளியவிடத்திற் பர்ணசாலை போட்டிருந்தும், கங்கோத்திரி, யமுனோத்திரி, பத்ரிகேதாரம், பத்ரி ஆச்சிரமம், சோலாமுகி, காசிமணி கர்ணிகை, விசுவநாதர், ஆதிமணி கர்ணிகை, கேதாரீஸ்வரர் இவ்விடங்களில் ஸ்நானம், பூசை முதலியன முடித்து, பர்ணசாலையுற்று அமுதருந்திப் பின்னு மறுபதினாயிர வருஷங் கழிந்தபின்பு, சிவநாதனுக்குத் தயைபிறந்து, இனியும் நீ யுபவாசத்தா லியாத்திரை செய்யற்க, அதிதிகளுக் கமுதளித்து நீயுமருந்தி யாத்திரை செய்யென்றும், காசிக்ஷேத்திரத்தி லன்னதானம் விசேஷ புண்ணியம், அதிற் சிவப்பிராமணனுக் கருத்துவது விசேஷம், அதிலும் ஆதி சைவனுக்களிப்பது விசேஷம், அதிலுஞ் சிவயோகிக் கீயிப்பது அதிகம். ஆதலாலுனக்குப் புலப்பட்ட சிவனடியவர்க் கமுதளித்து வருக. தீபம் வைப்பதும் விசேஷந்தான். திருடிவந்த பொருளைப் பங்கிடும்படி சிவாலயத்தில் விளக்கேற்றியதால் அவர்கள் சுவர்க்க போகமடைந்தனர் என்று அருளியதைக் கேட்டு வந்தனஞ் செய்தனர்.

## 20-வது அத்தியாயம்.

### மாந்தாதாவுக்கு வரமருளியது.

சிவபிரானுத்தரவுப்படி மாந்தாதா அதிதிக் கருத்தித் தானருந்தி யாத்திரைசெய்யு மெண்ணைத்தோடு விரைவாக கிச்சிலியன்னஞ் சமைத்துக் குவித்து, அதிதியென்றோர் வரை யதிலிட்டுப் பரிவட்டத்தால் மூடிவைத்து, அதிதியைப் பலவிடந் தேடியுங் காணாது வாடியிருக்கும்போது வயோதிகர் நடுக்கத் திரேகத்துடன் சிவவேடமுள்ள யோகியார் யங்குற்று, அதிதியென்றமை கேட்டு மகிழ்ந்து, முதிர்ந்த சிவனடியாரை வணங்கி யழைத்து, அமுதருந்துக வென்ப் போர்வை நீக்கிப் பார்க்குங்கால் அவ்வன்னஞ் சிவக்குறி ரூபமாயிருக்கக் கண்ட சிவயோகியர், மாந்தாதாவைப் பலவித சிந்தைகூறி யிகழ்ந்து நிப்பந்திக்கவும், சிற்

சிந்திதனைகிப் பெருமூச்செறிந்து, அஷ்டாங்க பஞ்சாங்க நமஸ்கார தோத்திரங்கள் புரிய அதிதி திருவுருவ மறைந்நதுகண்டு, பலவித யோசனையோடு நிற்குங்கால், பிரம விஷ்ணு முதலிய தேவர்கள் புடைசூழ சிவபிரான் ரிஷபாரூடராயெழுந்தருளி, ஓயோ அரிய தவசாலி! சற்று உன்னைச் சோதித்தனம், அதில் நீ, நானென்ற அகந்தை கெடுத்தவனாதலா லுனக்கு வேண்டும் வரமீயாமென்றுத் திருவாகக்கண்ட மாந்தாதா, ஆனந்தித்துப் பலவிதமாகப் புகழ்ந்து, ஆடிப் பாடி, அழுது தொழுது வணங்கி, இவ்விலிங்கத்தைப் பூசித்தோரியாவருஞ் சிவசாயுச்சியமடைய வேண்டுமென்று மிந்த அந்தர்க் கிரகத்தி லிறக்கின்றவர்களுக்கு வைரவ தண்டனை முதலியதின்றி உமாமஹேஸ்வரரூபமீதசித்து கைலையடைய வேண்டுமென்றபடி வரமளித்தருளினர்.

---

## 21-வது அத்தியாயம்.

---

## மாந்தாதாவுக்குக் கொடுத்த வரத்தைக் குறைத்தது.

மாந்தாதாவுக்கு வரமருளியது கேட்ட பிரமன் விஷ்ணு முதலியோர் கைலாயபதியை வணங்கி, பூசித்தல் தரிசித்தலுக்குச் சாயுச்சியபதவி யருளினாற் பூவுலகமியாவுங் கைலையை அடைந்துவிடும், இதனால் யமலோகம் பாழாய்விடும், பூமி மனுக் குறைந்துவிடுமெனப் பலவாறு தெரியப்படுத்தியதின்மேல் மாந்தாதாவைப் பார்த்து, இந்த அந்தர்க் கிரகத்தி லிறந்தவர்களுக்கு வைரவ தண்டனை

நயம் பால்காயம் தோலா 1க்கு அணா 2.
நயம் கஸ்தூரி தோலா 1க்கு ரூ. 35.
ஸ்ரீ காசி கெ. எஸ். முத்தையா அண்டு கம்பெனியாருக்கு எழுதி தருவித்துக்கொள்ளவும்.



யின்றி உமாதேவி மடியில் வைத்து நாமே தாரகோபதேசஞ் செய்வோம். அதிலும் அந்தராளமென்பது மணியோசை கேட்குமிடமட்டும் இதற்குள் ளிறந்தோர்க்கு நமது சாயுச்சியமும், பகிராளமென்பது அந்தர்க்கிரகம் இதற்குள் ளிறந்தவர்க்கு சாரூபமும், கேதாரகேதாராவென நாளும் பன்முறை யோதிக் காசியிலிறந்தவர்க்கு சாமீபமும், காசி பஞ்சக்குரோசத்துக்குள், ளிறந்தவர்க்கு சாலோக பதவியு மளிப்போம். நீ இத்தலத்துங், கேதாரத்துந், திருக்கைலையிலுமிருந்து நம்மைப் பன்னாட் டரிசித்திருந்தபின்னமது சிவசாயுச்சிய மருளுவமெனத் திருவாய் மலர்ந்தருளினர்.

---

## 22-வது அத்தியாயம்.

---

## கேதாரீசுரரைப் பூசித்தடைந்தோர் கதி.

இவ்வித வரலாறு செவியுற்ற ருஷிகணங்கள் மீட்டும் வணங்கி, யார் யார் எவ்விதப் பேறு பெற்றனரென்பதும் அதின் பலன்களுந் தெளிவாக அருளல் வேண்டுமெனப் பிரார்த்திக்க சூதமுனிவர் கூறலுற்றனர். இவ்வுலகின்கண் பலவித பாவஞ்செய்யினு மதற்கு நிவிர்த்தியுண்டு. சிவநிந்தை, அடியார் நிந்தை, காசி நிந்தை, கங்கா நிந்தை, நின்மாலிய நிந்தை முதலியதுக ளெத்தல மெத்தீர்த்தத்தாலு நீங்குவ தருமை. அது தீரும்படி உமாதேவியார்மீதுள்ள பக்ஷத்தாற் சிவபிரான் றேவியாருக்கு அந்தரங்கஞ் சொல்லியருளினர். அஃதின்படி செய்து அவரடைந்த நற்கதி கண்ணுற்ற குமாரசாமியைத் தோத்தரித்த சூரபன்மன்,

கயமுகன், சிங்கமுகன் முதலிய அசுரர் தேவேந்திரன் முதலிய தேவர்களுக்குச் சொல்லி, அவர்களும் பின்னும் பல்லோரும் காசி கௌரிதீர்த்தத்தின் மூழ்கி, கேதாரீசுவர லிங்கத்தையும் அர்ச்சித்துத் தங்கள் பெயரால் தனித்தனி சிவலிங்கந் தாபித்துப் பூசித்து, அவ்வபராதத்தினின்றும் நீங்கி முத்தியடைந்தனர். முந்திய மூன்று யுகங்களிலும் ஒன்றுக்கொன்று அதிகப் பாவிகளிருந்தபோதிலும், ஆத்மசோதி தரிசித்து ஞானமடைவர். கலியுகத்திற் பாவிகள் மிகுதியாகி லக்ஷத்துக்கொருவன் புண்ணியவானானபோதிலும் ஆத்மஞானந் தரிசித்தடைவதரிது. மற்றத் தேசத்தோர் செய்யும் பாவந் தீர்ப்பதற்குக் காசிக் கங்கையும், மணிகர்ணிகை சக்கர தீர்த்தமும், விசுவேச லிங்கமுமிருக்கின்றது. சிவாபராத முதலிய கடும்பாவங்களை அவைகள் நீக்கமாட்டா. உலகோர்மீதுள்ள அன்புமிகுதியாற் காசி கேதார லிங்கமும் ஆதிமணி கர்ணிகை தீர்த்தமு முண்டாக்கியது. இத்தடத்து மூழ்கி யிவ்விலிங்கம் பூசித்த எவ்வித பாவியும் அவ்வபராதத்தினீங்கிச் சிவசாயுச்சியத்துக் கருகனாகின்றானென மனுவை யுரைத்தலைக்காகத் தேவியார் திரும்பி நோக்கியதுகண்டு கருணாகரனிது சத்தியமென மூன்றுதடவை கட்டளையிட்டனர். ஈசுவரனே சத்தியமாக வுரைத்த வப்பெருமையை யாரால் கூறல் கூடும்! இவ்விலிங்கத்தை விடியற்காலந் தரிசித்தாற் சமுத்திரஞ் சூழ்ந்த பூமியை கன்குணர்ந்த சிவ பிராமணர்க்குத் தானஞ்செய்த பலனும், உச்சிக்காலத்திற் றரிசித்தால் அவ்வித ஆதிசைவனுக்கு நூறு காராம்பசுக்கள் தானஞ்செய்த

நயம் கஸ்தூரி வேண்டியவர்கள்

ஸ்ரீ காசி பட்டு வர்த்தகம் கெ. எஸ். முத்தையா அண்டு கம்பெனியாருக்கு எழுதிக்கொள்ளவும்.

கஸ்தூரி விலை தோலா 1க்கு ரூ. 35.



பலனும், சாயங்காலத்திற் றரிசித்தாற் சாலோக பதவியும், அர்த்த சாமத்திற் றரிசித்தாற் சாமீப பதவியுங் கிடைக்கும். நாலு காலமும் விடாது தரிசித்தாற் சாயுச்சியத்துக் கருகனாகின்றான். தவறாது காலந்தோறுந் தரிசித்தவன் அடையும் பலனை யாமெனக் கூறுவோம். எதுவுந் திரிகரண சுத்தியாய்ச் செய்தல்தான் விசேஷம். அஷ்டாங்க பஞ்சாங்க நமஸ்காரஞ்செய்தாற் சக்கராதிபராயாவருந் தனை வணங்க விருப்பர். இவ்விலிங்கத்திற்கு ஒருகை நீரு மொரு வில்வத் தளமும் வைத்துப் பூசித்தால் முத்தி கிடைக்கும். மந்திர புஷ்பஞ்செய்து சாத்தினவர்களை உலகநாதன் நம்முலகிற்கு வாவென்றழைப்பர். நீராஞ்சனம், ஆலத்தி, சத்திர, சாமரமுதலிய செய்து ஆராதித்தவர்களைத் திருக்கைலையில் வைத்து அவ்விதவுபசாரஞ் செய்குவர். உருத்திராபிஷேகஞ் செய்தோர், சிவலிங்கத் தாபனஞ்செய்தோர், மண்டப முதலிய முடித்தோர் சாரூபமடைவர். பத்திர புஷ்பம் பழ முதலிய வைத்து உருக்கத்துடன் பூசித்தவர்க்குச் ஜன்மமில்லை. ஓர் நெய்விளக்கிட்டாற் சாலோக பதவியும் திருமஞ்சனக்குடம் மணி தூபதீப சோடசஞ் செய்துவைத்தவர்கள், வஸ்திர முதலிய பிரசாமான்கள் வாங்கிவைத்தோரிந்திராதி போகமனுபவித்துச் சிவலோகஞ் சேர்வர். அதினுங் கேதாரீஸ்வர மகாலிங்கத்திற் சாம்பஞ் சதாசிவம், பசுபதி சதாகாலமு னிறைந்திருப்பதால் அதன் அந்தர் கிரகத்திலிறந்தவர்களைத் தேவியர் மடிமீது வைக்க இறைவனுபதேசஞ் செய்கின்றனர். காசியிலிறக்கின்றவர்களை வைரவர் விசாரித்து, பாவத்திற்கு [illegible] வாண்டு முப்பதினாயிரம் வரை பலகாலங் குலத்தாற் [illegible]. இவ்விலிங்க தரிசனம் பரிசனஞ் செய்தவர்கள் [illegible] வைரவானுகக் கூடாது. விபூதி ருத்திராக்கமணிந்து பூசித்தவர்க்குச் சிவலோகமும், அருகிலிருந்து கேதாரா வென மும்முறை சப்தித்தவர்க்கு [illegible]லக்ஷ்மி வாசலைத் திறந்து நின்றழைக்கின்றனர். அளவற்ற வேதங்களு மிக்குக் கூறுகின்றன. யாவிலுருவ விப்பெருமானை யறிந்து [illegible]கின்றனே

அவனுக்கு மீட்டுஞ் ஜன்மமில்லை. எத்தலத்திருந்து இறப்பினு முத்திக்குத் தடையில்லை. ஆசனமூர்த்தி மூலமென்பதைத்துப் பூசித்தவர்களை மோக்ஷலக்ஷ்மி, சுவர்க்க லக்ஷ்மி உவக்கெனக்கென்பர். கங்கையை வடிகட்டி அபிஷேகித்தல், ருத்திராபிஷேகஞ் செய்தல், பல வாத்தியமுழக்கல், வாசனைத்திரவியங், களபஞ்சுகந்தம் வைத்துப் பூசித்தோர்களை சிவலோகத்தில் வைத்து அவ்விதஞ் செய்வர். இம்மான்மியமெழுதினோர், வாசித்தோர், கேட்டோர்களைத் தேவர்கள், சிவகணங்கள் சூழ்ந்தழைத்துக் கைலைக்குச் செல்வர். அமுது நிவேதித்து அதிதிக் களித்தவர்கள் கைலையை அடைவர். பலவித விரதமிருந்து முடித்தோர் சிவலோகத்திற் சிவகணங்களாற் பூசிக்கப்படுவர். ஓர் சிவப்பிராமணனுக் கமுதளித்தாற் சாலோகமும், ஆதி சைவனுக்கிட்டாற் சாமீபமுஞ், சிவயோகிக்கிட்டாற் சாரூபமும் பெறுவர். ஓர் சிவபக்தனுக்கிட்ட பலன் அதிகமாகும். ஓர் அணுவளவு தானஞ்செய்தாலது மேருப்போலாகும். சிவாபராதமுதலிய கடும் பாவமுனிக்கிக் கைலையளிப்பதென்று மிதற்குவமை எத்தலத்தைக் கூறலாம்! இதின் பெருமை எவ்வாறென அளவிடலாம்! சிறிது மொழிந்தனம். சிவசிவா அபராதஞ் க்ஷமித்தல் வேண்டுமெனத் தரிசிப்பவர்கள் சாரூபமடைவர். இதனருகே அநேக லிங்கங்கள், தேவர்கள், அசுரர்கள், முனிவர்கள், அரசர்கள் சிவாபராதத்திற்காகத் தாபித்துப் பூசித்ததுண்டு. அதிலநேகங் கங்கையின் மூழ்கிப் போனதுபோக விருப்பவையிற் சில மொழிவோம். அதன் பெருமை யுரைப்பதரிது. தக்க யாகத்துக்குச் சென்ற தேவர்கள் பூசித்தது இந்திரலிங்க முதலியன; திருமால் பூசித்தது வைகுண்டேசுவரர்; சகரர் பூசித்தது ஸ்ரீகண்டேச்சுரம்; சூரன் முதலியோர் பூசித்தது மாயூர லிங்கம், குக்குட லிங்கம், வாரண லிங்கம், ஜிம்ம லிங்கம், அசேச லிங்கம், மகேச லிங்க முதலியன. கௌரி, லக்ஷ்மி, சரஸ்வதி, சித்திரகேது, ராம, லக்ஷ்மண, பரத சத்துருக்க, சீதா வைப்பிரசித்து, வான்மீகர், பாண்டு மைந்தர்கள் முதலி



யோரால் அவ்வப் பெயருள்ள லிங்கங்களும், சுரபண்டீச்சுர முதலிய காரண லிங்கம் பலவுள. அஃதிருப்பினு மில்லாதிருப்பினும் அவைகளை யுத்தேசித்துப் பூசித்தவர்களடையும் பலனுக் களவில்லை. எவனொருவன் கர்மியானுலுங்கூட அவன் மோக்ஷமடைவன். இதிலுரைக்கும் பலன்களை யாவனொருவன் பொய்யெனச் சந்தேகிக்கின்றானோ அவனுக்குக் காசியிலிருக்க, யிறக்க கிடையாது. வெளித்தேசத்திற்போ யிறந்து நரகமடைவன். இஃது சத்தியமென முக்காலு முரைத்தருளினர். இஃதுணர்ந்த தபோதனர்கள் மீட்டும் வணங்கி இம்மான்மிய மொருவரா லொருவர்க்குச் சாற்றப்பட்ட சனற்குமார ருஷி, வாமதேவ ருஷி, சந்திரவந்த அரசன், நாதசர்மா, அனவ்தியா இவர்கள் வரலாறும், காசி மான்மியங் கேதார தல மகிமை யிவைகளைத் தெளிவாயுரைத்தருளல் வேண்டுமெனப் பிரார்த்திக்கச் சூதமக ருஷி சொல்லத்தொடங்கினர்.

## 23-வது அத்தியாயம்.

### சனற்குமார ருஷி சரித்திரம்.

பிரமன் றனது சிருஷ்டித் தொழிலுக் குதவியாகச் சிலரை யநுக்கிரகிக்கவேண்டுமென பன்னீராயிர மாண்டு சிவலோகநாதனை நோக்கித் தவஞ்செய்ததின்மேற் கிருபை கூர்ந்து, விநாயகர் சனகராயும், வீரபத்திரர் சனந்தனராயும், நந்தி யெம்பெருமான் சனாதனராயும், சண்முகர் சனற்குமாரராயும், மாகாளர் சனச்சுயாசராயும் போய்ப் பிரமனுக் குதவிபுரியும்படி யுத்தரவு கொடுக்க, இவ்வைவரும் ஐந்து வயதுடையோர்களாய்ப் பிரமன்முன் சென்று நின்றனர். அஃதுணர்ந்த பிரம னிவர்களுக்குச் சிருஷ்டி சம்பந்தமான பலவித வுபாயங்கள் கூறியு மவர்கள் அந்தச் சிந்தையற்று மௌனமாக விருப்பதறிந்த பிரமனும் சோர்ந்து நின்றனன். இவ்வைவரும் வெளியேறி, விஷ்ணுவைப் பார்க்

குங் கருத்துடையோராய் வைகுண்டத்திற்குச் செல்லுங்
கால் அங்கு துவாரபாலகரான ஜெய விஜய ரென்பவர்கள்
பூர்வ விதிப்படி யிவர்களை யுட்செல்லக்கூடாதென மறுத்
தமை கண்ட சனற்குமார ருஷி எம்மைத் தடுத்த நீவிரிரு
ஜன்ம மசுரராகுவீரென்றனர். அது தெரிந்த திருமால்
அர்க்கிய பாத்தியத்தோடு வந்து பாதப் பிரக்ஷாளனஞ்
செய்து வந்தித்து, இவர்களுக்குச் சாபம் நிவிர்த்திக்கவேண்
டுமென்றனர். அதற்கு நீர் பரமசிவனிடந் துவார பாலகர்
அநுக்கிரகிக்க வேண்டுமெனப் பிரார்த்தித்தமைக்காக சிவ
கணங்களான விவர்களை வைகுண்டத்திற் சேருகவென் றுத்
தாரமருளியது கேட்டு, இவர்கள் பலவிதமாகத் தோத்த
ரித்து நாங்கள் நீங்கிய கைலையை அடைதுவதென்றென்று
வருந்துங்காற், சந்திரசேகர னீவிர் வைகுண்டமடைந்து
துவார பாலகரா யிருக்கும்பொழுது சனற்குமார் முதலி
யோர்க்கு வருவதைத் தடுத்தமைக்காக, அவர் விதித்தபடி
இரண்டு ஜன்ம மிராக்ஷதராகப் பிறப்பீர். உங்கண்மீது
வைத்த கருணையால் விஷ்ணுவே வந்து உங்களைச் சம்மரிப்
பர். பின்பு சிவகணங்களாகுவீரென்ற திருவாக்குப்படி முடிந்
தது. நானுஞ் செய்ததில்லை என்றுரைத்துச் சென்றனர்.
அந்தப்படி யவர்களிரணியாக்கன் இரணியகசிபாகப் பிறந்
தும் விஷ்ணு நரசிம்மமாய்த் தோன்றிச் சம்மரித்து மிரா
வண கும்பகர்ணனாகப் பிறந்தவர்களை அவரிராமனாகப் பிறந்து
சம்மரித்துஞ் ஜயவிஜயர்கள் திருக்கைலை யடைந்தனர். அச்
சனற்குமார ருஷி சிவஞானச் செல்வராயிருந்து அநேக
பக்தர்களுக்கு முத்தியளிக்கும்படி வேண்டிய உதவிபுரிந்து
திருக்கைலையி லிருக்கின்றனர்.

---

## 24-வது அத்தியாயம்.

---

## வாமதேவ ருஷி சரித்திரம்.

மகாமேருச் சாரலிலுள்ள உத்தியா வனத்திற் பரமசிவ
னுந் தேவியாரும் வெகு ஆநந்தத்துடனோர் விருக்ஷத்தடியி



லிருக்குங்கா லுமாதேவியார் வணங்கி யும்மோடு பலகால
மிருக்கினு முமது அந்தரங்கத்துவம் யானறிய வேதுவில்லை.
அதைக் கட்டளையிட்டருளல் வேண்டுமென்றனர். அது
செவியுற்ற பரமசிவம், பூவு மணமும், மணியு மோசையும்
போல நம்முடனெப்போது மிருப்பினும் நமது அந்தரங்க
மறிவதரிதென உத்தாவானதின்மேல், அந்தத் தத்துவஞான
மெனக் குபதேசிக்க வேண்டுமெனப் பிரார்த்தித்த அம்மைக்
காக அங்கிருக்குஞ் சிவகண முதலியோரை வெளியே ஏகக்
கட்டளையிட்டு இமயச் செல்விக்குத் தத்துவோபதேசஞ்
செய்தனர். அவ்வுபதேசங் கேட்டு அம்மரத்தின்மீது வைகிய
பாராவதம் (புறா) தன்னை மறந்து தற்போதமிழந்து சிவபி
ரான்முன் வீழ்ந்தது. அஃது கண்ணுற்றதிசயித்த தேவியார்
பிரானை வணங்கி, இதன் வர்த்தமானமேதெனக் கேட்கச்
சிவனாதன் கருணைவைத்து முன் ஜன்மத்திலோர் பிராம
ணன் பண்டை டவஞ்செய்து முத்தி விரும்பினனு மவன்
காலங் கூடிவிட்டமையா லிச்சன்மமெடுத்து, முன் தவோ
பலத்தா லிங்கிருந்து கேட்டு ஞானமடைய நேர்ந்ததெனத்
திருவாய் மலர்ந்ததுந்தவிர புறாவை நோக்கி, நீ பூர்வ வாசனை
நீங்கித் தன்னையறிந்த முனிவனாக ஈஸ்வரிக் குபதேசிக்குங்
காற் கேட்டமையால் வாமதேவனெனப் பெயராகுகவென்
றருளியபடியுள்ள வாமதேவ ருஷி அநேககால மறந்துஞ்
சிவனையன்றி யுளதென்று னினையாராய் அநேகர்களுக்
குத் தத்துவஞான முபதேசித்திருந்து மாசிமாத சோமவா
ரம் பவுருணையில் காசி கேதார கௌரி தீர்த்தத்து ஸ்நாநஞ்செய்யுங்
காற் சகல தேவர்கள் புடைசூழ உமாமகேஸ்வரா வெழுந்
தருளிய கண்காட்சியைப் பெற்ற வாமதேவ ருஷியை வேண்
டுவதியாதெனத் திருவாய் மலர்ந்தருள, இச்சுபதினத்து இத்
தடத்து மூழ்குவோருக்குச் சதுர்வித பலப்பிராப்த மடை
தல் வேண்டுமெனக் கேட்டுக்கொண்டபடி வரமருளியதால்
அம்மாசிமாத பூரணமி மகா நக்ஷத்திரத்தி லித்தடத்து ஸ்நா
னஞ் செய்வது விசேஷமாகியதுந் தவிர, வாமதேவ ருஷி
யைத் தழுவி இப்பேரொப்கார முனக்கே தக்கதெனப் புகழ்ந்
தருளினர்.

## 25-வது அத்தியாயம்.

### சந்திரவந்தன் சரித்திரம்.

ஓர் பிராமணன் நேபாளத்திற் பசுபதீசுவரர் கோவிலருகிலிருந்து தவஞ்செய்யச் சிவநாதன் பிரசன்னராய் உனது தவத்தை யுவந்தனம், இனிமுத லுனக்குக் கற்கி முனியெனப் பெயராகுகவென வரமருளினர். அப்பிராமணன் தவஞ்செய்த காலத்து அவருக்கு பல உதவிபுரிந்திருந்த ஓர் வேடன், காலங்கூடி யிறக்கக்கண்ட கற்கிமுனி அவன்மீதுள்ள கருணையா லவனை நீ அரசனாகப் பிறந்து தவஞ்செய்து ஞானமடைவாயென்ற திருவாக்குப்படி சிவபக்தராது தொண்டினின்றதற்காக சந்திரவந்தனெனும் அரசனாகப் பிறந்தும் விரக்தியுற்றுத் தவம் புரிந்து ஞானமடைந்திருந்து ஆவணி மாசப் பூரணையிற் கௌரி தீர்த்தத்து மூழ்கிக் கரையேறுங்கால் ருஷபாரூடராய்ச் சிவபெருமான் பிரம விஷ்ணு முதலியோர் புடைசூழ நெருங்கித் தரிசனந் தந்தருளி, நீ இத்தடத்து மூழ்கி யிவ்விலிங்கமும் பூசித்தமையா னமதுலகிற் சின்னாளிருந்து சிவசாயுஜ்ய மடைகுகவென் றருளிச்செய்தனர்.

## 26-வது அத்தியாயம்.

### நாதசருமா, அனவ்தியா சரித்திரம்.

மகாமேருச் சாரலில் மானசசரசென்னுந் தடாகக் கரையிலிருக்கு மோர் விருக்ஷத்தின்மேற் பலநாளிரண்டு அன்னப்பட்சிக ளாறுகாலமுங் கமலமலர் பறித்து அதிலுள்ள இதழ்களை யம்மரத் தருகிருக்குங் குபேரன் பூசித்த சிவலிங்கத்தின்மீது போட்டுவிட்டு அதன் பொருட்டை யருந்திவருவது வழக்கமாகவிருந்தது. ஓர் தினம் அம்மையும் அப்பனுமாக அவ்விருக்ஷத்தடியி லாநந்தமாக விருக்குங்கா லுமை



யார் வணங்கி இவ்விலிங்கத்தின்மீது இத்தியாதி புஷ்பஞ் சாற்றியதாரெனக் கேட்க, உயரவிருக்கின்ற பட்சிகள் போட்டனவென் றருளிச்செய்யக் கேட்டு ஆநந்தித்து, இப்பட்சிகள் மிகவு மற்புதமாகப் பூசிக்க யாது காரணமென்ற தேவியாருக்கு, ஸ்ரீ பருப்பதத்தி லோர் சிவயோகி, நிஷ்டாபரராயும் பூசாக்கிராந்தராயு மிருக்க அவரிடமோர் உஷ்ணகாலத்திரண்டு கவரிமான் வந்து நின்றன. அது கண்ணுற்ற சிவயோகியர் அவற்றைச் சலாசக்ஷணை செய்துவருங்கால், அம்மான்க ளவரது பூஜை தரிசித்தும், நிர்மாலியங்களை யருந்தியு மிருப்புழி, யோர்தினம் மான் கூட்டங்கள் காட்டிற் செல்வதறிந்து இவைகளுஞ் சென்றன. இதையறியாத சிவயோகியர் கவலைகொண்டிருந்தனர். அம்மான்கள் காலங்கூடி யிறந்துஞ் சிவயோகி கவலைகொண்டமையா லவை வேடர்குலத் தம்பதிகளாகப் பிறந்திறந்தபின் னிவ்வன்னங்களாயின. இவை யதற்கு முந்திய ஜன்மத்திற் பிராமண தம்பதிகளாகவிருந்து அநேக பாவங்கள் செய்து மோர் சிவயோகியைக் கண்டு எங்களை ரக்ஷிக்கவேண்டுமெனப் பிரார்த்தித்தமைக்காக அவரு மாசீர்வதித்தனர். பாவ புண்ணிய மேற்றக்குறைச்சலாக விருப்பினு மெமது பக்தர்கள் கொடுத்த வாக்குப்படி நம்மைத் தரிசிக்கவுஞ் சிவலோகங் கிடைக்கவும் வழியாகின்றதென் றருளிச்செய்யக் கேட்ட பார்பதி, யுமது பக்தர்கள் மகிமையை யாரா லுரைக்கக்கூடும். சாகரங்களை யுண்டும் பிரமாண மாயசமனஞ் செய்யவும், விந்த பருப்பதத்தை பூமி மட்டமாக்கவும்; கடலில் மலையைப் போட்டாலும் அது மிதக்கும்படி செய்யவுஞ் சிருஷ்டி திதி தொழில்களைத் தாமே நடத்தவும் வல்லவர்களல்லவா. அவர்களுங் கடுமைத்தொழில் புரிந்தவர்க்கு கிருபை புரிதல லவெனப் பிரார்த்தித்தனர். சிவநின்னாலேய மருந்தினோர் பாவங்கொத்தலே நெய்யெனப் பறக்கும், சிவநிந்தை யின்மையோ மருந்தல் பாவமாய் முடியும். சிவார்ப்பிதஞ் செய்யாது ஏதுமருந்தல் கூடாதெனப் பசுபதியா ரருளிச்செய்தனர்.

## 27-வது அத்தியாயம்.

### அன்னங்களுக்கு வரமருளியது.

உமாதேவியாரிவ்வித முரைத்தல் கேட்ட சிவபிரான் மகிழ்ந்து அவ்வன்னங்களைப் பார்த்து நீங்கள் பிராமணத் தம்பதிகளாகப் பிறந்து நம்மீது பக்தி பெருகி உலகிலுள்ள சிவலிங்கங்களைத் தரிசித்திருந்தபின் னம்முருவமு முமையுருவமும் பெறுக வென்றுத்தரவு கொடுத்தபடி அன்னங்கள் காலஞ்சென்றிறந்து, பிராமணத் தம்பதிகளாகப் பிறந்து மகாமேருமுதற் கன்னியாகுமரி வரையுள்ள சிவஸ்தலங்களியாவற்றுள்ளுந் தனித்தனிச் சென்று தீர்த்தமாடித் தரிசித்துப் பூசித்து ஒவ்வொரு நதிகளினு மூழ்கி மகாலிங்கங்களைப் பூசித்துத் தங்கள் பெயரால் அநேக தலங்களிற் சிவலிங்க பிரதிஷ்டை செய்து பன்னாளும் யாத்திரையில் வருந்தியிருப்பவர்களுக்கு சிவபிரானருளிய திருவாக்குப்படி சனற்குமாரருஷி, வாமதேவ ருஷிகளனுக்கிரகம்பெற்று சித்திரை மாசம் கிருஷ்ண சதுர்த்தசியிற் காசி ஆதிமணி கர்ணிகை ஸ்நானமுங் கேதாரீசுவரர் பூசையுஞ் செய்யுங்காற் சிவபெருமான் கடாக்ஷித்து உனக்கு வேண்டும் வரமியாதெனத் திருவாய் மலர்ந்தது கேட்டுப் பலவிதமாக நமஸ்கரித்து இச்சைத்திர கிருஷ்ண சதுர்த்தசி விக்கடத்து மூழ்கி யிவ்விலிங்கம் பூசித்தோர்க்குச் சதுர்வித பலப்பிராப்தமு மருளல் வேண்டுமெனக் கேட்டுக்கொண்டபடி வரமருளி நாதசர்மா, அனவ்தியா இருவருக்கு நீங்கள் ஆத்மஞானத்தோடு நம்முருப் பெற்றிருந்து பின் சாயுச்சிய பதவி பெறுவீரென்ற திருவாக்குப் பெற்றவரென்றுங் கூறியதுகேட்ட மகாருஷிகளொருவரையொருவர் மகிழ்ந்து தழுவி இவர்கள் ஜன்மமே ஜன்மமெனச் சிவபிரானைப் புகழ்ந்து பாடினர்.



## 28-வது அத்தியாயம்.

### காசித்தல மகிமை.

பரமசிவ மெழுந்தருளிய தலங்களுக்குச் சங்கியையில்லை. அவையாவு மொன்றுபோலில்லை. சில இம்மையிற் புசிப்பும், சில சந்தானமுஞ், சில சுவர்க்கபோகமுஞ், சில சாலோகமுஞ், சில சாமீபமுஞ், சில சாரூபமுஞ், சில சாயுச்சியமுஞ், சில பிரமஞானமுஞ், சில ஈசுரபக்தி முதலிய பலவிதங் கொடுக்கின்றன. காசியில் மரணத்தாலியாவருக்கும் வைரவ தண்டனையோடு பரம பதவி கிடைக்கும். அதினுங் காசி கேதாரத் தலத்தில் வைரவ ஆக்கினையுமின்றி ஈஸ்வர பதவி கிடைக்கும். இதற்கு யாதொரு சந்தேகமுமில்லை. அன்றியும் மிகவும் சந்தோஷமுள்ள தலமாதலால் ஆநந்தவனமாயது. இறந்தோர்க்கு உடனே முத்தி யருளுவதால் அவிமுக்த க்ஷேத்திரம். வாரணை அசிமத்தியிலிருப்பதால் வாரணாசி. இறந்தோர்க்கு மீட்டுஞ் ஜன்மமில்லாததால் மகாஸ்மசானம். விஷ்ணு, பிரம, ருத்திரனென்னு மூவருள்ள சூலத்தின்மீது விராட் புருஷனுக்குமே லித்தலத்தை வைத்துக் காப்பதால் விக்கிரமசிகேதிரிகண்டகவிராசிதம் விஷ்ணு பவுத்தாவதாரஞ் செய்த தலம். இக்கௌரி தீர்த்தமியாவத்து தீர்த்தங்களுக்கு முன்னமுதித்துக் கௌரி முகம்போலிருப்பதாற் கௌரிமுகே ஆதிமணி கர்ணிகையாயது. இன்னும் சில முப்பதாவது அத்தியாயத்தினு முரைப்போமென்றருளியது கேட்ட ருஷிகளியாவருங் காசித்தலத்திலேயிருக்கவேண்டுமெனத் தீர்மானித்தனர்.

## 29-வது அத்தியாயம்.

### ஸ்ரீ பத்ரிகேதார மான்மியம்.

இமவானெனுமலையரசன் மேனையெனும் பத்தினியோடும் பரமசிவனை நோக்கிப் பன்னாட் டவஞ்செய் திருந்தற்குச்

சிவபிரான் காட்சிகொடுத்து உனது அபேக்ஷை யாதென வினவ, அரசன் பன்முறை வணங்கி எல்லாப் பருவதங்களைப் பார்க்கினுஞ் சிரேஷ்டத்வ முதலிய பல வரங் கட்டளையிட்டருளல் வேண்டுமென்றனன். அதுகேட்ட முதல்வ னுனக்கு நமது தேவியே உன்னிடம் வளர்ந்து, நாம் வந்து பாணிக்கிரகணஞ் செய்வோம். இப்பருப்பதத்து திருமாலும் வந்து தவஞ்செய்குவர். அது பதரிவனமாதலாற் பதரியாச்சிரமமென்றாயது. "ஆதாரமில்லார்க்கு கேதாரமே கதி" என்றல்போல, நாமிங்கு வந்து சதாகாலமு நமது மூர்த்தங்களினொன்றியிருப்பதினாலதுவும் விசேஷமே. இம்மலை வருவோர்க்கு மகாப் பிரஸ்தான யாத்திரிகரென்று பெயராகுக. இத்தலம் பனி, குளிர் வெப்பம் முதலியவாற்றலாறு மாதம் கஷ்டமாயிருக்குமென்றும் நமது பக்தர்கள் கஷ்டமின்றிக் கைலையை யடையும்படி காசியில் வைரவருக்குக்கூட அதிகாரமில்லாமலும் யமகிங்கரர்கள் சிந்தையினுங் காசியென்றவர்களிடம் பிரவேசிக்க நினைக்கக்கூடா தென்னும்படியாயுள்ள ஓரிடத்தின் மகாலிங்க சொரூபமாக அங்குமிங்கு மிருப்போம். நீயும் பார்பதி கங்கையைப் புத்திரிகளாகப் பெற்றதா லுனக்கு சிரேஷ்டத்வ முண்டாகின்றது. அன்றியுங் காசி கேதார தலத்திற்கு தரிசித்தமாத்திரத்திலே முத்தி கொடுக்கவு நினைத்தனம். தேவர்கள் வேண்டுகோளுக்காக மரணாந்த முத்தியடைவரென்றனமென்று மருளிச்செய்தனர். அதனாற் பதரிகேதாரத்தலம் விசேடமாகியது.

---

## 30-வது அத்தியாயம்.

---

### சிவபிரானருளிய பல கதைகள்.

சிவபெருமான் அநேக பிரளயங்களி னடந்த திருமாலும் அறியாத தேவியாருக் கருளிச்செய்த கதைகளை எங்களுக்குக் கட்டளையிட்டருளவேண்டுமென்று மீட்டும் பிரார்த்



திக்க சூதமகாமுனிவர் கூறலுற்றனர், அக்கதைகள் க்ஷேமகவி சுலோக ரூபமாய்ப் பாடியது கண்ட வியாசர் இவற்றைப் படித்தவர்கள் பிரமஞானமடைவர். இதனால் மற்றப் புராணங்கள் மகிமை கெட்டுவிடுமெனக் கங்கையில் வாரிவிட்டனர். அம்மகிமை கங்கைவழி யெதிரேறிச் சிவபிரானிடஞ் சேர்ந்தருளியதென் றுரைக்கக் கேட்ட ருஷிகள் வணங்கி, பிரமஞானமடையும் வழியாயுள்ளவற்றை அடியோங்கள் பிழைக்கும்படி சில உத்தரவாகவேண்டுமெனக் கேட்டுக்கொண்டதற் குரைக்கலுற்றனர்.

1. காசி மற்ற உலகம்போல ஆதிக்ஷேஷன் முதலியோர் சுமையிலில்லை. சிவபிரான்றமது திரிசூல முனையில் வைத்துக் காத்துக் கற்ப முடிவிற் சூலத்தை யுயர்த்தித் திருக்கரத்தில் வைத்திருந்து பிரளய முடிந்தபின் கீழே வைத்துங் காக்கின்றனர், அதனால் அநேகர் காசியில் மரணத்தால் முத்தியடைகின்றனர்.

2. கசாரணிய தேசத்திற் சுச்சிவாவென்னும் பிராமணனும் பத்தினியும் பிள்ளையுமாகக் காசி கேதாரத்திற் றிரிகாலமும் பூசித்திருந்தும் இரவிற் சத்துவகுணப் புசிப்பான பால், சர்க்கரை சேர்ந்த அமுதருந்தி யொருவருஷமிருந்து தமது தேசம் போய்க் காலங்கூடி யிறந்தனர். பின்பு அவர்கள் தக்ஷப்பிரமாவு மதிதியுமாகத் தம்பதிகளாகவும் பிள்ளை துவஷ்டாவாகவும் பிறந்து அநேககால மின்பமனுபவித்து இறுதியிற் கைலாயமடைந்தனர்.

3. கோசல தேசத்திற் சுதாவென்னு மரசனும், பத்தினியும் பிள்ளையும் காசி கேதாரத்தில் வந்து பக்ஷப்பிரதோஷ விரதமனுஷ்டித்து இரவிற் பிராமண போஜன மருத்துவித்தருந்தி யொருவருஷங் கழித்துத் தேசம்போ யிறந்து பின் கஸ்யபமுனியும், சித்ருபவதியும் விபசுதனாகவும் பிறந்து பூமியிலுள்ள சகல போகங்களையு மனுபவித்து இறுதியிற் பிரமஞானமடைந்து கைலாயஞ் சேர்ந்தனர்.

4. பாண்டி தேசத்திலுள்ள சுதனென்ற வணிகன் தம்பதி பிள்ளையோடு காசி கேதாரத்தில் வந்து மாச சிவராத்திரி முதலிய விரதமிருந்து இரண்டு வருஷங் கழிந்து தன் தேசம்போ யிறந்து சந்திரன், ரோகணி புதனுமாக அம்மூவரும் பிறந்து சகல வைபவங்களு மனுபவித்துப் பின்பு கைலாசபதவி யடைந்தனர்.

5. காசுமீர் தேசத்தில் ஸ்ரீதாசென்பவனுடைய புத்திரர்களைவரும் காசி கேதாரத்தில் வந்து சனிப்பிரதோஷ முதலிய பல விரதங்களிருந்து ஒரு வருஷஞ் சென்று தமது தேசம் போய்க் காலங்கூடி யிறந்தபின் னவர்கள் யமன், சநி, சர்வக்ஞமனு, அசுவினி தேவர்களிருவராகவும் பிறந்து சகல சம்பத்துமடைந்துங் காலங்கூடிச் சிவபதமடைந்தனர்.

6. குருக்ஷேத்திரம் சமையபுரத்திலுள்ள றுற்கடனெனும் நீசன் வியாபாரத்துக்குச்சென்ற துலுக்கருக்குச் சுமைகொண்டுவந்தவனுக்கு வியாதி வந்ததினால் அந்நீசனைக் காசியில் விடுத்துச் சென்றனர். அவன் கேதார அந்தர்க்கிரக வெளியே ஆறுமாச மிருந்தவன் மாகச் சிவராத்திரி முதலிய விரதமிருந்து ஈஸ்பர நாமஞ் செபித்துப் போகின்றவர்களையெல்லாம் பிரசாதங் கேழ்க்கவுமவர்களெரிச்சலோடு அவன் மீது விபூதி வில்வங்களைப் போட்டுப் போவார்கள். அதனாலவன் வியாதி தீர்ந்து தேசம்போ யிறந்தனன். விரத தினங்களிற் பசித்து வருந்தியும் வெளியேபோ யாசித்தருந்த நடக்கச் சக்தியற்றும் பட்டினியிருந்த புண்ணியத்தா லவன் சிம்மியெனு மசுரனுக்குப் பிள்ளையாகப் பிறந்து தேவர்கள் சம்பாஷணை செய்திருப்பவன் தேவாமிர்தம் திருமால் படைத்ததை அவசரமா யருந்தியது பார்த்து அகப்பையாற் றுண்டாக வெட்டிவிட அவன் ராகு கேதுக்களாயிருந்து சகல சம்பிரமங்களு மனுபவித்துப் பின் கைலையை யடைந்தனன்.

7. கன்னட தேசத்துப் பிராமணி கலாவதியும், க்ஷத்திரிய ஸ்திரி இராவணியும், கூர்ச்சர தேசத்துச் செட்டிய



ஸ்திரீ சுமதியும், விதர்ப்ப தேசத்துப் புண்ணியவதியெனுஞ் சூத்திர ஸ்திரீயுந் தனித்தனி யாத்திரைசெய்து காசிக்கு வந்து யாத்திரைக் குறை முடித்துக் கேதாரீசுர தெரிசனந் தானதருமமுதலிய செய்தும் சோமவாரம் பிறதோஷம், மாச சிவராத்திரி முதலிய விரதங்க ளனுட்டித்தும் பன்னிரண்டு வருஷமிருந்து தேசம்போய்க் காலங்கூடி யிறந்து அவர்கள் நால்வரு முறையே அன்னபூரணி, இலக்ஷ்மி, சரஸ்பதி, இந்திராணியாகப் பிறந்து சகல வைபவங்களு மனுபவித்துப் பின்பு கைலாயப்பதவி யடைந்தனர்.

8. காஞ்சீபுரத்துள்ள தர்மசன்மாவென்ற பிராமணப் பிரம்மசாரி காசிக்கு வந்து கேதாரீஸ்பரருக்குப் பலவிதமாகத் திருத்தொண்டு செய்து மூன்று வருஷமிருந்து தேசம் போயிறக்க அவன் கோரிக்கைப்படி களங்கரகிதமான சிந்தையுள்ள துர்வாச மகாருஷியாகப் பிறந்து கைலாசபதி கிருபை மிகுந்துள்ளவரானார்.

9. நாரத ரோர்காலத்துத் தங்களுக்கு மேலான கற்புள்ள ஸ்திரீகளில்லையென் றெண்ணிய சரஸ்வதி, லட்சுமி பார்பதி மூவரிடத்திலுந் தனித்தனிக் கொண்டுபோ யுருக்குக் கடலையை வருத்துத்தர விரும்பினர். அவர்களிது யாராலாகுமெனச் சொல்லி மறுத்தனர். அதன்பின் காசி கேதாரீஸ்பர தெரிசனமும், பூசையுங், கௌரிகுண்ட ஸ்நானமும் மறவாதவரான அத்திரி ருஷி பத்தினி யனசூயையிடங் கொண்டுபோய் அக்கடலையைக் கொடுக்க அவர் கேதாரநாதனைப் பிரார்த்தித்து வறுத்துக்கொடுத்தனர். அதைக் கொண்டுபோய் முன்சொன்னதென்ற வாணி, ரமா, உமை என்னு மூவரிடத்திலுங் கொடுத்து அனசூயை கற்பையுஞ் சிவபக்தியையும் வியந்தனர். அது கேட்ட அம்மூவருந் தங்கள் பதிகளான அயன், மால், திரியம்பகனுக்குச் சொல்லி யிவ்வனசூயை கற்பைக் குலைத்தருள பிரார்த்தித்தனர். அம்மூவரும் அவளிடம் வந்து நிர்வாண பிச்சை கேட்டனர். உடனே திடுக்கிட்டுத் தன் பதியான அத்திரி ருஷியையுந்

கேதாரபதியையும் அனுமதி கேட்டு அம்மூவரையுங் குழந்தைகளாக்கி நிர்மானப் பிச்சை கொண்டுபோயினள். அவர்களேற்குந் தகுதியற்றவர்களானதா லவர்களை யெடுத்துத் தொட்டிலிலிட்டனள். கற்பழிக்கச் சென்ற கணவர்களைப்பார்க்க! வெகு துடி துடிப்போடும் ஓடிவந்த அம்மூவருங் கணவர்களைக் காணாது மயங்கி யுள்ளவாறு தெரிந்து அவளை வணங்கி மங்கிலியப்பிச்சை கொடுக்கவேண்டுமென்றும் பிரார்த்தித்தற்கிரங்கி யிந்த மூன்று குழந்தைகளி லுங்கள் கணவரின்னாரென் றெடுத்துவாருங்களென்றனள். ஒன்றுபோலிருப்பதா லவர்களா லினந்தெரிய மார்க்கமின்றித் திரும்பவு மவளை வந்தனஞ்செய்து கேட்டுக்கொண்டபடி, யவளே வந்து அவரவர்கள் பதியைக் கொடுக்க அடைந்ததுந் தவிர, விது கேதாரீஸ்பரர் கிருபையாற் செய்தனளென்று மகிழ்ந்தனர்.

10. ஸ்ரீ சைலபருப்பதத்தில் வசித்த ஓர் பிராமணனும் பத்தினியுங் காசி கேதாரத்திலிருந்து ஆறு வருஷம் கிருத்திகை சம்பாச்சஷ்டி முதலிய பல விரதங்களனுஷ்டித்து அதிதிக்கு அன்னமருத்தியுமிருந்து தேசம்போய்க் காலங்கூடி யிறந்து அகஸ்தியரு முலோபாமுத்திரையுமாகப் பிறந்து அரிதான தவஞ்செய்ததாற் பரமசிவம் திருவாக்கால் அவனைமை யொப்பானென்று மவளுமையொப்பாளென்றுங் கட்டளையிட்டருளப் பெற்றவர்களாயினர்.

11. விந்தபருப்பதத்திலுள்ள வோர் வேடன் துற்னையனென்பவன் வழிப்போக்கர்களை யடித்து பறித்துத் தின்று திரிபவன் காசி யாத்திரை செல்லும் ஓர் பிராமணனை யடிக்கும்படி கையோங்கக்கண்ட பிராமணன் விசுவேசா, கேதாரீசா, துண்டிங்கணபதி என்றோலமிடவும், வேடன் கையோங்கியபடியே நின்றுவிட்டது. இந்தப் பிராமணனுனோர் தெதென்றெண்ணிய வேடன் நமஸ்கரித்தது பார்த்து பிராமணன் ஈஸ்பரனைப் பிரார்த்தித்தவுடன் வேடன் கை நேருக்க வந்தது கண்டு வேடன் பிராமணன் காலில் விழுந்து அந்த மந்திரத்தை எனக்குபதேசிக்கவேண்டுமென்று பிரார்த்தித்



தனன். நீயுங் கூடவந்தா லந்த ஈஸ்பரர் கிருபை யுனக்குமுண்டாகத் தடையில்லையென்ற பிராமணனைத் தொடர்ந்து வேடன் வந்து காசி கேதார கௌரிதீர்த்த ஸ்நானமும் கேதாரீஸ்பர பூசை முதலியவுஞ்செய் திரண்டு வருஷ மியாசித்தருந்தித் தேசம்போ யிறந்து அவன் பிருதுச்சக்கரவர்த்தி பிள்ளை சார்வபோகனாகப் பிறந்து சகல சம்பிரமங்களு மனுபவித்துக் காலஞ்சென்றபின் சூரியனாகப் பிறந்து சகல சம்பத்து மனுபவித்து இறுதியிற் சிவபதமடைந்தனன்.

காசியிலிறந்தோர்கள் மீட்டுஞ் ஜன்மமெடுக்கமாட்டார்கள். ஆதலால் வெளியேபோ யிறந்தவர்களிற் சில மொழிந்தனம். தெய்வலோகத்துள்ள நாரதர், தும்புரு, விஸ்வாவசு, சுக்கிரன், சநி, செவ்வாய் முதலியோரும் காசியதிகாரிகளான வைரவர்கள், தண்டபாணி, விந்தியாதவர் முதலிய பல்லோருங் கௌரிகுண்டு ஸ்நானங் கேதாரீஸ்பர பூசைசெய்து பெற்றரோ தவ்ர வேறில்லை. இதுபோலப் பிரதி கற்பங்களிலுமிவ்விதமாகப் பூசை செய்து கேதாரலிங்கம், ஓங்காரலிங்க முதலிய பூசாப்பலத்தால் அநேகர் தெய்வ பதவிபெற்று வாழ்ந்து ஞானேதயமாய்க் கைலாயபத மடைந்தனர். மற்றுந் தேவர், நரகர், யக்ஷர், கந்தருவர், பிரமா, விஷ்ணு, ருத்திரன் முதலியவர்கள் காசி கேதாரீஸ்வர பூசை, அதிமணிகர்ணிகை ஸ்நான பலத்தாலேயே சிவாபராத முதலிய நீங்கி சிவலோக பதவியடைந்தனர்.

## 31-வது அத்தியாயம்.

## பார்பதி தேவி வரலாறு.

இந்தக் கதைகளைக் கேட்ட ருஷிகள் எழுந்து வணங்கி அளவில்லாத மகிழ்ச்சியுற்றனம். பார்பதி தேவி முன் தக்கனுடைய மகளாகவிருந்தனளெனப் பல புராணங்களில் கூறியிருக்க, இப்போது இமவான் மகளென்றுரைத்த காரணமியாது? அதைக் கட்டளையிட்டருளவேண்டுமெனப் பிரார்த்

## ஸ்ரீகாசி கேதாரமான்மியம் கிடைக்குமிடங்கள்.

---

காசிவாசி

வி. குமாரசாமி தம்பிரான் அவர்கள்,

கன்னப்பசுவாமிமடம், கேதாரகட்டம்,

ஸ்ரீகாசி.

---

ஸ்ரீ அப்பாவுபிள்ளை அவர்கள்,

போஸ்ட்மாஸ்டர், விஜயநாராயணம்,

திருநெல்வேலி ஜில்லா.

---

Messrs.

**K. S. MUTHIAH & CO.,**

Silk Merchants,

BENARES CITY.

---

For best leather goods apply to:

**CHROME LEATHER WORKS,**

No. 1. MacLean Street,

MADRAS, E.

ஸ்ரீ காசி

# கெ. எஸ். முத்தையா அண்டு கம்பெனி.

## உருத்திராக்ஷங்களின் விலை.

108 மணிகள் கோர்த்த (ஜெபமாலை) உருத்திராக்ஷமாலை 1-க்கு அணா 6, 10, ரூபா. 1-0-0, 1-4-0, 1-8-0, 2-0-0, 2-4-0, 2-8-0, 2-12-0, 3-0-0 முதல் ரூபா 25 வரை.

---

5 முகம் 6 முகமுள்ள உருத்திராக்ஷ கண்டிகள் (கண்டி 1-க்கு 32 மணிகள் கோர்த்தது) கண்டி 1-க்கு விலை அணா 8, ரூபா 1-0-0, 1-8-0, 2-0-0 முதல் ரூபா 25 வரை.

---

7 முகமுள்ள உருத்திராக்ஷமணி, 32 மணி கோர்த்த கண்டி 1-க்கு ரூபா 10 முதல் ரூபா 30 வரை.

---

7, 8, 9, 10, 11, 12, 13 முகமுள்ள தனி மணிகள் மணியின் தன்மைக்குத் தக்கபடி விலை ரூபா 5 முதல் ரூபா 25 வரை.

---

கவுரிசங்கர்மணி 1-க்கு ரூபா 2 முதல் ரூபா 20 வரை.